தமிழ்ப் பொழில்

Vol 62. No. 4.

Feb. Mar. 1989

JL
O31,M21, N27
N89.62
127044

3031

# தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

25 செப் 1969

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

துணர் : 62 மலர் 11

127044
சென்னை-600 008

# தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2019

துணர்: 62 விபவ — மாசி மலர்: 11

பிப்ரவரி — மார்ச் — 1989

உள்ளுறை

பக்கம்

1. எழுத்துக்கள் ... 478
   ச. அ. இரெ. பரதராஜ்
2. பழந்தமிழிலக்கியத்தில் சட்டமும் நீதிமன்றமும் ... 483
   (சென்ற இதழ் தொடர்ச்சி)
   காவேரி ஆவுடையப்பன், எம். ஏ., எம். ஃபில்,
3. அண்ணாவின் செவ்வாழையும் சங்கம் புழாவின் வாழைக்குலையும் .... 486
   இராம. மணிகண்டன்
4. இன்றைய சட்ட நுணுக்கங்கள் வழி தடுத்தாட் கொண்ட புராணம் .... 491
   காவேரி ஆவுடையப்பன், எம் ஏ, எம். ஃபில்
5. சி. வை. தமோதரம்பிள்ளை வாழ்வும் வாக்கும் .... 498
   டாக்டர் மா. இராசேந்திரன்
6. தமிழ்க் கவிதைகளில் பெண்கள் ... 501
   டாக்டர் மா. மீனாட்சிசுந்தரம்
7. புறம் காட்டும் ஆட்சி அறம் ... 510
   இரா. குருநாதன், எம். ஏ., எம்.ஃபில்
8. தூது நூல்களில் உலா .... 514
   முனைவர். தா. ஈசுவரபிள்ளை
9. மேலாண்மை பொன்னுச்சாமியின் மாடசாமிகள் .... 518
   — டாக்டர் இரா. சன்முகவேலன், எம். ஏ எம் ஃபில். பி. டி., பிஎச். டி;

பதிப்பாசிரியர்: பேராசிரியர் ச. பாலசுந்தரம்

## தமிழ்ப்பொழில் ஆசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர். கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, த. கோ. ப. கோவிந்தசாமி, பி. காம்.,
செயலாளர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, கலைமாச்செல்வர் எஸ்.டி.காசிராஜன் ஐ. ஏ. எஸ்.,
செயலாளர். தமிழ்வளர்ச்சிப் பண்பாட்டுத்துறை, சென்னை.

,, சிலம்பொலி சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி., பி எல் பிஎச்.டி,
இயக்குநர். தமிழ்வளர்ச்சித்துறை. சென்னை.

,, முனைவர்சி.பாலசுப்பிரமணியன், எம்.ஏ. எம்.லிட், பிஎச்டி
தமிழ் மொழித்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

,, முனைவர் தமிழண்ணல், எம். ஏ., பி. எச்டி.,
தமிழ்த்துறைத் தலைவர்.
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

,, முனைவர் மு. கோவிந்தராஜன்
இயக்குநர் தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம் சென்னை.

,, முனைவர் சோ. ந. கந்தசாமி, எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி
இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

,, முனைவர் மா. இராமலிங்கம்,
தமிழ்த்துறைத் தலைவர் பாரதிதாசன் பல்கலைக் கழகம்.

,, தமிழ்த்தொண்டர். கோ.முத்துப்பிள்ளை, B.A.,
சென்னை.

,, முனைவர், ஈரோடு தமிழன்பன்,
தமிழ்முதுகலைத்துறை, புதுக்கல்லூரி, சென்னை.

,, பேராசிரியர் பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர். தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர். செ. இராசு எம். ஏ.,
இணைப்பேராசிரியர், கல்வெட்டுத்துறை,
தமிழ்ப்பல்கலைக் கழகம்.

,, புலவர் ஆ. பாலன், எம்.ஏ., எம். ஃபில்
துணைமுதல்வர். த. உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர், உமாமகேசுவரா மேனிலைப்பள்ளி.

,, பா. மதிவாணன், எம்.ஏ., எம். ஃபில்.,
துணைப் பேராசிரியர், த. உ. கரந்தைக் கலைக் கல்லூரி.

# எழுத்துக்கள்

## (நன்னூல், இலக்கண விளக்கம்—ஓர் ஒப்பாய்வு)

ச. அ. இரெ. பரதராஜ்,
5/27, மேரிதெரு,
கன்னியாகுமரி.

நன்னூல், இலக்கண விளக்கம் ஆகிய இரு இலக்கண நூல்களும் எழுத்துக்கள் பற்றிக் கூறும் கருத்துக்களை ஒப்பிட்டாய்வு செய்து, இவை வேறுபடுமிடங்களை விவரிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

எழுத்தின் இலக்கணத்தை நன்னூல் (58), "மொழி முதற் காரணம் ஆம் அணுத் திரள் ஒலி எழுத்து" எனவும், இலக்கண விளக்கம் (3), "மொழிக்காரணமா நாதகாரியவொலி எழுத்து" எனவும் சுட்டுகின்றன. எழுத்துக்கள் பிறக்கக் காரணமான காற்றை நன்னூல் 'அணுத்திரள் ஒலி' எனவும் இலக்கண விளக்கம் 'நாதகாரிய ஒலி' எனவும் சுட்டுகின்றன.

பவணந்தி முனிவர் சமணர் ஆதலின் அநாதி காரணமாகிய மாயையை உடன்படாது, மொழி உண்டாவதற்கு முதற்காரணமாக அமைவது 'அணுத்திரள் ஒலி' என்று சுட்டியுள்ளார். வைத்தியநாத தேசிகர் சைவர் ஆதலின், அநாதி காரணமாகிய மாயையை உடன்பட்டுமொழி உண்டாவதற்கு முதற்காரணமாக அமைவது 'நாதம்' என்று சுட்டியுள்ளார்.

நன்னூல் (58, 74) இக்காற்றை முறையே 'அணுத்திரள் ஒலி', 'வளி' எனவும், இலக்கண விளக்கம் (3, 9) 'நாதம்', 'உதானனின் நாதம்' எனவும் குறிப்பிடுகின்றன. இலக்கண விளக்க உரை (9) இக்காற்றின் வகைகள் பத்துவகைப்படும் எனவும் அவற்றுள் ஒன்றே 'உதானன்' எனவும் குறிப்பிடுகிறது.

நன்னூல் (58) 'முதல்' என்ற சொல்லைச் சுட்டி, எழுத்து, மொழி ஆகியன உண்டாவதற்கு ஒலியே முதற்காரணமாக அமைவதைச் சுட்டுகின்றது. இக்கருத்தினை இலக்கண விளக்கம் தனது உரை (3) வாயிலாகச் சுட்டுகின்றது.

நன்னூல் (62) தமிழ் மொழியின் எழுத்துக்கள் பெயர் பெற்றமை பற்றிப் பொதுவாகக் கூறுகிறது. இலக்கண விளக்க உரை (7) தமிழ் மொழியின் எழுத்துக்கள் காரணக் குறியான்



பெயர் பெற்றமை பற்றி நன்னூலினும் தெளிவாகக் கூறுகிறது.

'இயல்பு கெடுத்து எழுப்ப வேண்டினும் அவ்வாறு எழாது இயல்பாகவே எழும்' இமைப் பொழுதையும், நொடிப் பொழுதையும், மட்டுமே மாத்திரையின் அளவு கருவிகளாகக் கொள்ள வேண்டும் என்பதை நன்னூல் (100) 'இயல்பெழு' என்ற தொடரால் சுட்டுகிறது. மாத்திரை 'சார்த்தியளத்தல்' என்னும் அளவையின்பாற்படும் என இலக்கண விளக்க உரை (24) கூறுகிறது.

இலக்கண விளக்கம் (8) 'நெறிப்பட' என்ற தொடரைச் சுட்டி, 'நெடுங்கணக்கு அமைப்பினின்றும் வழுவற்க' என்றுரைப்பதோடு, இதனுரை (8) தமிழ் மொழி எழுத்துக்களின் முறை வைப்புப்பற்றி * நன்னூலினும் விரிவாகக் கூறுகிறது.

எழுத்துக்கள் இனமாந் தன்மைகளுள் நன்னூல் (72) 'தானம்', 'முயற்சி' என்று சுட்டுவதை இலக்கண விளக்கம் (8) முறையே 'தோற்றம்' 'செய்கை' எனச் சுட்டுகிறது.

நன்னூல் தன் காலத்தில் ஆரிய மொழியால் ஏற்பட்ட மாற்றங்களைக் கருத்திற்கொண்டு 'வட மொழியாக்கம்' என்னும் இயலைப் படைத்துள்ளது. இலக்கண விளக்கம் நன்னூல் காலத்துத் தமிழுடன் கலந்த வடமொழிச் சொற்கள் தன் காலத்துத் தமிழுடன் ஒரு நீர்மைப்பட்டு நின்றமையாலும், தன் காலத்துப் புதிதாக வடமொழிச் சொற்கள் தமிழுடன் கலவாமையாலும் மரபு காத்துள்ளது எனலாம்.

நன்னூல் (59) உயிர், மெய் எழுத்துக்களின் விரிகளைக் கூறுவதினும், இலக்கண விளக்கம் (4) தனித்தனியாக விதந்து கூறுகிறது. இதனால், தத்தம் காலங்களுக்கேற்ற வகையில், நன்னூல் சுருங்கச் சொல்லல் என்னும் அழகும், தொகுத்துச் சுட்டல் என்னும் உத்தியும், இலக்கண விளக்கம் விளங்க வைத்தல் என்னும் அழகும், வகுத்துக் காட்டல் என்னும் உத்தியும் தோன்றும்படியாகக் கூறுகின்றன.

* நன்னூல், இலக்கணவிளக்கம் ஆகிய நூல்கள் மட்டுமே தமிழ் எழுத்துக்களின் முறை வைப்புப்பற்றிக் கூறுகின்றன.

உயிர் பன்னிரண்டு என நன்னூல் (63) கூறுகின்றது. நேமிநாதம் உயிர், மெய் எழுத்துகளுக்கிடையே ஆய்தத்தைப் பெய்து முதலெழுத்து முப்பத்தொன்றென உரைத்தமையால் ஐயமறுத்தல் பற்றி, இலக்கண விளக்கம் (4, 6) உயிர் பன்னிரண்டு என்பதனை மிகவும் வலியுறுத்திக் கூறுகின்றது.

உயிர்களுள் அ, இ, உ, ஆகிய மூன்றுஞ் சுட்டென இருநூல்களும் (நன். 66; இல. விள. 6) உரைகின்றன. நன்னூல் இம்மூன்றும் 'முதல் தனிவரிற் சுட்டு' எனக் குறித்தமையால், இதன் உரைகாரர்களாகிய சங்கர நமச்சிவாயர், சிவஞான முனிவர் போன்றோர் மொழிக்கு உறுப்பாயும், சார்ந்தும் வருவனவாகிய இவ்வெழுத்துக்களையும் சுட்டெழுத்துக்களாகக் கொண்டனர். இலக்கண விளக்கம் 'மொழி முதல்வரின் சுட்டு' என்று நன்னூலிலும் தெளிவாகக் கூறி, மொழி முதற்கண் நின்று சுட்டுப் பொருள் தருவனவற்றை மட்டும் சுட்டெழுத்துக்களாகக் கொள்கிறது.

உயிர்களில் குறில்களுக்கு அவ்வவற்றின் நெட்டெழுத்துக்கள் இனவெழுத்துக்களாக அமையும் என இருநூல்களும் (நன். 71; இல. விள. 8) கூறுகின்றன. ஐகார ஔகாரங்களுக்கு முறையே இகர உகரங்கள் இனவெழுத்துக்களாக அமையுமென நன்னூல் (71) கூற, இலக்கணவிளக்க உரை (8) தொல்காப்பியத்தை அடியொற்றி ஐகார ஔகாரங்கட்கு இனவெழுத்துக்கள் இல்லை என்று மறுத்துரைக்கிறது.

மெய் எழுத்துக்கள் பதினெட்டு என்று நன்னூல் (63) கூற, இலக்கணவிளக்கம் (4, 7) நேமிநாதம் முதலெழுத்து முப்பத்தொன்றென உரைப்பதை மறுக்கும் பான்மையில் நன்னூல் கருத்தை வலியுறுத்திக் கூறுகின்றது.

மெய் எழுத்துக்களை இரு நூல்களும் (நன் 59, 63, 89, 90; இல. விள. 27, 24, 17) முறையே 'உடம்பு', 'மெய்', 'ஒற்று' 'புள்ளி' என்ற வெவ்வேறு பெயர்களாலும் குறிக்கின்றன. மேலும் இலக்கண விளக்க உரை (7) 'உடல்' என்ற பெயராலும் இதனைக் குறிக்கின்றது.

நன்னூல் சார்பெழுத்தின் இலக்கணம் பற்றிக் கூறவில்லை. ஆனால் இலக்கண விளக்க உரை (5, 13) 'முதலெழுத்தாந் தன்மையின் நீங்கிச் சார்பில் தோன்றுவது சார்பெழுத்து' என இதன் இலக்கணத்தைக் கூறுகிறது.



சார்பு எழுத்துக்களை நன்னூல் (60) உயிர், மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் எனப் பத்து வகைகளாகக் கொள்ளுகிறது. இலக்கண விளக்கம் (5) இவற்றுள் ஆய்தக் குறுக்கத்தினை விடுத்து ஒன்பதாகக் கொள்ளுகிறது.

நன்னூல் (61) சார்பெழுத்துக்களின் விரி முந்நூற்றுப் அறுபத்தொன்பது எனவும், இலக்கண விளக்கம் (5) இருநூற்று நாற்பது எனவும் சுட்டி, உயிர்மெய், ஔகாரக் குறுக்கம் ஆகியவை ஒழிந்த பிற சார்பெழுத்துக்களின் விரிகளைக் கூறுமிடத்து இருநூல்களும் வேறுபடுகின்றன.

நன்னூல் (60) சார்பெழுத்துக்களை ஒரே நிரலாகக் கூற, இலக்கணவிளக்கம் (5) குற்றியலிகரம் ஆய்தம் குற்றியலுகரம் என்ற மூன்றையும் ஒரு நிரலாகவும், ஆய்த குறுக்கம் ஒழிந்த ஆறையும் மற்றொரு நிரலாகவும் கூறுகிறது.

இலக்கணவிளக்க உரை (16, 17, 8) குற்றியலிகர, குற்றியலுகரங்கள் குறுகி ஒலித்தலால் சார்பெழுத்துக்கள் எனப்படினும், இவை உயிரின் தன்மையினின்றும் நீங்காது எனவும், ஆய்தமும் சார்பெழுத்தெனப்படினும் இது புள்ளி எனப் பெயர் பெறுதலானும், ஆய்தத்தோடு ஒற்றளபெடை பதினொன்றெனச் சுட்டப்பெறுதலானும் இதனை ஒற்றெழுத்தெனவும் கூறி, இவ்வாறு இவற்றிற்கு முதலெழுத்தாந் தன்மை இருத்தலின் இவற்றை ஒரு நிரலாகவும், இம்முதலெழுத்தாந் தன்மையற்ற பிறவற்றை மற்றொரு நிரலாகவும் கூறியதன் அடிப்படையைச் சுட்டுகின்றது.

## முடிவுரை :

எழுத்துக்கள் பிறப்பதற்குக் காரணமான காற்றை நன்னூல், இலக்கணவிளக்கம் ஆகிய இருநூல்களும் தத்தம் மதக்கோட்பாடுகளின் அடிப்படைகளில் கூறுகின்றன. முதலெழுத்துக்களின் விரி பற்றிக் கூறுங்கால், நன்னூல் சுருங்கச் சொல்லல் என்னும் அழகையும், தொகுத்துச் சுட்டல் என்னும் உத்தியையும் இலக்கணவிளக்கம் விளங்க வைத்தல் என்னும் அழகையும், வகுத்துக் காட்டல் என்னும் உத்தியையும் பின்பற்றியுள்ளன. சார்பெழுத்துக்களை நன்னூல் பத்து வகைகளாகக் கொள்ள, இலக்கணவிளக்கம் ஆய்தக் குறுக்கத்தை விடுத்து ஒன்பது

வகைகளாகக் கொள்ளுகிறது. இச்சார்பெழுத்துக்களை நன்னூல் ஒரே நிரலாகக் கூற, இலக்கண விளக்கம் இவற்றுள் முதலெழுத்தாந் தன்மையுடைய குற்றியலிகர, குற்றியலுகர ஆய்தங்களை ஒரு நிரலாகவும் இத்தன்மையற்ற ஏனையவற்றை மற்றொரு நிரலாகவும் கூறுகிறது.

இரு நூல்களிலும், இலக்கண விளக்கம் நன்னூலினும் தெளிந்த மொழிக் கொள்கை உடையதாயும், முன்னோர் முடிபுக்குடன்பட்டும் இலக்கணக் கோட்பாடுகளைத் தெளிவுறுத்துகிறது.

## துணை நூற்பட்டியல்


1. குணவீர பண்டிதர் : நேமிநாதம்
   : கழக வெளியீடு,
   : சென்னை, 1966.
2. சண்முகம் பிள்ளை, மு. : 'இலக்கண விளக்கம் (எழுத்ததிகாரம்)' தமிழாய்வு, மலர் 1, பகுதி—1, (1974), பக். 147—151.


(சென்ற இதழ் தொடர்ச்சி)

# பழந்தமிழிலக்கியத்தில் சட்டமும் நீதிமன்றமும்


காவேரி ஆவுடையப்பன், எம். ஏ., எம். ஃபில்,
4, ஆய்வாளர் குடியிருப்பு,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை-625021.


1.1.1 அறம், நீதி என்ற இவ்விரண்டு சொற்களில் காலப்பழமையுடைய சொல்லாக 'அறம்' என்ற சொல் இலங்குகிறது. தமிழின் முதல் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலிருந்தே அறம் என்ற சொல் ஆளப் பட்டுள்ளது.[1] சங்க இலக்கியங்கள், நீதி நூல்கள், காப்பியங்கள் எனவரும் பழந்தமிழிலக்கியங்கள் பலவற்றிலும் அறம் என்னும் சொல்லினை அறியமுடிகிறது.[2] இச்சொல், இவ் விஇலக்கியங்களில் நீதி என்ற பொருளில் மட்டுமன்றி நற்பண்பு, ஒழுக்கம், கடமை, புண்ணியம், ஈகை, அறக்கடவுள், சமயம் என்ற பல்வேறு பொருள்களிலும் பயன் படுத்தப்பட்டிருக்கிறது.

1.1.2. சட்டம் என்கிற சொல்லுக்குப் பதிலியாகப் பழந்தமிழிலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள மற்றொரு சொல் 'நீதி' ஆகும். இச்சொல்லைத் தமிழ்ச்சொல் அல்ல என்றும் வடமொழிக்குரிய சொல் என்றும் கி. பி. ஆறாம் நூற்றாண்டளவில்தான் இச்சொல் தமிழ்மொழியில் இடம் பெற்றது என்றும் கூறுவர்.[3] நீதி இலக்கியமான திருக்குறளில் கூட 'நீதி' என்ற சொல் இடம்பெறவில்லை. பெருங்கதையிலும் தேவாரம், திருவாசகம் போன்ற பக்தி இலக்கியங்களிலும் நீதி என்ற சொல்லாட்சி இடம் பெற்றுள்ளது.[4] இச்சொல், ஒழுக்கம், நியாயம், முறைமை, அறநூல் என்ற நால்வகைப் பொருளிலேயே பெரு வழக்காக வழங்கப்பட்டு வருகிறது.

1. 1. 3. அறம், நீதி என்ற சொற்களால் பழங்காலத்தில் குறிக்கப்பட்டு வந்த வாழ்க்கை நெறிமுறைகள் தற்காலத்தில் 'சட்டம்' என்று குறிக்கப்படுகின்றன. பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய பெரியபுராணத்தில்தான் சட்டம் என்ற சொல்லைக் காண முடிகிறது. அதுவும் 'சட்டறம்' என்ற

சொல்லாட்சியே காணப்படுகிறது. "சாத்திரம் பயிற்றுவிக்கும் தர்மம்" என்பதைக் குறிக்கவே இச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது.[5]

சட்டம் என்பது வாழ்க்கை நடைமுறைகளையும், அதன் காரணத்தையும், விளைவுகளையும் முறைப்படி விளக்குவதாக உள்ளது. "சட்டம் என்பதற்கு நேரடியான பொருள் திணிக்கப்படுவது" என்பதாகும். பரந்த அடிப்படையில் அது நடவடிக்கை அல்லது செயல்பற்றிய விதி என்று பொருள்படும்"[6] இச்சட்டத்தைப் பற்றி ஹாலந்து என்னும் மேனாட்டறிஞர், "இறைமை அதிகாரமுடைய அரசியல் மேலாண்மையாளர் அல்லது குழுவினரால் கொண்டு செலுத்தப்படும் மானிடர்களின் புறநடத்தையைப் பற்றிய ஒரு பொதுவிதியே சட்டம்" என்று கூறுவார்[7]

## 1. 2. நீதிமன்றம் :

சமுதாயத்தில் நிகழுகின்ற அறம்பிறழ்ந்த செய்கைகள் பற்றிய வழக்குகளை விசாரிக்கவும், உரிய முறையில் முறை செய்து அச்செய்கைகளுக்கு உண்டான தீர்ப்பினைச் சொல்லவும் அரசினால் அமைக்கப்பட்டு இயக்கப்படுகின்ற பொதுமன்றம் நீதிமன்றம் எனப்படும்

இன்று நம்மிடையே பலதிறத்தனவாக நீதிமன்றங்கள் இருப்பது போல் அக்காலத்தில் இருந்தனவா என்பதை முழுமையாக அறிய முடியவில்லை. எனினும், அக்காலத்தில் நீதிமன்றங்கள் இருந்தன என்பதற்கு இலக்கியச்சான்றுகள் உள்ளன. சங்கஇலக்கிய காலத்தில் இருந்த நீதிமன்றங்களுக்கு "நெறிமாண் அவையம்,[8] 'அறங்கூறு அவையம்'"[9] என்று பெயர்கள் வழங்கப்பட்டன என்ற செய்தியினை இலக்கியங்கள் வழி அறியமுடிகிறது. "நாளோலக்க மண்டபம்" எனப்படும் அரசவைகளும் நீதிமன்றங்களாக இருந்தன என்பதை மதுரைக் காஞ்சி சுட்டுகிறது.[10]

அரசவை தவிரக் கோயில்களும் நீதின்மறங்களாகக் கருதப் பட்டு அங்கும் நீதி வழங்கப்பட்டது என்னும் செய்தியினைப் பெரியபுராணத்தின் வழி அறிய முடிகிறது.[11]

ஆகவே பழந்தமிழிலக்கியங்கள் வழி அரசவைகள், அறங்கூறு அவையங்கள், கோயில்கள் ஆகியன அக்காலத்தில் நீதிமன்றங் களாகத் திகழ்ந்தன என்பதை அறியமுடிகிறது,



## முடிவுகள் :

1. பழந்தமிழ் இலக்கியங்களில் 'சட்டம்' என்ற 'சொற் பயன்பாடு இல்லை. அறம், நீதி ஆகிய சொற்களே பயன்படுத்தப்பட்டுள்ளன.

2. சட்டம் என்ற சொல்லை ஒரு பொருண்மையில் முதன் முதலாகப் பெரியபுராணமே கையாளுகிறது.

3. பழந்தமிழ்ச் சமூகத்தில் அரசவைகள், அறங்கூறு அவையம் எனப்படும் நீதிமன்றங்கள், கோயில்கள் ஆகியன நீதிமன்றங்களாகத் திகழ்ந்தன.

## குறிப்புக்கள் .

1. "அறக்க வழிவுடையன பொருட்பயன் வரின்"
— தொல். பொருள். 218

2. "அறத்தினூங்கு ஆக்கமும் இல்லை" — குறள். 32
"அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" — புறம். 55
"அறந்துஞ்சு செங்கோலையே" — புறம். 40
"அறக்களத்து அந்தணர்" — சிலம்பு. 22 : 8

3. ஆர். சுப்பிரமணியன், தமிழிலக்கியத்தில் சட்டமும் நீதியும், ப. 130

4. "நீதியென்று நெறியுணர்வோர்க் கென" —
பெருங்கதை 1 : 44 : 63
"நீதியறிய தாரமண கையர்" தேவாரம், 1 : 16 : 10
"நீதியால் வாழமாட்டேன்" — தேவாரம், 4 : 26 : 3
"நீதியாவன யாவையும் நினைக்கிறேன்"
— திருவாசகம், 26 : 2

5. "சாலைதொறும் பயில் சட்டறங்கள் பல்குவன"
— பெரிய - கழற்றறிவார் நாயனார் புராணம், பா. 8

6. "ஆர். சுப்பிரமணியன், மு. நூ., ப. 134

7. Halland, Eiements of Jurisprudence, p. 40

(தொடர்ச்சி 486ம் பக்கம் உள்ளது)

# அண்ணாவின் செவ்வாழையும் சங்கம் புழாவின் வாழைக்குலையும்

இராம. மணிகண்டன்,
ஆய்வாளர் - தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக் கழகம்
காரைக்குடி - 3.

உண்மையை வெளிப்படையாகச் சித்திரிக்கும் போக்கு எல்லா எழுத்தாளர்களுக்கும் எளிதாக அமைந்து விடுவதில்லை. வாழ்க்கையை நுணுகி ஆராய்ந்து, காலத்தின் மாறுதலை உணர்ந்து எழுதுபவர்களிடம் தான் இத்தகைய போக்கினைக் காணமுடியும். அத்தகைய படைப்பாளர்கள் தான் தமிழில் அண்ணாவும் மலையாளத்தில் சங்கம் புழாகிருஷ்ண பிள்ளையும்.

நாடு, மொழி வேறுபட்டாலும் இவர்களின் சிந்தனை ஒன்றாய் இருந்திருக்கிறது என்பதற்கு அண்ணாவின் "செவ்வாழை" என்ற சிறுகதையும் சங்கம் புழாவின் "வாழைக்குலை" என்ற கவிதையும் நல்ல சான்றாகும். நடப்பியலும் கற்பனையும் உராய்வதின் விளைவு எவ்வாறு இருக்குமோ அதனை, இவர்களின் இப்படைப்புகளில் காண முடிகிறது. இத்தன்மை கொண்ட இவர்களின் செவ்வாழையையும் வாழைக்குலையையும் ஒப்புநோக்கி மதிப்பிடுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## கதையும் கவிதையும் — உள்ளடக்கம் :

இவற்றின் கரு நிலவுடைமையாளர்களின் சுரண்டல்களைச் சுட்டிக்காட்டுவதேயாம்.

(485ம் பக்கத் தொடர்ச்சி)

8. "அறமறக் கண்ட நெறிமாண் அவையம்" —புறம். 224
9. "சிறந்த கொள்கை அறங்கூறு அவையமும்"
— மதுரைக்காஞ்சி, 492
"அரைசுகோல் கோடினும் அறங்கூறு அவையத்து"
— சிலம்பு. 5 : 136
10. மதுரைக்காஞ்சி. 723 — 778
11. தடுத்தாட்கொண்ட புராணம், பா. எ. 51
பெரியபுராணம், தண்டியடிகள் புராணம், பா. எ. 18.



பண்ணையில் வேலை செய்யும் பண்ணையாள் ஒருவன் தன் வீட்டுக் கொல்லையில் வாழைக்கன்று ஒன்றை நட்டு வைக்கிறான். அது வளர்ந்து தன் பிள்ளைகளின் ஒருவேளைப் பசியையாவது போக்கும் என்ற எண்ணத்தில் அதனைக் கண்ணும் கருத்துமாக வளர்க்கிறான். அவன் குழந்தைகளும் அதை நம்பி, அது பழுக்கும் காலத்தை எதிர்பார்த்து இருக்கின்றனர். மரம் வளர்ந்து பயன் தரும் சமயத்தில் அவனது பண்ணையார், தம் வீட்டு விசேசத்திற்காக அதனை வெட்டிச் சென்று விடுகிறார். கூடவே குழந்தைகளின் நம்பிக்கையும் ஆசையும் வெட்டப்படுகின்றன.

இவ்வுள்ளடக்கத்தையே சிறுகதையும் கவிதையும் கொண்டுள்ளன. 'வாழைக்குலைக்' கவிதையை உரைநடையில் எழுதிப் பார்த்தால் 'செவ்வாழை' என்ற சிறுகதைக்கும் இதற்கும் வேறுபாடே தோன்றாது. இலக்கிய வடிவம் வேறுபடுகிறதே யன்றிக் கருவில் வேற்றுமை இல்லை.

## பாத்திரங்கள் :

செவ்வாழையில் உள்ள பாத்திரங்களையும் அதன் செயற்பாட்டையும் நோக்கும்போது வாழைக்குலைக் கவிதையின் பாத்திரங்களுடன் ஒத்து விளங்குகின்றன.

பண்ணையார் - பண்ணையாள் செங்கோடன் - அவன் மனைவி குப்பி - பிள்ளைகள் கரியன், காமாட்சி, முத்து, கடைக்குட்டி - என்று செவ்வாழையில் பாத்திரங்களின் பெயர்கள் அமைகின்றன.

பண்ணையார் - மலையன் - மனைவி அழகி - பிள்ளைகள் கருவல்லோன், மாதேவன், தேவன், கேலன், நீலி - என்று வாழைக்குலையில் பாத்திரங்கள் அமைகின்றன.

தமிழ்நாட்டிற்கு ஏற்ப அண்ணாவும் கேரளாவிற்கு ஏற்ப சங்கம்புழாவும் பாத்திரங்களுக்குப் பெயரிட்டிருக்கின்றனர். இரண்டிலும், பாத்திரங்களின் செயற்பாடுகள் ஒத்தே விளங்குகின்றன.

## பின்னணி

நிலவுடைமையாளர்களின் சுரண்டல், பண்ணையில் பணிபுரிபவர்களின் நிலை, ஏழைக் குழந்தைகளின் நிறைவேறா ஆசைகள் ஆகியன அடங்கிய ஏர் இந்திய சமுதாயத்தையே இச்சிறுகதையும் கவிதையும் பின்னணியாகக் கொண்டுள்ளன.

## ஏற்றத் தாழ்வுகள் :

சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை இவ்விரு படைப்புகளும் சாடுகின்றன.

“ பண்ணை வீட்டுப் பிள்ளைகள் ஆப்பிள், திராட்சை தின்ன முடிகிறது - கரியனும் முத்துவும், எப்படி விலை உயர்ந்த அந்தப் பழங்களைப் பெறமுடியும் ? செவ்வாழையைத் தந்து தன் குழந்தைகளைக் குதூகலிக்கச் செய்ய வேண்டும் என்ற எண்ணந்தான், செங்கோடனை, அந்தச் செவ்வாழைக் கன்றைச் செல்லமாக வளர்க்கும்படிச் செய்தது (செவ்வாழை) இதே கருத்தைத் தான் வாழைக்குலையிலும் காணமுடிகிறது.

“ பண்ணையார் ’ வீட்டுப் பிள்ளைகள் பாலும் பாயாசமும் சாப்பிடும். ‘கரியனின் ஏழைக் குழந்தைகள் அப்படிச் சாப்பிட முடியுமா ? இந்தப் பழங்களையாவது சாப்பிடட்டும் என்ற எண்ணத்தில் வாழைமரம் வளர்ந்தது குழந்தைகளின் மனத்தில் ஆசைகள் வளர்ந்ததுபோல.” (வாழைக்குலை)

இதுபோன்றே எல்லா நிகழ்ச்சிகளும் இவ்விரு படைப்புகளிலும் வேறுபாடே காணமுடியாதவாறு பின்னப்பட்டுள்ளன. ஒன்று உரைநடையிலும் மற்றொன்று கவிதை நடையிலும் உள்ளது மட்டுமே இதன் வேறுபாடு.

## வேறுபாடு

முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையே நடக்கும் மோதலுக்கு முடிவு சமத்துவம்தான் என்ற போக்கில்,

“ இதினொக்கெ ப்ரதிகாரம் செய்யாதடங் ங்மோ
பதிதரெ! நீங்கள்தன் மின் முறக்கார் ”

அதாவது ‘பதர்களே! இதற்கெல்லாம் பின்வரும் தலைமுறையினர் உங்களைப் பழிவாங்காமல் விடமாட்டார்கள்.’ என்று கவிதையைச் சங்கம்புழா முடிக்கிறார். ஆனால் அண்ணா,



“ பாவம், சிறுவன் தானே ! அவன் என்ன கண்டான், செங்கோடனின் செவ்வாழை, தொழிலாளர் உலகிலே சர்வ சாதாரணச் சம்பவம் என்பதை ” என்று யதார்த்தமாக முடித்து விடுகிறார்.

அதுபோல், வாழையை வெட்டச்சொல்லிப் பண்ணையார் உத்தரவிட்டதும், மலையன் தனது ஆத்திரத்தை — தந்தை பழத்தை வெட்டித் தமக்குத் தரப்போகிறார் என்ற ஆவலில் அவனையும் மரத்தையும் சுற்றிச்சுற்றி வந்துத் தொல்லை தரும் போது — பண்ணையாரிடம் காட்டமுடியாததால் கருவல்லோன் முதுகில் ஓங்கி அறைந்து காட்டுவதாக சங்கம்புழா சொல்கிறார். சிறுகதையில் கரியன் குழந்தைகளுக்காக இறங்கிக் கண்ணீர் விட்டுச் சமாதானம் சொல்வதாகக் காட்டப்பட்டுள்ளது.

மேலும் மரத்தை வெட்டுவதற்கு முன்னிருந்த குழந்தைகளின் மனநிலைகளும், வெட்டியபின் அவர்களிடம் காணப்படும் அவலமும், கவிதையைப் படிக்கும்போது ஏற்படுகின்ற உணர்வு சிறுகதையைப் படிக்கும்போது அவ்வளவாக வெளிப்படவில்லை, கதையைவிடக் கவிதையின் சொற்செறிவும் அழுத்தமுமே இதற்குக் காரணமாகும்.

## வெளிவந்த ஆண்டுகள் :

1942 ஆம் ஆண்டு திருச்சூரில் உள்ள மங்கலோதயம் (பதின்மூன்றாவது பதிப்பாக) வாழைக்குலை முதலிய கவிதைகள் அடங்கிய “ ரக்த புஷ்பங்கள் ” எனும் கவிதைத் தொகுப்பை வெளியிட்டது. இதே காலத்தில் சங்கம்புழாவின் கவிதைகள் பல ஆங்கிலத்தில் வெளிவந்தன. 1949 ஆம் ஆண்டு ‘ திராவிட நாடு ’ எனும் இதழில் ‘ செவ்வாழை ’ என்ற சிறுகதை வெளி வந்தது.

## மதிப்பீடு :

இவ்விரு படைப்புகளும் உள்ளடக்கத்தில் ஒன்றுபோல் உள்ளன. உழைப்புச் சுரண்டல், ஏற்றத்தாழ்வு, ஏழைகளின் அவலநிலை ஆகியவற்றை உள்ளடக்கிய ஓர் இந்தியச் சமுதாயத்தையே பின்னணியாகக் கொண்டுள்ளன. அடுத்து வரும் தலைமுறையினராவது இத்தகைய கொடுமைக்கு முடிவு

காண வேண்டும் என்ற சங்கம்புழாவின் சிந்தனை அண்ணாவிடம் இப்படைப்பில் காணப்படவில்லை.

சங்கம்புழாவின் 'வாழைக்குலை' அண்ணாவின் 'செவ்வாழை'க்கு முன்பே வெளிவந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. செவ்வாழையின் உள்ளடக்கம், பின்னணி, பாத்திரங்களின் செயற்திறன் ஆகியவை வாழைக்குலையைப் போன்றே அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் அண்ணாவிற்கு இருந்த ஆங்கில அறிவையும் வைத்துப் பார்க்கும்போது 'செவ்வாழை' எனும் சிறுகதை 'வாழைக்குலை' எனும் கவிதையைத் தழுவி எழுந்ததாக இருக்கலாம் என்று தோன்றுகிறது.

---

## துணை நின்ற நூல்கள்


1. அண்ணாதுரை, சி. என் — செவ்வாழை.
2. சங்கம்புழா கிருஷ்ண பிள்ளை — ரக்தபுஷ்பங்கள் (வாழைக்குலை)
3. சேது, இரா. — அண்ணாவின் கதை இலக்கியம்
4. பரமேச்வரன் நாயர், பி. கே. — மலையாள இலக்கிய வரலாறு
5. வரதராசன், மு — தமிழ் இலக்கிய வரலாறு.
6. Sahitya Akademi — The National Bibliography of Indian Literature (1901 - 1953; Second Volum)


# இன்றைய சட்ட நுணுக்கங்கள் வழி தடுத்தாட்கொண்ட புராணம்


காவேரி ஆவுடையப்பன், எம் ஏ, எம்.ஃபில்
4, ஆய்வாளர் குடியிருப்பு
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 625021.



தமிழ்மொழியைச் சட்டத்தின் மொழியாகவும் செயல்படுத்த முடியும் என்ற கருதுகோளின்வழி இக்கட்டுரை எழுதப்படுகிறது. இன்றையச் சட்டநடைமுறைகளின் பல கூறுகளைப் பெரிய புராணத்தின்வழி அறியமுடிகிறது. சுந்தரர்மீது இறைவன் தொடுத்த வழக்கினைத் தடுத்தாட்கொண்டபுராணம் அடிப்படையாகக் கொண்டிருப்பதால் அதிலுள்ள சட்ட நடைமுறைகளோடு ஒத்துப்போகும் தன்மையினை இக்கட்டுரை ஆராய்வதாக அமைகிறது.


## வழக்கு வகைகள்

வழக்கு என்பது தம் உரிமையை நிலைநாட்டுவதற்கோ, பிறர் தீங்கிழைப்பதைத் தடுப்பதற்கோ ஒருவர் நீதிமன்றத்தின் முன் கொண்டுவரும் நடவடிக்கை ஆகும். இவ்வழக்குகளை உரிமை வழக்கு, குற்றவழக்கு என இரு வகைப்படுத்துவர். மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்குடன் தொடுக்கப்படும் வழக்குகளை உரிமை வழக்குகள் (Civil Actions) என்றும் குற்றம் செய்பவர்களைத் தண்டிப்பதற்காகத் தொடுக்கப்படும் வழக்குகளைக் குற்ற வழக்குகள் (Criminal Actions) என்றும் கூறுவர்.

பெரிய புராணத்தில் சுந்தரர்மீது தனக்குள்ள உரிமையை நிலை நாட்டுவதற்காக இறைவன் அந்தணர் வடிவத்தில் வந்து தொடுத்த வழக்கு உரிமை வழக்கு ஆகும். சுந்தரர் தனக்கே உரிய அடிமை என்கிற உரிமையை நிலை நாட்டுவதற்காக இறைவன் உரிமை வழக்கினைத் தொடுப்பதாகத் தடுத்தாட்கொண்ட புராணம் அமைந்துள்ளது.

## வழக்குரைப்போர் :

ஒருவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்பவர் வாதி (Plaintiff) என்று அழைக்கப்படுவார். குற்றம் சாட்டப்

பட்டவர் எதிர்வாதி (Defendant) என அழைக்கப்படுவார். இன்றையச் சட்டநடைமுறையில் உள்ளதுபோல அக்காலத்தில் வாதி, எதிர்வாதுகளுக்காக நீதி மன்றத்தில் வழக்காட வழக்குரைஞர்கள் இல்லை. வழக்குத் தொடுத்தவரும் எதிர் வழக்காடுபவருமான வாதி, எதிர்வாதி இருவரும் தாம் கூறும் கருத்தை நிறுவத் தாமே வழக்குரைஞர்களாகச் (Prosecutors) செயல்படும் நிலையே இருந்தது. இவ்வாறு வழக்காடுதலில் பலர் தேர்ந்த அனுபவமும் திறனும் உடையவர்களாக இருந்தனர். அவர்கள் 'மன்றாடி'[1] என்று அழைக்கப்பட்டனர்.

**வாதி :**

வழக்கினைத் தொடரும் வாதி வழக்கினை எடுத்துரைத்தலில் சில வரன்முறைகளைக் கையாளவேண்டும் என்ற தற்கால நடைமுறைகளில் சிலவற்றைத் தடுத்தாட்கொண்ட புராணம் காட்டுகிறது.

1 வழக்குத் தொடர்பவர்தான் முதலில் தன் வழக்கினை எடுத்துரைக்கவேண்டும் என்பது இன்றையச் சட்டநடைமுறையில் காணும் ஒரு வழக்கம். இவ்வழக்கம் பழங்காலத்திலும் பின்பற்றப்பட்டுள்ளது. தடுத்தாட் கொண்ட புராணத்தில் வாதி என்கிற முறையில் இறைவனே முதன்முதலில் வழக்கினைத் தொடர்கிறார்.

2. வாதியால் வைக்கப்படும் வழக்கு, முதலில் அவையோரை முன்விளித்தே தொடங்கப் பெறவேண்டும் என்னும் முறைமையைத் தடுத்தாட்கொண்ட புராணம் இறைவன், சுந்தரர் மீதான வழக்கைப் 'புனிதநான்மறையோர்' முன்னிலையில் வைக்கும்போது,

"இந்தமொழி கேன்மின் எதிர்யாவர்களும்"[2]

என விளித்தே தொடங்குவதாகக் காட்டும்.

3. வழக்கை வைக்கும் வாதி அடுத்துத், தன்னுடை ஊர், பெயர், மரபு போல்வனவற்றைக் கூறவேண்டும். தடுத்தாட் கொண்ட புராணத்தில், புனிதநான்மறையோர் இறைவனிடம் "எங்குளீர் செப்பும்" என்று கேட்டவுடன் இறைவனும் "இங்குளேன் இருப்பும் சேயது அன்று, இந்த வெண்ணெய் நல்லூர்" என்று கூறுகிறார்.[3]



4. வழக்கினை வைக்கும் வாதி, அடுத்து, வழக்கின் திறத்தையும் எதிர்வாதி செய்த குற்றத்தையும் எடுத்துக் கூறவேண்டும். தடுத்தாட்கொண்ட புராணத்தில் இறைவனும் 'சுந்தரர் என் அடிமை' என்ற வழக்கினை வைக்கிறார்.

இவற்றிலிருந்து,

1. வழக்கினை முன் வைத்தல்
2. வழக்கினை வைக்கும்போது அவையோரை முன்விளித்தல்
3. தன் மரபுமுறை கூறல்
4. வழக்கின் திறம் மற்றும் எதிர்வாதியின் குற்றம் கூறல்

என்ற நான்கு அடிப்படைகளின்கீழ் வாதியின் வழக்கு வைக்கும் முறை தற்காலத்தது போலவே அக்காலத்திலும் இருந்தது என்பதைத் தடுத்தாட்கொண்ட புராணத்தின் வாயிலாக அறியலாம்.

**எதிர்வாதி**

வாதி, எதிர்வாதியின் மீதுள்ள வழக்கினைக் கூறியவுடன் எதிர்வாதி த்ன்னுடைய நிலையைக்கூறி அவ்வழக்கில் கூறப்பட்டுள்ள குற்றத்தை மறுக்கவோ அல்லது ஒப்புக்கொள்ளவோ வேண்டும் என்பது சட்ட நடைமுறை. இதனை எதிர்வாதம் (Defence) என்பர். தடுத்தாட்கொண்ட புராணத்தில் சுந்தரர்,

"ஆசில் அந்தணர்கள் வேறோர் அந்தணர்க் கடிமையாதல்
பேச இன்றுன்னைக் கேட்டோம் பித்தனோ"[4]

என்று, ஓர் அந்தணர் பிறிதோர் அந்தணர்க்கு அடிமைத்தொழில் செய்வது வழக்கமில்லை, நீ கூறுவது பொருந்தாது என எதிர் வாதம் செய்கிறார். இன்று போலவே, வாதி தொடர்ந்த வழக்கினுக்கு எதிராக எதிர்வாதம் செய்ய அக்காலத்திலும் எதிர் வாதிக்கு உரிமை வழங்கப்பட்டிருந்ததை இதன் மூலம் அறியலாம்

**வாதம் நடைபெறும் முறை**

வாதி வழக்கினை வைத்தல், எதிர்வாதி எதிர்வாதம் செய்தல் என்று தொடங்கும் சட்ட நடைமுறைகளில் வழக்கினை முடித்து வைக்க மேலும் பல நடைமுறைகள் பின்பற்றப்பட்டன,

## வழக்கினை மெய்ப்பிக்கும் பொறுப்பு (Burden of Proof)

எதிர்வாதியின் எதிர்வாதம் முடிந்ததும் அவ்வழக்கினை மெய்ப்பிக்கும் பொறுப்பு வாதியினையே சாரும் என்பர். ஒருவர், தான் முறையிட்ட வழக்கில் சட்டப்படியான தீர்ப்பைப் பெற வேண்டும் என விரும்பினால், அவர் அந்த வழக்கினை மெய்ப்பிக்கும் பொறுப்பினையும் ஏற்றவராக இருத்தல் வேண்டும் இப்பொறுப்பினைச் சட்ட நூலார் "Burden of Proof" என்று கூறுவர். தாம் வைக்கும் தாம் கோரும் உரிமை தமக்குள்ளது என்று மெய்ப்பிக்கும் பொறுப்பு வாதியையே சாருகிறது. இம் மெய்ப்பிக்கும் பொறுப்பு அக்காலத்திலிருந்தே வாதியைச் சார்ந்த ஒன்றாக இருந்திருக்கிறது என்பதைச் சேக்கிழார்வழி அறியலாம்.

தடுத்தாட்கொண்ட புராணத்தில் இறைவன், தமக்குச் சுந்தரர் அடிமை எனக் கூறியவுடன் அவையோர் அவரிடம்,

> "இவ்வுலகின்கண் நீயின்று இவரை யுன்னடிமை என்ற
> வெவ்வுரை எம்முன்பு ஏற்றவேண்டும்"[6]

என்று கூறுகின்றனர். இங்கே, "ஏற்றவேண்டும்" என்ற சொல்லாட்சி வாதிக்குள்ள மெய்ப்பிக்கும் பொறுப்பை வலியுறுத்துகிறது. ஏனெனில் சாட்சிகள் பற்றிய விசாரிப்பிலும் வாதி தரப்புச் சாட்சிகள்தான் முதலில் விசாரிக்கப்படுவர் என்பது தற்காலச் சட்டநடைமுறை.

## சான்று (Evidence)

சான்று என்பது ஒரு பொருண்மையின் உள்தாய் இருத் தலைக் குறித்து விசாரிப்பவர் உளநிறைவு கொள்ளச் செய்யும் ஒன்றாகும். தடுத்தாட் கொண்ட புராணத்தில் மூவகைச் சான்றுகளைக் கூறுகிறார் சேக்கிழார். அந்தணராக வந்த இறைவனுக்குச் சுந்தரர் அடிமையென்பதை நிரூபிக்க வேண்டு மெனில் அதற்கான சான்றுகள் வேண்டுமென விசாரிக்கும் சபையோர் கூறுகின்றனர்.

> "ஆட்சியில் ஆவணத்தில் அன்றி மற்றயலார் தங்கள்
> காட்சியில் மூன்றில் ஒன்று காட்டுவாய்"[8]

என்கின்றனர். இதன்வழிச் சேக்கிழார்,



1. ஆட்சிச் சான்று (Custom)
2. ஆவணச் சான்று (Documentary Evidence)
3. காட்சிச் சான்று (Eye Witness)

எனச் சான்றுகளை மூன்று வகையாகக் குறிப்பிடுவதை அறிய லாம். தடுத்தாட்கொண்ட புராணத்தில் ஆவனச்சான்று காட்டப் படுகின்றது.

## கரணத்தான் :

நீதிமன்றத்தில் அளிக்கப்படும் சான்றுகளை விளக்குவதும், அவற்றின் தன்மையினை நீதிபதியும் பிறரும் அறியும்வண்ணம் கூறுவதும் நீதிமன்றத்தில் உள்ள எழுத்தரின் (கணக்கர்) பணி யாகும். அன்று இப்பணியைச் செய்தவரைப் பெரியபுராணம் 'கரணத்தான்' என்று கூறுகிறது. அந்தணராக வந்த இறைவன் சான்றாக அளித்த ஆவணத்தைக் 'கரணத்தான்' வாங்கிப் பிரித்து சபையோர் அறியும்வண்ணம் வாசித்ததாகத் தடுத்தாட்கொண்ட புராணம் காட்டுகிறது.[7]

## நீதிமன்ற எல்லை :

தொடுக்கப்படுகிறது வழக்கின் தன்மைக்கேற்பவும், வாதி, எதிர்வாதி ஆகியோரின் இருப்பிடத்திற்கேற்பவும் வழக்கை விசாரிக்கும் நீதிமன்றம் நிருணயிக்கப்படும். இவ்வாறு இந்த வழக்கிற்கு இந்த எல்லையிலுள்ள நீதிமன்றம் தான் சரியானது என்பதைச் சட்ட நடைமுறைகள் அறிவிக்கின்றன. தடுத்தாட் கொண்ட புராணத்தில் தொடுக்கப்படும் உரிமை வழக்கு முதலில் இறைவனால் புத்தூரில் வைக்கப்படுகிறது. பின்னர் வழக்கிற்குரிய வாதி, எதிர்வாதி ஆகிய இருவரும் திருவெண்ணெய்நல்லூரினர் என்பதால் அவ்வழக்கு திருவெண்ணெய்நல்லூரில் வைத்து விசாரிக்கப்படுவதாக இப்புராணம் காட்டுகிறது.

## மறுவிசாரணை (Retrial)

சட்டப்படி அல்லது மேல்நீதிமன்ற உத்திரவுப்படி மீண்டும் நடத்தும் வழக்காய்வினைத் தற்போது மறுவிசாரணை என்பர். இம்மறுவிசாரணை செய்யும் முறையினைத் தடுத்தாட்கொண்ட

புராணத்தின்மூலம் அறிய முடிகிறது. புத்தூரில் நடக்கும் வழக்கில் படியோலையைச் சுந்தரர் கிழித்தவுடன், 'மூலவோலை என்னிடம் உள்ளது. எனது ஊர் திருவெண்ணெய்நல்லூர்' என்று இறைவன் கூறியதால் அவ்வழக்கு புத்தூர்ச் சான்றோர் சம்மதத்துடன் திருவெண்ணெய்நல்லூருக்கு மாற்றப்பட்டு அங்கு மறுவிசாரணை நடப்பதாகக் காட்டப்பட்டுள்ளது.

## தீர்ப்பும் தீர்ப்பை நிறைவேற்றலும்: (Judgement and Execution)

தொடுக்கப்பட்ட வழக்கினை விசாரித்து நீதிபதியால் வழங்கப்படும் நீதிமுறை தீர்ப்பு எனப்படும். இத்தீர்ப்பினை எதிர்வாதியோ, வாதியோ ஏற்று நடக்கவேண்டும்; அப்படி யில்லாத நிலையில் அரசு சட்டத்தின் துணைகொண்டு அத் தீர்ப்பினை நிறைவேற்ற உதவி செய்யும்.

ஒப்பந்த அடிப்படையில் அமையும் வழக்குகளில் இரு வகையான தீர்ப்புகள் வழங்கப்படும். "ஒப்பந்தம் தொடர்ந்து நிறைவேற்றப்படக் கூடியதாயின் நிறைவேற்றும்படிப் பணிக்கலாம். அவ்விதம் இல்லாதாயின் திறத்தவரின் நிலைமைக்கேற்ப நட்டஈடு வழங்க வகை செய்யலாம்"[8] என்று இவ்விருவகைத் தீர்ப்புக்கள் பற்றிக் கூறுவர். தடுத்தாட் கொண்ட புராணம் காட்டும் வழக்கும் ஒப்பந்த அடிப்படையி லமைந்த வழக்கே ஆகும். வழக்கினை ஆராய்ந்த 'புனித நான்மறையோர்' பின்வருவாறு தீர்ப்பளிக்கின்றனர்.

"நான்மறை முனிவனார்க்கு நம்பியாரூரர் தோற்றீர்
பான்மையின் ஏவல் செய்தல் கடன்"[9]

என்று தீர்ப்பு அமைகிறது. இத்தீர்ப்பு ஒப்பந்த வழக்கு அடிப்படையில் வழங்கப்படும் முதல்வகைத் தீர்ப்பைச் சாரும். இவ்வழக்கிலுள்ள ஒப்பந்தம் தொடர்ந்து நிறைவேற்றப்படக் கூடியது. அதாவது சுந்தரர் மரபுமுறையாக அடிமைசெய்யக் கூடியவர் என்பதால் அப்படியே அதை ஏற்குமாறு தீர்ப்பும் வழங்கப்பட்டுள்ளது.

இத்தீர்ப்பைக் கேட்ட நம்பியாரூரர் உடனே ஒப்புக்கொண்டு வாதியான இறைவனைப் பார்த்து,

"உமக்கு இவ்வூரில்
வருமுறை மனையும் நீடு வாழ்க்கையும் காட்டு"[10]



என்று கேட்கிறார். இதன் மூலம் சபையோர் வழங்கிய தீர்ப்பினை ஆரூரர் உடனே ஏற்றுக்கொண்டு அடிமை செய்வ தற்கு ஆயத்தமாகவுள்ளார் என்பதை அறியலாம். இங்கே தீர்ப்பினை எதிர்வாதி தானே ஏற்றுக்கொள்வதோடு மட்டுமன்றி நிறைவேற்றவும் செய்கிறார்.

## முடிவுரை :

இக்கட்டுரையின் மூலம் இன்றையச் சட்டநடைமுறைகள் தடுத்தாட்கொண்ட புராணத்தில் வரும் நடைமுறைகளோடு ஒத்துப்போகும் தன்மையன என்பதை அறியலாம். சட்டம் என்பதும் சட்ட நுணுக்கங்கள் என்பதும் தமிழ்மொழிக்கும் மக்களுக்கும் புதியனவல்ல; எனவே தமிழ்மொழியைச் சட்டத்தின் மொழியாகவும் ஆக்குவதில் சிக்கல்கள் இரா. இதற்கான அடிப்படை ஆராய்ச்சி முயற்சியாக இக்கட்டுரை திகழுகிறது.

---

## குறிப்புகள்

1. தடுத்தாட்கொண்ட புராணம், பா. 48
2. மேலது, பா. 33
3. மேலது, பா. 47
4. மேலது, பா. 40
5. மேலது, பா. 55
6. மேலது, பா 56
7. மேலது, பா. 58
8. கு. பூரணானந்தா, செ. சிறீக்கந்தராசா, சட்டமும் தமிழும், பா. 190
9. தடுத்தாட்கொண்ட புராணம், பா. 63
10. மேலது, பா. 64.

---

(சென்ற இதழ் தொடர்ச்சி)

# சி. வை. தாமோதரம்பிள்ளை வாழ்வும் வாக்கும்

டாக்டர் ம. இராசேந்திரன்
விரிவுரையாளர்
அரிய கையெழுத்துச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

அந்தந்த பிரதேச மொழிகளை நாம் கற்று அதன்வழி, கிறித்தவமதத்தைப் பரப்பிடவேண்டும் என்ற கொள்கையைக் கால்டுவெல் போன்றோர் வெளிப்படுத்தினர். இருவரது முயற்சிகளும் தொடங்கின. ஒருபக்கம் வேலை, சம்பளம், உயர்தர வாழ்க்கை ஆகியவற்றிற்கான ஆங்கிலக் கல்வி எனும் பெயரில் பழைய மரபுவழிப்பட்ட அவர்களின் வாழ்க்கையைக் கேலிக்குரியதாக்கி, அவர்களைக் கிறித்தவர்களாக்கினர். இன்னொரு வழியில் அந்தந்த நாட்டு மொழியைக் கற்றுக்கொண்ட பாதிரிமார்கள் அவர்களைப்போல உடை உடுத்து உணவுண்டு. அம்மொழி மேம்பாட்டிற்கு உழைத்து அதன்வழி கிறித்தவ மதத்தைப் பரப்பினர். இவற்றுள் முதல்வழியில் கிறித்தவமதம் பரப்புகிற பணியில் ஈடுபட்டபோது உள்ளூர் மக்களின் கடுமையான எதிர்ப்பிற்குக் கிறித்தவர்கள் ஆளாயினர் ஆங்கிலேயர்களுக்கு எதிராக அவர்கள் பாடசாலைகளை நிறுவினர். கிறித்தவர்களின் பிரச்சாரத்திற்கு எதிராக அவர்களும் பிரச்சாரம் செய்தனர்.

தமிழகத்தில் சைவசமயத்தைச் சேர்ந்த தமிழறிஞர்களும் வேதமரபு வழிபட்ட பார்ப்பனர்களும் இருந்து வந்தனர். நீறுபூத்த நெருப்பாக வடமொழி எதிப்புத் தமிழகத்தில் சமயரீதியிலும் தொடர்ந்து இருந்து வந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்ட காலத்தில் கிறித்தவமதம் என்பது வேதமரபு வழிப்பட்ட மதத்தை அனைத்து இந்திய அளவில் எதிர்ப்பதாகத் தமிழகத்துச் சைவத்தமிழர்கள் கருதினர். மடங்களும் அவ்வாறே செயற்பட்டன. எனவே தமிழகத்தில் தொடர்ந்திருந்து வந்த ஆரியம் தமிழ் மொழிப்பிரச்சினையில் அடிப்படையில் கிறித்தவமதம் பார்க்கப்பட்டது. அதனால் வேதமரபு வழிப்பட்ட மத எதிர்ப்பாளர்களாக இருந்த தமிழ்ச் சைவர்கள் கிறித்தவ மதத்தை எதிர்க்காமல் விட்டுவிட்டனர். வேதமரபு வழிப்பட்ட மதத்தினர் கிறித்தவ மதத்தையும் ஆங்கிலேயரையும் கடுமையாக எதிர்க்கத் தொடங்கினர்,



அதனடிப்படையில் சைவசமயத்தைச் சார்ந்தவர்களாகத் தமிழகத்திலிருந்தவர்களுள் ஒரு பிரிவினர் தனித் தமிழ்வாதிகளானார்கள். பின்னர் அரசியல் ரீதியில் பார்ப்பன எதிர்ப்புடன் கூடிய திராவிடர் இயக்கமாக அது வளர்ந்தது. விடுதலைக்குப் பிறகு பெரும்பான்மையினரின் வாக்குகளைக் கொண்டு தீர்மானிக்கப்படும் அரசியலில் பார்ப்பனரல்லாதார் தமிழகத்தில் அரசியலில் ஆதிக்கம் பெற்றனர்.

இலங்கையில் ஆங்கிலேயர் இருக்கும்வரை கிறித்தவ எதிர்ப்பாளராக இருந்த சைவர்கள் / தமிழர்கள் விடுதலைக்குப் பிறகு அரசியல் ரீதியில் இலங்கையில் சிறுபான்மையினராயினர். அங்குச் சிங்களவரின் அரசியல் ஆதிக்கம் மேலோங்கியது.

இவ்வாறு ஐரோப்பியர் வருகை இந்தியாவையும் இலங்கையையும் அதனதன் சமூக நிலைக்கேற்பப் பாதித்திருக்கிறது. அதன் தொடக்ககால கட்டத்தில்தான் சி. வை. தாமோதரம் பிள்ளை பிறந்தார்.

## சி. வை. தா. வரலாறு

சிறுப்பிட்டி வைரவநாதரின் மூத்த மகனாக 12—9—1832 இல் சி. வை. தா. பிறந்தார். 1825 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை செமினரியிலே பயின்றபோது சைரஸ் கிங்ஸ்பரி என்ற பெயருடன் கிறித்தவரான வைரவநாதன் பிள்ளையும் 1830 ஆம் ஆண்டு உடுவில் மகளிர் கலாசாலையில் பயின்றபோது மேரி டேற்றன் (Mary Dayton) எனும் பெயருடன் கிறித்தவரான பெருந்தேவி அம்மையாரும் சைவ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இருவரையும் தம்பதிகளாக்கிய பெருமை அமெரிக்க மிஷனைச் சேர்ந்தவர்களுக்குண்டு.

பாடசாலைப் பரிசோதகராயிருந்த தமது தந்தையிடமே சி. வை. தா. கல்வி கற்கத் தொடங்கினார். வாக்குண்டாம், நன்னெறி, மூதுரை, திவாகரம், உரிச்சொல் நிகண்டு முதலிய நூல்கள் அவரது ஆரம்பக் கல்வியின் பாடங்களாக அமைந்தன. அதன் பின்னர்ச் சுன்னாகம் முத்துகுமாரக் கவிராயரிடத்து நைடதம், பாரதம், கந்தபுராணம் முதலிய இலக்கிய நூல்களையும் சில இலக்கண நூல்களையும் கற்றார். உ. வே. சாமிநாதய்யருக்கு மகாவித்துவான் போன்று சி.வை.தாவிற்குச் சுன்னாகம் முத்துக்குமாரக் கவிராயர் இருந்திருக்கிறார்.

'இங்கிலீசு கற்றால் இகத்திற்கு லாபம்; சமஸ்கிருதம் படித்தால் பரத்துக்கு லாபம்; தமிழைப் படித்தால் எதற்கும் பயன் இல்லை' என்று கருதிய காலத்தில் சி. வை. தா. தமிழைப் படித்த பின்னர் ஆங்கிலம் கற்கத் தொடங்கினார். தெல்லிப்பழை அமெரிக்க மிஷன் கலாசாலையிலே ஆரம்ப கால் ஆங்கிலக் கல்வியைக் கற்று, உயர்தரக் கல்வியை 'யாழ்ப்பாணச் சர்வ சாத்திரக் கலாசாலையில் கற்றார். அங்கு காறல் விசுவநாத பிள்ளை, வித்துவான் கதிரைவேற்பிள்ளை, லெவின்ஸ், சீ. டி. மில்ஸ் முதலான பேரறிஞர்கள் சி. வை. தா. வின் ஆசிரியர்களாக இருந்தார்கள். அங்கு, கணிதம், ஆங்கிலம், தமிழ், தத்துவம், வானசாத்திரம் ஆகிய பாடங்களிலே சிறப்பான தேர்ச்சியைப் பெற்றார் சி. வை. தா.

1852 ஆம் ஆண்டு தமது இருபதாம் வயதில் கோப்பாயிலிருந்த போதனா சத்தி வித்தியாசாலையின் ஆசிரியர்களுள் ஒருவராக நியமனம் பெற்றார். சி. வை. தா. வின் புலமையைக் கேள்வியுற்ற பார்சிவல் பாதிரியார் அவரைச் சென்னைக்கு அழைத்துவந்து 'தினவர்த்தமானி' எனும் பத்திரிகையின் ஆசிரியராக நியமித்தார்.[10] பத்திரிகாசிரியராக இருந்து காலத்தில் சி. வை. தா. இலஷ்சிங்டன் முதலான ஆங்கிலேயர்களுக்குத் தமிழ் கற்பித்தும் வந்தார். அதன்பின்னர்ச் சென்னை இராசதானிக் கல்லூரித் தமிழ்ப் பண்டிதராக நியமனம் பெற்றார்.

அப்போது சென்னைப் பல்கலைக் கழகம் உருவானது. அதில் 1857 ஆம் ஆண்டு முதன்முதல் நடத்தப்பட்ட நுழைவுத் தேர்வு எழுதி சி. வை. தா. தேர்ச்சியடைந்தார். அதன் பின்னர் நான்கு மாதங்கள் கழித்து நடந்த (இளங்கலை) தேர்விலும் தேர்ச்சியடைந்தார். இத்தேர்வில் சி. வை. தா. வுடன் அவரது ஆசிரியர் காறல் விசுவநாதபிள்ளையும் தேர்ச்சி பெற்றார். இவ்வாறு சென்னைப் பல்கலைக்கழக முதல் பட்டாதாரிகள் மூவரில் ஒருவராக சி. வை. தா. பட்டம் பெற்றார். அதன்பின் கள்ளிக்கோட்டை 'வித்தியாசாலை'யில் உதவியாசிரியராக நியமிக்கப்பட்டார். ஆறுமாத காலத்தில் சி. வை. தா. அங்கு ஆற்றிய பணியினைக் கண்ணுற்று ஆங்கிலேயர் அவரை அரசாங்க வரவு செலவுக் கணக்குச் சாலையில் கணக்காயர் பதவியில் அமர்த்தினர். அப்பதவியில் சி. வை. தா. காட்டிய திறமையில் விசாரணைகர்த்தர் பதவியும் கிடைத்தது. இக்காலத்திலே (1871) சி.வை.தா. B.L. தேர்விலும் தேர்ச்சியடைந்தார்.

(தொடரும்)

12 7044 சென்னை-600 008.

# தமிழ்க் கவிதைகளில் பெண்கள்

டாக்டர் மா. மீனாட்சிசுந்தரம்,
திட்ட உதவியாளர் மொழியியல் துறை,
பாரதியார் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் 46.

இந்தியாவில் வறுமை, சாதி, கல்வியின்மை, மூடநம்பிக்கை போன்றவற்றால் பாதிக்கப்பட்ட பாமர மக்களின் முன்னேற்றம் எவ்வாறு ஒரு சமுதாயப் பிரச்சனையாக இருந்ததோ அது போன்றே பெண்களுடைய முன்னேற்றமும், உரிமையும் சமுதாயச் சிக்கல்களாக விளங்கின. உடல் கூறுகளில் பல வேறுபாடுகள் நிலவியது போலவே சமுதாய வாழ்விலும் பெண்களுக்கு ஆண்களிடமிருந்து பல வேறுபாடுகள் நிலவின. இவற்றைத் தமிழ்க் கவிதைகள் எவ்வாறு சித்திரிக்கின்றன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## பிறப்பு :

பெண்ணைத் தெய்வமாகவும் பெற்றெடுத்த அன்னையாகவும் கொண்டாடுவது மரபாகக் காணப்படினும், தமக்குப் பெண்குழந்தை பிறப்பதை அதே மரபு மனமுவந்து ஏற்பதில்லை. "அதர்வணவேதம் பெண் பிறப்பதையே விழா எடுப்பதற்கான நிகழ்வாகக் கருதுகிறது."[1] பொன்முடியார் பாடிய புறநானூற்றுப் பாடல் ஒன்று, குழந்தை பெறுதலை ஆண்பிள்ளை பெறுதலாகவே கூறுகிறது.[2] நாட்டின் சில பகுதிகளில் சட்டத்தைப் பொருட்படுத்தாது பெண் குழந்தை பிறந்தால் கொலை செய்து விடுவதும் அல்லது இயற்கையான இறப்பிற்கு விட்டு விடுவதும் தற்காலத்திலும் நடைமுறையில் இருப்பதாக, பிரமிளாகபூர் கூறுகிறார்.[3] இதனால் பெண்ணின் பிறப்பு ஒரு சிக்கலாகக் கருதப்பட்டு வந்திருந்தலையே அறிய முடிகிறது.

இருபதாம் நூற்றாண்டில் பெண் பிறப்புக் குறித்தும் பழமைக் கருத்துக்களுக்கு எதிராகப் புதுமை எண்ணங்கள் மலரத் தொடங்கின. பெண் பிறப்புக் குறித்து நெடுநாள் நிலவி வந்துள்ள சிக்கலைப் போக்கிடும் நோக்கில் புலவர்கள் பாடியுள்ளனர்.

பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா
பெண்மை வெல்கென்று கூத்திடுவோமடா [4]

என்று பெண்மையை வரவேற்கிறார் பாரதி.

மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவஞ் செய்திட வேண்டும் அம்மா [5]

என்று பாடி, பெண்களுக்குத் தங்கள் பிறப்பிலிருந்த தாழ்வு மனப்பான்மையைப் போக்கிட முயல்வதுடன், ஆடவர்க்கு அவர்களின் உயர்வை உணர்த்திடவும் விரும்புகின்றார் கவிமணி. பெண்கள் பாவ ஜென்மங்கள் என்று சொன்னால் அவர்கள் பெற்ற ஆண்களும் பாவிகள் அல்லவா எனத் தன் கவிதையில் கேட்கிறார் முருகேசபாகவதர். [6] பெண் பிறப்புக் குறித்து நிலவிய சிக்கலைப் போக்குவதில் இப்புலவர்கள் காட்டும் ஆர்வம் பழமை மரபை உடைத்துப் புதுமை வழிகாட்டும் நோக்குடையது எனக் கொள்ள முடிகிறது.

## பெண்ணும் திருமணமும் :

திருமணத்தால் பெண் அடிமையாகிறாள், என்ற கருத்தினைக் கவிதைகளில் காணமுடிகிறது. இதனை நம்மை அடிமைகள் ஆக்கிவிடும் கலியாணக் கும்மி அடியுங் கோடி தலை நாணிக் கும்மி அடியுங்கோடி [7] எனக் கும்மியடித்துப் பெண்களே பாடுவதாக இந்துதாஸன் பாடியுள்ளார்.

கட்டாயத் திருமணம், கல்லின் பிளவுபோல் காலமெல்லாம் பொருந்தாத வாழ்வைக் கொடுக்கிறது[8] என்றும் பிரிவினைக்கு வழிவகுத்துவிடும்[9] என்றும் பாடுகின்றார் தாஸ். மனம் பொருந்தாத மணம் பெண்ணைத் தற்கொலை செய்துவிடத் தூண்டும் என்ற சமுதாய நடப்பினைத் தன் கவிதையில் காட்டுகிறார் பாரதிதாசன்.[10] மண உறவில், மணமகன், மணமகள் ஆகிய தங்கள் பிள்ளைகட்கு உரிமை கொடுக்காத பெற்றோர்களின் போக்கிற்கு எதிர்ப்பு ஏற்பட்டது. பெண்ணின் அருமையைப் பேணாமல் தன்னலத்தை விரும்பித் திருமணத்தில் அவளை விற்கும் பெற்றவர் செயலைக் கண்டித்தும் பாடுகின்றார் ராய சொக்கலிங்கம்.[11] மணமகனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெண்ணுக்கு இல்லாததால் அவள் வாழ்வில் விளைந்த துன்பத்தைக் கண்ட தாய்,



மண்ணாய்ப் போக! மண்ணாய்ப் போக!
மனம் பொருந்தா மணம் மண்ணாய்ப் போக! [12]

எனச் சமுதாய நடைமுறையைச் சாடுதலைப் பாடுகின்றார் பாரதிதாசன்.

திருமணத்தில் பெண் அடிமையாதலையும் மணமகனைத் தேர்ந்தெடுக்கும் உரிமையின்மையையும் அதனால் வரும் விளைவுகளையும், பெற்றோரின் மரபான போக்கினையும், மரபை மாற்ற வேண்டுமென்ற தாயின் கூற்றினையும் எடுத்துக் காட்டுவதின் மூலம் கவிதைகள் திருமணத்திலுள்ள பெண்களின் பிரச்சினைகளைத் தெளிவுபடப் புலப்படுத்துவதைக் காணலாம்.

## கற்பு

கற்பு என்று சொன்னால் பெண்ணைப் போலவே ஆணுக்கும் வேண்டும் என்று வலியுறுத்தும் கருத்துக்களைப் பிரதிபலித்துக் காட்டும் கவிதைகளைப் பார்க்க முடிகிறது. இப்புதிய கருத்தின் எழுச்சியினை,

கற்பு நிலையென்று சொல்ல வந்தார் — இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்

என்ற பாரதியார் பாடல் வெளிக்காட்டியுள்ளது. இதனை அடியொற்றி முத்துசாமியும்[14] முருகேச பாகவதரும்[15] பாடியுள்ளனர். மரபு நிலையிலிருந்து, பெண்ணின் கற்பினை வலியுறுத்திய ராய, சொவும் பாரதியின் கருத்தினை அடியொற்றிப் பாடியிருத்தலைப் பார்க்க முடிகிறது.[16] கற்பில் சமத்துவம் வேண்டும் என்பதை,

கற்பு நலந்தருமாயின் அதையிரு
பாலருங் கைக்கொள்வோம் — அது
காளையர்க் கில்லை கன்னியர்க் கென்றிடில்
கட்டுப்படுவோமோ ?[17]

எனப் பெண்ணின் குரலாகப் பாடியுள்ளார் சாமிசிதம்பரனார்

கற்புக்காக மனத்தில் தோன்றும் உண்மை, அன்பை காதலை மறைத்துக் கொண்டு காதலும் அன்பும் இல்லாதவருடன் இருக்க வேண்டும் என்கின்ற சமூகக்கொடுமையும் அழிய

வேண்டும்[18] என்ற பெரியாரின் கூற்று கற்பைவிட உண்மை அன்பே பெரிது என உறுதிப்படுகிறது. பெரியாரின் கருத்தினை அடியொற்றிக் காணப்படும்

கற்பென்று பூச்சி காட்டும்
கழுதைகளை நிந்தனை செய்
கட்டற்று சிட்டு போற்
களித்திடவே சிந்தனை செய்[19]

என்னும் ஜீவாவின் பாடல் பெரியார் கருத்தின் தீவிர நிலையாக வெளிப்பட்டுள்ளது எனலாம்.

## இல்வாழ்க்கை :

புலவர்கள் இல்வாழ்வின் பல்வேறு கூறுகளில் கணவனுக்கு ஆட்பட்டு வாழ வேண்டியதைப் பெண்ணின் கடமையாகப் பாடியுள்ளனர். கணவன் எச்சில் மனைவிக்கு அமிழ்தம் என்றும் அடித்தாலும் அணைப்பவன் கணவன் என்றும், கணவன் உடனில்லாதபோது அலங்காரம் செய்தலோ, விருந்து படைத்தலோ பத்தினிக்கு இயல்பில்லை[20] என்றும் பாடுகின்றார் சாமி குப்புச்சாமி. கணவனை,

கடவுளுக் கடுத்த கடவுளென் றெண்ணி[21]
சொல்லாற் செயலாற் றுணைவன் களிக்க மெல்லியல்[22]

வேண்டுவன செய்து வாழ வேண்டுவதே கடமை என்று கூறுகிறார் சுவாமிப்பிள்ளை. குச்சி வீடானாலும் கணவன் இருப்பதினால் அதனை மாடி வீடுபோல் கருதவேண்டுமென்றும்[23] கணவரின் குறை குற்றம் பிறரிடம் சொல்லலாகாது[24] என்றும் தாஸ் பாடுகின்றார்.

குடும்ப வாழ்வில் ஆணின் ஆதிக்கத்தை எதிர்த்துப் பெண்ணின் உரிமையைய நிலைநாட்டும் கருத்துக்களைக் கவிதைகளிலும் காணமுடிகின்றது. கணவனும் மனைவியும் இருவராக இருப்பினும் ஒருவராக எண்ணிக் கொண்டு செய்கிற செயல்களை எல்லாம் இருவரும் எண்ணிப் பார்த்துச் செய்க என்றும் இருவரும் உடனிருந்து உண்ண வேண்டும் என்றும் பாடியுள்ளார் வ. உ. சிதம்பரனார்.[25]

பெர்னாட்ஷாவின் பெண்களைக் குறித்த கருத்தினை அடியொற்றி, “பெண் ஆண் என்ற இரண்டுருளையால் நடக்கும் இன்ப வாழ்க்கை[26] எனப் பாடுகின்றார் பாரதிதாசன். இவற்றால்



ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்தும், சமத்துவம் பாராட்டியும் வாழ்வு நெறி அமைத்தலை வ. உ. சி. யும் பாரதிதாசனும் மொழிகின்றதை அறிய முடிகின்றது. பெண்ணின் வாழ்வில் நிலவிய விதவைச் சிக்கலுக்குத் தீர்வு காண நல்ல கணவன் எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் கவிதைகள் எடுத்து விளம்புவதைக் காணமுடிகிறது.

## விதவை :

கணவனை இழந்த பெண்ணுக்குச் சமுதாயம் வலியுறுத்திய ஒரு வித வாழ்க்கை முறையே விதவை வாழ்வு. பெண்ணுரிமை சமுதாயத்தில் வளரத் தொடங்கிய நிலையில் பெண்ணின் வாழ்வில் நிலவிய விதவைச் சிக்கலுக்குத் தீர்வு காணும் முயற்சி வளரத் தொடங்கியது.

பெண்ணுக்கு மணநாள் முதலே விதவைத் துன்பம் தோன்றுவது நடைமுறையில் காணப்படும் ஒன்றாகும். மணமகனுக்கு மணமகளாக்கப்பட்ட ஒரு பெண் தாலிகட்டிய பொழுதே மணமகனை இழந்து விதவையான கோலத்தை,

தாலி கழுத்திலிட்டார் ; சவத்தையொரு கட்டிலிட்டார்
நாலு கைம்பெண்க ளெனை நாய்ப் பிடியாகக் கட்டில்தன்
ஓலமிட்டுத் தாலியினை - என் கண்ணம்மா
ஒட்ட அறுத்தாரடியோ ![27]

என ஓர் இளம் விதவையின் கூற்றாகச் சித்திரித்துக் காட்டியுள்ளார் சுடலை முத்துப்பிள்ளை.

விதவையை அமங்கலமாகக் கருதும் சமுதாய நடைமுறையினை,

புகினும் ஓர் அகம் - சகுனம் தீதென
முகமும் கூசுவர் - மகளை ஏசுவர்.[28]

என ஆற்றாமையுடன் பாடுகின்றார் பாரதிதாசன். விதவை வாழ்வு எத்தகைய பழிப்புக்கு உரியதாகி இருக்கிறதென்பதனை இப்புலவர்தம் பாடல்கள் உள்ளவாறு உணர்த்தி நிற்கின்றன.

## பெண்கல்வி

பெண்களுக்குக் கல்வி கொடுக்கப்படாமல் இருக்கும் பழைய நிலையிலிருந்து மாறுபட்டோ, வீட்டில் சிறிதளவு எழுதவும்

படிக்கவும் கற்றுக் கொடுக்கப்படும் வழக்கத்திலிருந்து மாறியோ, அவர்களைக் கல்விக் கூடங்களுக்கு அனுப்பி கற்கச் செய்ய வேண்டும் என்று நவீன காலத்தில் கருத்து எழுந்தபோது அதனைப் பழமையாளர்கள் ஏற்கவில்லை. பழமைப் போக்கிற்கும் புதிய கருத்திற்கும் ஏற்பட்ட மோதல் பெண் கல்வியை ஒரு சிக்கலாக வளர்த்தது.

பெண்கல்வி குறித்து ஏற்பட்ட எதிர்ப்பும் ஆதரவும் இக்கால கட்டத்தில் விளைந்த கவிதைகளில் பிரதிபலித்துள்ளன. ஆங்கிலக்கல்வி பெண்களை ஒழுக்கக்கேட்டிற்கு உரியவர் களாக்கும் என்று கருதப்பட்டதை, பீர்முகம்மது,

பெண்கல்வி நாம் விரும்பிப் பேசுங்கால் ஆங்கிலந்தேர்
பெண்கள் பலர் வேசையராய்ப் பேர் கெடுப்பதிக்கலம்[29]

எனப் பாடியுள்ளார். ஆங்கிலேயர்பாலுள்ள வெறுப்பு ஆங்கிலக் கல்வி பயிலும் இவரிடம் எதிர்ப்பைத் தோற்றுவித்திருக்கக்கூடும் என்று அவர் கவிதையிலுள்ள வேகத்தால் அறிய முடிகிறது. தங்களுக்குக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்ற பெண்ணினத் தின் குரலை,

படிப்பெமக்கு வேண்டாமோ ?
பாமரராய் எங்கும்
அடுப்பங்கரைப் புகைக்கே
யாளாய் மடிவோமோ ?[30]

எனப் பாடுகின்றார் சுத்தானந்த பாரதியார், பெண்கல்விக்கு 19 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட எதிர்ப்பு 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வலுவிழக்கத் தொடங்கியிருத்தலை இக்கவிதைகள் புலப்படுத்துகின்றன.

## சொத்துரிமை :

சமுதாய மறுமலர்ச்சியால் பெண்கள் பல உரிமைகளைப் பெறத் தொடங்கியபோது சொத்துரிமையும் பெண்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்ற கிளர்ச்சி எழுவதாயிற்று பரம்பரையாகச் சொத்துக்களை அனுபவித்து வந்தவர்கள் பெண்களுக்கு அதைக் கொடுக்க முன்வரவில்லை. இத்தகைய சூழ்நிலையில் பெண்களின் சொத்துரிமை ஒரு சமுதாய சிக்கலாக வளர்ச்சி பெற்றது.



சொத்துரிமை இல்லாது அடிமைப்பட்டுக் கிடக்கும் பெண்ணினத்தைப் பார்த்து,

சொத்துஞ் சுகமுமற்று, துயருறுகின்றபாழும்
கொத்தடிமை யொழிய - கிளியே
கூடியுழைப் பாரடி[31]

எனப் பாடிச் சொத்துரிமைக்குப் பெண்ணினம் கூடி உழைக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்து வழிகாட்டுகிறார் ஜீவா. ஆண்களுக்குச் சமமாகப் பெண்களும்,

சொத்துச் சுதந்திரம் பெற்றுச் சுகமுடன்
வாழுவோம் - ஒன்று கூழுவோம்[32]

என்று பெண்ணினத்தின் குரலாகப் பாடியுள்ளார் சாமி சிதம் பரனார். சொத்துரிமை இல்லாத விதவைகள் படும்பாட்டைப் பாடியுள்ளார் காளவனப்புலவர்.[33] பெண்ணினம் ஆணினத்திற்கு ஒப்ப சமஉரிமை பெற வேண்டும் என்றும் அதற்காக அவர்கள் ஒன்றுபட்டுப் போராட வேண்டும் என்றும் இப்பாடல்கள் பெண்ணுரிமைச் சிக்கலை முன்வைத்து மொழியக் காணலாம்.

## முடிவு :

ஆண்பிறந்தால் பொருளாதார வலுவாக, பெண் பிறந்தால் பொருளாதார இழப்பாகவும் சமுதாயத்தில் நிலவிய கருத்துக் களைக் கவிதைகள் சுட்டிக்காட்டியுள்ளன.

திருமணத்தில் மணமகனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெண்ணுக்கு மறுக்கப்படுவதோடு, அந்த மணவாழ்வு அடிமை வாழ்வில் அடியெடுத்து வைப்பதாகக் காணப்படும் சமுதாய நிலையைப் புலவர் பாடல்கள் புலப்படுத்தியுள்ளன.

இல்வாழ்க்கையில் பெண் ஆணிற்கு அடிபணிந்து ஒழுக வேண்டும் என்ற மரபினை வற்புறுத்தும் கவிதைகள் காணக் கிடைக்கின்றனவாயினும் பெண்ணிற்குச் சம மதிப்பும் சம பொறுப்பும் கொடுக்க வேண்டுமென்ற புதிய கருத்துக்களும் பாடுபொருளாயிருத்தலையும் காண முடிகிறது.

பெண்களின் வாழ்வில் தோன்றுகிற விதவை வாழ்வானது, மதம், வைதீகம், விதி, கர்மம், ஆண்களின் உரிமை ஆகிய வற்றினை மையமாகக் கொண்டு நிலவுவதைப் புலவர் தம் பாடல்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

பெண்கல்விக்குச் சமுதாயப் பரப்பில் பலருடைய ஆதரவு நிலவியதையும் நவீன வாழ்க்கைமுறை பெண் கல்வியை வலியுறுத்தி நிற்றலையும் கவிதைகள் எடுத்து மொழிகின்றன.

பெண்ணினம் எழுச்சி பெற்று, சொத்துரிமைக்காகப் போராடும் புதிய போக்கினைக் கவிதைகள் தெளிவுபடப் பாடியுள்ளன.

## குறிப்புகள்

1. S. Altakar, the position of woman in Hindu Civilization p 4
2. புறநானூறு, பாடல்312.
3. Promilla kapur, the postion of woman in India, p. 23.
4. பாரதியார், பாரதியார் கவிதைகள், ப. 260
5. தேசிகவிநாயகம்பிள்ளை, மலரும் மாலையும், ப. 148.
6. வீ. வே. முருகேச பாகவதர், தமிழ்ச்சோலை, ப. 3.
7. இந்துதாஸன், கல்யாணப் பாட்டு, ப. 6.
8. உ.ப. பீ. ம தாஸ், மாதர்க்குமதி, ப. 25.
9. மேலது, ப. 26.
10. பாரதிதாசன், பாரதியார் கவிதைகள் பக். 110-111.
11. ராய. சொக்கலிங்கம், தாலாட்டும் கும்மியும், ப. 27.
12. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், ப. 111.
13. பாரதியார், பாரதியார் கவிதைகள், ப. 262.
14. க. முத்துசாமி, புதுமைக்குறள், ப. 24.
15. வீ. வே. முருகேசபாகவதர், தமிழ்ச்சோலை, ப. 35.
16. ராய. சொக்கலிங்கம், புதுமைப்பாக்கள், ப. 4.
17. சாமி சிதம்பரனார், சீர்திருத்தப்பாடல்கள், முதல்பாகம் ப. 72.
18. பெரியார் சிந்தனைகள் முதல்தொகுதி, ப. 117
19. ப. ஜீவானந்தம், ஜீவாவின் பாடல்கள், ப. 175.
20. சாமி குப்புசாமி, கற்புவிளக்கம், பக். 6, 7, 10.
21. ம. சாமி மிக்கேல், சுவாமிப்பிள்ளை, செல்வியர் நியதி அல்லது மனைவியரின் கடமைகள், ப. 4.
22. மேலது, ப. 35.
23. உ.ப. பீ. ம. தாஸ், மாதர்க்கு மதி, ப. 33.



24. மேலது, ப. 35.
25. வ. உ. சிதம்பரம் பிள்ளை, மெய்யறம், ப. 19.
26. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், ப. 105.
27. வி. சுடலை முத்துப்பிள்ளை, மாதர் மறுமணப் பாடல் திரட்டு, பக் 23-24.
28. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், ப. 118.
29. மி. பீர்முகமது, காந்தி மாளிகை, ப. 36.
30. சுத்தானந்த பாரதியார், மாதர் மறுமணப் பாடல் திரட்டு, பெண்ணின் கண்ணீர், ப. 12.
31. ப. ஜீவானந்தம், பெண்ணுரிமை கீதங்கள், ப. 14.
32. சாமி சிதம்பரனார், சீர்திருத்தப்பாடல்கள், முதல்பாகம், ப. 75.
33. கானவனப் புலவர், மாதர் மறுமணப்பாடல் திரட்டு, ப. 32.

# புறம் காட்டும் ஆட்சி அறம்

இரா. குருநாதன், எம். ஏ., எம்ஃபில்
துணைப்பேராசிரியர்,
த. உ. க. க. கல்லூரி.

உலக மக்களின் வாழ்விற்கு வழிகாட்டுவது இலக்கியங்கள் ஆகும். சங்ககாலம் முடியரசர்களின் ஆட்சியில் தவழ்ந்தது. அக்காலத்து வாழ்ந்த புலவர்களின் பாடல்கள், மக்களுக்கும், மன்னனுக்கும் உரிய சட்டங்களாகத் திகழ்ந்தன. புலவர்களின் சட்டங்கள் வேண்டுகோளாகவும், அறிவுரைகளாகவும் விளங்கின. அவற்றை மன்னனும் விரும்பி ஏற்றுக்கொண்டதை, சங்ககால வாழ்வு முறைகள் காட்டுகின்றன. புலவர்கள் அரச வாழ்வோடு இணைந்து வாழ்ந்தனர். புலவர்கள் தன்னைப்பாடவேண்டும் என்ற அடிமனஉணர்வு அரசர்களுக்கு இருந்திருக்கின்றது. மாண உணர்வால் உந்தப்பட்ட அரசன், வஞ்சினம் உரைக்கும் போது பகையை வெல்லாவிட்டால் புலவர்கள் என்னைப் பாடாது நீங்கட்டும்.' என்று கூறும் இயல்பினை எண்ணுதல் வேண்டும். புலவரைப் பழித்த காரணத்தினால் ஒரு நாடு வறுமையுற்றது போன்ற செய்திகள் புறநானூற்றில் காணப்படுகின்றன.

முடியரசனின் பிடியில் நாடு இருந்த நிலையில், அரசன் கைக்கொள்ளவேண்டிய அரசியல் நுணுக்கங்களைப் புலவர்கள் கூறியுள்ளனர். அவற்றில் ஒன்றினை எடுத்துக்காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஊன் பொதி பசுங்குடையார் என்னும் புலவர், சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னியிடம் சென்று அவன் புகழைப்பாடும் இடத்தில்,அரசனது புகழுக்குக்குரிய காரணத்தை,

“ வழிபடுவோரை வல்லறி தீயே
பிறர் பழிகூறுவோர் மொழி தேறலையே
நீமெய் கண்ட தீமை காணின்
ஒப்பநாடி அத்தக ஒறுத்தி
வந்தடி பொருந்தி முந்தைநிற்பிற்
தண்டமுந் தணிதிநீ ” [புறம். 10]

என்று குறிப்பிட்டுள்ளார்.



இப்பாட்லுடன்,

அரச சிறப்புக்குரிய காரணம்

| | | | |
|---|---|---|---|
| வல்லறிதி [வழிபடுவோரை] | மொழி தேறலை பழிச்சொல்லை | தகவொறுத்தி தவறுகண்டு | தண்டம்தணிது [காலில் வீழுந்தவரை] |
| [அறிதல்] | [நம்பாமை] | [தண்டனை தரல்] | மன்னித்தல் |

என்ற நால்வகை முறைமைகளை, ஊன்பொதி பசுங்குடையார் கூறியுள்ளது வியத்தற்குரியது;

### வல்லறிதி பண்பு :

தன்னை வந்து வணங்குபவன், இயல்பினை அரசன் அறிதல் வேண்டும். வழிபட வந்தவனின் சொல், செயல், முகக்குறிப்பு ஆகியவற்றை அரசன் ஆய்ந்து தெளியவேண்டும் அச்செயல் குற்றமற்ற தன்மையாயிருந்தால் வழிபட்டவனுக்கு நன்மை செய்யலாம் என்பது குறிப்புப்பொருள். வந்து நின்றான், வணங்கினான், சிலம்பு கண்டறிந்தேன் என்றான், கள்வன் பிடிபட்டான் என்றான், பாண்டியன், அவன் சொல்லையும், செயலையும் நம்பியதால், முடி போனது, மனை போனது, பழிநேர்ந்தது, மதுரையும் எரிந்தது என்பதை இளங்கோவடிகள், புறநானூற்று பாடல்வரிக்கு இலக்கியம் வகுத்தாற்போல் அமைத்துள்ளது சிந்திக்கத்தக்கது.

வந்தது பொற் கொல்லன் என்பதை மட்டும் அறிந்த பாண்டியன், ஆணைப் பிறப்பித்தது, தன் நாடு அழிவதற்குக் காரணமானது. நாடு வாழ்வதும், வீழ்வதும் மன்னன் நாவில் உள்ளது என்பதை உணர்தல் வேண்டும்.

### மொழி தேறலை :

பிறர் கூறும் பழிச்சொற்களை மன்னன் செவி கேட்டல் கூடாது. அழுக்காறு காரணமாகவே அவை பிறக்கின்றன என்பதை மன்னன் உணரல் வேண்டும்.

இராமன் மீது கொண்ட காதல் வேட்கையால், அவன் மீது பழியுரைத்துக் கூறியதை, இராவணன், உண்மையுணராமல், சூர்பனகையின் சொல்லை நம்பி, இராமனைப் பகையாக்கி,

வீழ்ந்த கதையை, கம்பர் கூறியுள்ளது புறநானூற்றிற்குச் சான்றாய் அமைந்துள்ளது.

### தகவொறுத்தி

ஒருவன் செய்யும் தவறை, அரசன் நேரில் காணும் வாய்ப்புக் கிடைத்தபோது, அவன் செய்யும்,தவறுக்கேற்ப தண்டனையைத் தருவது அவன் கடமையாகும். தவறைக் கண்டிக்கும் இயல்புடைய அரசன், தவறை மனத்தாலும் எண்ணாதிருத்தல் வேண்டும் என்பது குறிப்புப்பொருள். தவறு செய்யாதிருப்பவன் என்பதை உணர்த்தத்தான், மன்னனுக்கு, "இறை" என்ற சொல் அமைந்தது. முறை செய்து மக்களைக் காப்பாற்றும் இயல்புடையவன் மன்னனாவான் 'முறை' என்ற சொல்லாட்சி ஆழம் பொருந்தியதாகும். அவன் செய்யும் முறையில், குறை நேர்ந்தால், நிறையழியும் என்பதை உணர்தல் வேண்டும்.

தன்நாட்டு மக்களுக்குக் குறையில்லாத ஆட்சிசெய்த இலங்கை வேந்தன், சூர்ப்பனகையைத் தண்டிப்பபற்கு பதில், அவள் குறையோடு, தன் குறையையும் கவனியாது இணைத்ததால் அவன் நிறையழிந்தது. குறையை எடுத்துக்காட்டிய வீடணனைப் பகையாக எண்ணியதால் இலங்கை எரிந்தது. இராவணன் புகழ் சரிந்தது. தன்னை உணர முடியாத அளவிற்கு அவன் குறை வளர்ந்து விடுகின்றது.

பற்றற்ற நிலையை அரசன் அடைந்தால்தான், குறை நிறையை அவனால் உணரமுடியும். குறை கண்ட விடத்து, அதற்குரிய தண்டனையைப் பேதமின்றி விதிக்க வேண்டியது அரசகடமையாகும்.

### தண்டம் தணித்தி

தண்டனைக்குட்பட்டவன், மன்னனின் காலில் விழுந்து, வேண்டும்போது, கல்மனம் கொண்டவனாக மன்னன் இருத்தல் கூடாது. தண்டனையைக் கொடுத்த மன்னனுக்கு அதனைக் குறைக்கவும் ஆற்றலுண்டு. குற்றவாளியை மன்னித்து தன்னால் விதிக்கப்பட்ட தண்டனையைக் குறைத்தல் என்பது அவனது அருள் உள்ளத்தைக் காட்டுதலாகும். இன்றும்கூட மரண தண்டனை அடைந்தவர்கள், குடியரசுத் தலைவரிடம் கருணை மனுக் கொடுத்துப் பின் தண்டனை குறைக்கப்பட்டு ஆயுள் தண்டனையாக மாற்றும் தன்மையைக் காணலாம்,



தவறு செய்தவர்கள், இறைவனிடம், தன் தவற்றைக்கூறி மன்னிப்பு வேண்டினால் இறை மன்னிக்கும் என்ற நம்பிக்கையில் வாழ்ந்த தமிழர், இறைவனுக்கு இணையாக மன்னனைக் கூறியது பொருத்தமானதாகும். அறத்திற்கு மட்டும் அன்பு இல்லை மறத்திற்கும் அதுதான் துணை என்பதை நினைத்தல் வேண்டும்.

மன்னிக்கத்தெரிந்த மனிதனின் உள்ளம் மாணிக்கக் கோவில் என்பது நமது பண்பாடு. ஆசானுக்குத் துரோகம் செய்த சந்திரன், தவறுணர்ந்து சிவபெருமானின் அடியில்விழ, சிவன் அவனை, தன் முடியில் எடுத்து வைத்துக்கொண்டார். இறைவன் குணங்களில் சிறந்தது", மன்னிக்கும் குணமாகும். என்பதை உணர்த்துவதற்காக, சந்திரனின் கதை அமைக்கப் பட்டது.

குகையினுள்ளே சென்று அசுரனோடு சண்டையிட்டபோது அதிலிருந்து குருதி பெருகிவரக்கண்ட சுக்ரீவன், தன் அண்ணன் வாலி மறைந்து, அசுரன் வெளிவந்தால், ஆபத்து என்றுணர்ந்து குகையின் வாயிலை மலைகளால் மூடினான். முடிவு விபரீதமானது, அசுரன் இறந்து வாலி வெளிவந்து, தம்பியைத் தவறாக உணர்ந்து தண்டிக்க எண்ணினான். வாலியின்மீது உண்மை அன்பு கொண்ட சுக்ரீவன் தன் தவறுணர்ந்து அண்ணன் பாதத்தில் விழுந்து மன்றாட, கிட்கிந்தைக்கு அரசனான வாலி, தான் அரசன் என்பதையும் மறந்து அவனைத் தண்டித்தான், வாலி தன்னிலை மறக்க, தன் முடியிழந்து உயிரையும் இழந்தான்.

அன்று வாலி, அரசவிலக்கணநெறி பிறழாது, சுக்ரீவனை மன்னித்திருப்பானாகில் இராமகாதை, வாலியிடம் செல்லாமல், வேறுவிதமாய் அமைந்திருக்கும்.

பசு இறந்துவிடும், பசுத்தன்மை இறப்பதில்லை என்பதற்கிணங்க, முடியரசு நீங்கிக் குடியரசு நிலவியபோதும், அரசனுக்கு உரிய இலக்கணங்கள், மக்களை வழிநடத்தும் அதிகாரிகளுக்குப் பொருந்துவதாகும்.

ஊன்பொதி பசுங்குடையாரின் பாடற்கருத்து சோழன் இளஞ்சேட் சென்னிக்கு மட்டுமல்ல. உலகில் உள்ள உயர்ந்த பதவியிலிருக்கும் அனைவருக்கும் உரியதாகும்.

"வாழ்க வையகம்
வளர்க புலவர் நெறி"

முனைவர். தா. ஈசுவரபிள்ளை
விரிவுரையாளர்,
இலக்கியத்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

தமிழ் இலக்கியச் சோலையுள் வளம் பெற்றுத் திகழும் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று தூது இலக்கியம் ஆகும். தமிழ் மொழியில் மட்டுமின்றிப் பிற இந்திய மொழிகளிலும் காணப் பெறும் இலக்கிய வகையாகத் திகழ்வது இதன் தனிச் சிறப்பாகும். தலைவன், தலைவியரிடையே நிகழும் பிரிவின் காரணமாக ஒருவர் மற்றொருவரிடம் தன் நிலையை எடுத்துக் கூறித் தூது சென்று வருமாறு உயர்திணையுள் ஒருவரையோ, அல்லது ஏதேனும் அஃறிணைப் பொருளையோ வேண்டும் போக்கில் அமைவது தூது எனப் பொதுவாக விளக்கம் கூறப் பெறுகின்றது. ஆனால் கிடைக்கப்பெறும் தூது நூல்களைக் காணும்போது காதற்பிரிவு மட்டுமன்றி ஏனைய அரசியல், பொருளாதார, சமுதாயக் காரணங்களினாலும் தூது விடும் மரபு உண்டு என்பதை அறியமுடிகிறது. ஒரு சிற்றிலக்கிய வகையுள் பிற சிற்றிலக்கிய வகைகளின் கூறுகள் சில அமைந்து காணப்பெறுத லும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வகையில் தூது இலக்கியத் திலும் உலா, ஆற்றுப்படை, தசாங்கம், அங்க வருணனை கள் போன்ற இலக்கிய வகைகளின் கூறுகள் காணப்பெறுதலை அறியலாம். இவற்றுள் தூது இலக்கியத்துள் இடம்பெறும் உலா இலக்கிய வகையின் கூறுகளை இவண் காண்போம்.

தமிழ்த் தூது நூல்களில் ஆடவர் பெண்டிரிடத்துத் தூது அனுப்புதல், பெண்டிர் ஆடவரிடத்துத் தூது அனுப்புதல், ஆடவர் ஆடவரிடத்துத் தூது அனுப்புதல் என்ற மூன்று நிலைகளைக் காணலாம். இவற்றுள் பிரிவுத்துன்பம் காரணமாக ஆடவரிடத்துப் பெண்டிர் தூது விடுதலாக அமைந்த தூது நூல்களில் தூது பெறும் தலைவன் உலா வருதலாகக் காட்டப்பெறுமிடத்து உலா இலக்கியக் கூறுகள் இடம்பெறு கின்றன. இவண் அழகர் கிள்ளைவிடு தூது, மான் விடுதூது, முத்து விசய ரகுநாத சேதுபதி பேரில் பணவிடுதூது, மணவைத் திருவேங்கடமுடையான் மேகவிடுதூது, பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது, புகையிலை விடுதூது, வண்டுவிடுதூது,



தமிழ் விடுதூது சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சுவிடுதூது, சிவஞான பாலைய சுவாமிகள் நெஞ்சு விடுதூது, உமாபதி சிவாச்சாரியர் நெஞ்சு விடுதூது என்ற நூல்கள் எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன. இவற்றுள் பாட்டுடைத் தலைவர்கள் இறைவன், ஞானக்குரவர், வள்ளல்கள் என்ற மூன்று நிலைகளில் அமைகின்றனர். பாட்டுடைத் தலைவர்களின் நிலைக்கேற்ப உலாச் செய்தியில் இடம்பெறும் பொருட்கூறுகளும் அமைந்து காணப்பெறுகின்றன என்பது இவண் சுட்டுதற்குரியது.

பாட்டுடைத் தலைவன் உலாவருவதாகவும், அவனைக் கண்டு ஏழு பருவப் பெண்கள் காதல் கொண்டு மயங்குவ தாகவும் அமைத்துப் பாடப்பெறுவது உலா இலக்கியம் எனலாம். தூது நூல்களில் தூது விடுதற்குரிய காரணங்களும், அவற்றிற்குரிய சூழல்களும் சுட்டப்பெறும் பொதுப்பண்பை உணரமுடிகின்றது. அவற்றுள் பெண்டிர் காமத்துயரம் காரணமாகத் தூது விடுதற்குரிய சூழலாகத் தலைவன் உலா நிகழ்ச்சி அமைக்கப் பெறுகின்றது.

முற்கூறிய தூது நூல்களில் தலைவன் உலாவரும் நாள் சுட்டப் பெறுகின்றது. பாட்டுடைத் தலைவன் இறைவனாயின் அவனுக்குரிய திருநாளும், ஞானக்குரவராயின் அவர் நட்சத்திரமும், வள்ளலாயின் ஏதேனும் ஒரு பொழுதும் உலா வரும் நாளாக அமைகின்றன. எடுத்துக்காட்டாக அழகர் புரசாதித் திருநாளிலும், மணவை திருவேங்கடமுடையான் கோடைத்திருவிழாவின் போதும், சுப்ரமணிய தேசிகர் தை மாதம் அசுவதி நாளிலும், வேங்கடேசேந்திரன் மாலைப் பொழு திலும் உலா வருகின்றமையைக் கூறலாம். இவ்வாறே அழகர் குதிரையின் மீதும், முருகன் மயிலின்மீதும், பத்மகிரிநாதர் தேரின் மீதும், முத்து வீரப்பபிள்ளை சிவிகையின் மீதும் உலா வருவ தாக அவர்கள் உலா வரும் வாகனங்களும் தலைவன் இயல்பிற் கேற்ப மாறுபடக் காண்கிறோம்.

தலைவன் உலாவிற்கு எழுந்தருளும் நிகழ்ச்சிகள் வருவிக்கப் பெறுகின்றன. இவ்வமயம் தலைவனைத் துயிலெழுப்புதல், வேதியர் ஆசி கூறல், பெண்கள் பல்லாண்டு பாடுதல், புலவர்கள் புகழ்தல், தலைவனை ஆசனத்தில் அமர்த்தல், தலைவனின் பழைய அணிகளை நீக்குதல், தலைவன் மஞ்சன நீராடல், ஒப்பனை செய்தல், அன்பர்கள் துதி பாடல், விருதுகள் முழங்கல், தானங்கள் செய்தல், வாய் முசுதல், பெண்கள் மாலை கொண்டு

வரல், பெண்கள் கைலாகு தரல், பெண்கள் நடனமாடல், அபினி சுற்றுதல், கட்டியம் கூறல், இசைக்கருவிகள் முழுங்குதல், அபிடேக ஆராதனை செய்தல், தீபங்கள் நெருங்கிவரல், கண்ணாடி ஏந்தல், தேவர்கள் மலர் மாரி பொழிதல், பஞ்சாங்கப் பலன் கூறுதல், பாராயணம் செய்தல், பெண்கள் குடை பிடித்தல் என்பன சுட்டப் பெறுகின்றன.

உலா வரும் தலைவன் குழை, கிரீடம், சுட்டுவடம் காப்பு, கழல், கண்டசரம், சிலம்பு, தொங்கல், பொன்னாண், நெற்றிச் சுட்டி, பதக்கம், மிஞ்சி, முருகு, மாலை, வாகுவலயம், வச்சிரஒண்டி, வீரப்பட்டம், உருத்திராக்கம், ஆழி, கடுக்கண், கண்டிகை, சரப்பணி போன்ற அணிகளை அணிந்து வரும் காட்சி விளக்கப் பெறுகின்றது.

தலைவன் உலா வரும்போது பூரணகும்பம், சந்தனம், கற்பூரம், சாந்து, பசுந்தாது, குடைகள், கவரி, ஆலவட்டம், சிவிகை, குங்குமம், துருத்தி, சரதீபம், வாணக்காட்சி, மாலை, ஆடி, பட்டு, மணவேர்கள், பாவை, மணி விளக்கு, கத்தூரி, கனிகள், சுண்ணம், பொரி, கொடிகள், பன்னீர், திருநீறு, அக்கராலத்தில் மலர்கள், பகல்வர்த்தி, காளஞ்சி, பாவாடை, விருதுகள், உடைவாள், சாலுவை, குஞ்சம் போன்ற பொருள் களும், ஈட்டி, வில், வாள், பரிசை வேல் கோல் கேடயம், துப்பாக்கி, கத்தி, வல்லயம் போன்ற கருவிகளும் துந்துபி, சின்னம், வாத்தியம், பல்லியம், பதலை, தாரை, முருகு, பணவம், முழவம், குழல், யாழ், பேரி, தொண்டகம், தானம், உடுக்கை, தக்கை, பட்டு, பம்பை, நாகசின்னம், தம்புரா, வீணை, கின்னரி, வாங்கா, கொட்டு, நகரா, தகுனி, சல்லரி, மத்தளம், கிடுபிடி, கானா, டமாரம், கொம்பு, கட்டியம், வீராணம், தவில் போன்ற இசைக்கருவிகளும் உடன் வருகின்றமை காட்டப் பெறுகின்றது.

தலைவனுடைய உலாவில் புடைசூழப் பெண்கள், புலவர் கள், இளைஞர்கள், பக்தர்கள், தொண்டர்கள், ஏவலர், மன்னர் கள், உறவினர்கள், அரசவை ஊழியர்கள், படைவீரர், ஆயுதம் ஏந்தியோர், தியானிகள், கோயிற் பணியாளர்கள், மலர் தொடுப்போர், தீபம் வழங்குவோர், சாத்திரம் படிப்போர், மன்னர், கட்டியக்காரர், நட்டுவன்மார், நேமிதரித்தோர் வேதமொழிவோர், சோதிடர் வைராக்கியர், ஆச்சாரியர், தீட்சதர், சாஸ்திரி, கடவுள் மகளிர், தேவர்கள் போன்றோர் உடன்வருகின்றனர்.



இவ்வண்ணம் உலா வரும் தலைவனைத் தலைவி காண்கிறாள். இவண் தலைவியே நேரடியாக உலாவைக் காண்பதாகவும், (அழகர் 166-167) பிறர் கூறக்கேட்டு அல்லது பிறர் செல்வதைக் கண்டு செல்வதாகவும் (வண்டு. 240) இரு நிலைகளைக் காண்கிறோம். தலைவன் உலாவைக்கண்ட தலைவி தலைவனின் அழகிலும் தோற்றத்திலும் மனதைப் பறி கொடுக்கின்றாள். தலைவனைக் கண்டு இவன் யாராக இருக்கும் என ஐயுறுகின்றாள். இவ்வாறு ஐயுறும் நிலை மனிதன் தலைவனாக அமைந்த தூது நூல்களிலேயே காட்டப் பெறுகின்றது. இந்திரனோ, மன்மதனோ, முருகனோ என்றெல்லாம் ஐயுற்றுப் பின்னர், தாம் ஐயுற்றவர்களுக்குரிய சின்னங்களும் அடையாளங்களும் இல்லாமையைக் கண்டு மனிதனே எனத்தெளிகின்றாள். பின்னர், இத்தகைய பெருமை களைக் கொண்ட தலைவன் நமக்கு இரங்குவானோ மாட்டானோ என ஐயுறும் நிலை எல்லா நூல்களிலும் உள்ளது. இறுதியில் அருளுவான் எனத்துணிகின்றாள். இவ்வாறு ஐயுற்றும், துணிந்தும், நிற்கும்போது உலா கடந்து சென்றுவிடுகின்றது. தலைவி தலைவன் பால் கொண்ட காதலால் மயங்கிவிடு கின்றாள். உடன் தோழியரும் மற்றவர்களும் அழைத்துச் சென்று சீதளஉபதேசம் செய்கின்றனர். அவற்றாலும் மயக்கம் நீங்காத தலைவி காதல் துயரால் தூதுப் பொருளை அழைத்துத் தூதுவிடும் போக்கைக் காண்கிறோம்.

இவ்வாறு தூது நிகழ்தற்குரிய சூழலாகவும், படிப்போரின் சுவை மாற்றத்திற்குத் துணையாகவும் தூதுப் புலவர்கள் உலா நிகழ்ச்சியை அமைத்துத் தூது இலக்கியத்தைக் கற்போர் நயக்கும் இலக்கிய வகையாக மாற்றியுள்ளனர் எனலாம்.

# மேலாண்மை பொன்னுச்சாமியின் மாடசாமிகள்

டாக்டர். இரா. சண்முகவேலன்,
எம். ஏ. எம். பில். பி. டி. பிஎச். டி.,
தமிழ்ப் பேராசிரியர்,
அ. வீ. வா. நி. திரு. புட்பம் கல்லூரி,
பூண்டி - 613 503.

## எழுத்தாளர் அறிமுகம் :

மதுரைக்குத் தெற்கேயும் திருநெல்வேலிக்கு வடக்கேயும் மம்சாபுரத்திற்குக் கிழக்கேயும் பரமக்குடிக்கு மேற்கேயும் உள்ளடங்கிப் பரந்துகிடக்கிற வானம் பார்த்த பூமியே கரிசல் காடாகும். இக் காட்டு நிலப்பரப்பைத் திருமங்கலம், சிவகாசி, விருதுநகர், சங்கரன் கோவில், கயத்தாறு, எட்டயபுரம், ஒட்டப்பிடாரம், ராமசந்திரபுரம் முதலிய ஊர்கள் சூழ்ந்திருந்தாலும் ' கரிசல் சீமை ' என்று பொதுவாக அழைப்பர்.

இந்தச் சீமையில் ' இசை மகா சமுத்திரம் ' என்று பாராட்டப் பெற்ற விளாத்திகுளம் சாமிகள் போன்ற கலைஞர்கள் அதிகம் தோன்றவில்லையாயினும் கர்நாடக இசையின் மும்மூர்த்திகளுள் ஒருவரான முத்துசாமி தீட்சிதரும், காருகுறிச்சி அருணாசலமும் இந்த மண்ணில் காலம் கழித்திருக்கிறார்கள்.

விடுதலைப் போரில் பங்கு கொண்டவரும் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியங்களில் தமது சிந்தனையாலும் வேதனையாலும் புதிய எழுச்சியையும் புரட்சியையும் தோற்றுவித்தவரும் ஆகிய மகாகவி சுப்பிரமணிய பாரதியார் எட்டயபுரத்தில்தான் தோன்றினார். இவரைப் போலவே விடுதலைப் போராட்டத்தில் முனைப்புடன் பங்கு கொண்டு கப்பலோட்டிச் சிறையில் செக்கு இழுத்து - எண்ணங்களை எழுத்தில் வடித்த வ. உ. சிதம்பரம்பிள்ளை ஒட்டப்பிடாரத்தில் பிறந்தார். 1901-ஆம் ஆண்டிற்குப் பின்னர்ப் பொற்றொடி நாவலை எழுதிய சுந்தரம்பிள்ளை இப்பூமியின் குருமலையில் பிறந்து வாழ்ந்தார். விடுதலை இயக்கத்தில் பங்குகொண்டவரும், தமிழ் நாட்டின் நலனுக்காக அருந்தொண்டு புரிந்தவரும், தமிழகத்தின் முன்னாளைய முதல்வரும், படிக்காத மேதையென்று போற்றப்படுபவரும் ஆகிய கு. காமராசர் விருதுநகரில் தோன்றினார்.



இத்தகைய அறிஞர்களும், கவிஞர்களும், விடுதலை வீரர்களும், அரசியல்வாதிகளும், எழுத்தாளர்களும் கரிசல் சீமையின் பெருமைக்கும் புகழுக்கும் காரணமானாலும், இவர்களுடைய வழித்தோன்றல்கள் பலரும் தொடர்ந்து அந்த உயரிய-உன்னத நிலையை மேலும் மேலும் வளர்த்தும் உயர்த்தியும் வருகின்றனர்.

கலைக் குடும்பத்தின் முந்தைய தலைமுறையினது கடைசிக் கொழுந்தாகவும் பிந்திய வம்சாவளியினுடைய முதல் துளிராகவும் விளங்குபவர் இடைசெவல்காரர் கி. ராஜநாராயணன், இவருடைய கிளையினருள் இடைசெவல் கு. அழகிரிசாமி, நென்மேனி மேட்டுப்பட்டி ச. தமிழ்ச்செல்வன், நென்மேனி மேட்டுப்பட்டி கோணங்கி, சூரங்குடி அ. முத்தானந்தம், உருளைக்குடி சோ. தர்மன், தெற்குத் திட்டங்குளம், திடவை பொன்னுசாமி, வேப்பலோடை, மு. சுயம்புலிங்கம், எட்டயபுரம் வே. சதாசிவன், மம்சாபுரம் அழ. கிருஷ்ணமூர்த்தி, மேலக் கல்லூரணி பொ. அழகு கிருஷ்ணன், கஞ்சம்பட்டி ஜி. காசிர்ராஜன், சிவகாசி கே. ராமசாமி, சிந்தபள்ளி பொன்ராஜா, கலிங்கல் மேட்டுப்பட்டி தனுஷ்கோடி ராமசாமி, பாப்பையாபுரம் ரா. அழகர்சாமி, கோவில்பட்டி கௌரிஷங்கர், பி. ராமச்சந்திரபுரம் வீர. வேலுசாமி, ஆண்டிபட்டி பூமணி, ராமச்சந்திர பா. செயப்பிரகாசம் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களின் வரிசையில் அணிசெய்கின்ற மற்றொருவர் மேலாண்மறை நாட்டுக்காரர் மேலாண்மை பொன்னுச்சாமி.

நாற்பதை எட்டிப் பிடிக்கின்ற இளைஞர் ஐந்தாம் வகுப்பு வரை படிப்பு. சிறிய பலசரக்குக் கடை எளிய வேளாண்மை. சிறுவயதிலேயே பெற்றோர்களை இழந்து தம்பி கரிகாலனுடன் ஆச்சியின் அரவணைப்பில் வளர்ந்தவர். எழுபதுகளில் சிறுகதைகளை எழுதத் தொடங்கித் தொடர்ந்து, செம்மலர், கல்கி, தாமரை, குங்குமம், சோலைக் குயில்கள், ஜனரஞ்சினி, விழிப்பு முதலிய இதழ்களில் கதைகளை எழுதி வருகிறார் ; அவ்வப்போது விமர்சனத் துறையிலும் தனது பங்களிப்பைக் காட்டுகிறார் ; 1977 - இல் 'கொலை' எனும் கதைக்காக 'இலக்கியச் சிந்தனை'யின் பரிசினைப் பெற்றுள்ளார் ; 1985 - இல் 'ஜீவிதத்தின் உள்வட்டம்' என்னும் சிறுகதைக்கு 'இலக்கியச் சிந்தனை'யில் இரண்டாவது தடவையாகப் பரிசினைப் பெற்றிருக்கிறார் ; 1986 - இல் இவருடைய 'சுயம்' என்றும் கதை 'ஜனரஞ்சனி'யில் முதல் பரிசாகிய ரூ. 1000 - ஐ வென்றுள்ளது. இதுவரை

மேலாண்மை பொன்னுச் சாமியின் மானுடம் வெல்லும், சிபிகள் (1986), பூக்காத மாலை (1988) ஆகிய மூன்று சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. 'சிதைவுகள்' என்னும் சிறு கதை மலையாள மொழியில் வெளி வந்திருக்கிறது.

காமராசர் மாவட்டத்துக்காரராகவும் இளம் எழுத்தாளராகவும் தமிழ்ப் படைப்புலகில் உலாவருகின்ற மேலாண்மை பொன்னுச் சாமியின் படைப்புக்கள் கி. ராஜநாரயணன், க. நா. சுப்ரமண்யம், பாலா போன்றோரின் கவனத்தை ஈர்த்திருக்கின்றன. மனித கஷ்டங்களைக்கண்டு உருகுகிற மனசு அவரது' நொய்ந்த மக்களுக்காக எழுப்பும் குரல் அவருடையது என்று கி. ரா. வும்,

> இளங்காலைக் கிரணங்களைப்போல் இனிதாகவும் மாலைக் காற்றுபோல் ஆரோக்கியமாகவும் அறிந்த மனிதர்களின் நெருக்கத்தைப்போல் சுகமாகவும் உள்ள ஒரு உலகில் நுழையும் நிறைவு இந்தக் கதைகளில் (சிபிகள்) கிடைக்கிறது... இழந்த மனித உணர்வைத் தேடித் தோழமை கொள்ளும் வேட்கை நிறைந்த உலகை பொன்னுச்சாமியின் கதைகள் தேடிச் செல்கின்றன.

என்று பாலாவும், 'என்னையும் உங்களையும் பிடித்தமான எழுத்தாளர் மேலாண்மை பொன்னுச்சாமி' என்று சு. சமுத்திரமும் மதிப்பிட்டுள்ளனர்.

## மேலாண்மையின் மனிதர்கள்

மேலாண்மை பொன்னுச்சாமியின் சிபிகள், பூக்காதமாலை ஆகிய இரு சிறுகதைத் தொகுப்புக்களில் மொத்தமுள்ள 19 கதைகளில் ஆண் வர்க்கத்தைச் சேர்ந்த மயிலப்பன், சண்முகம், முத்து, ராமசாமி, பரந்தாமன், சுந்தரம், மூக்கையா, பெரியசாமி, சங்கையா, சந்தானம் போன்ற கதைமாந்தர்களுள்/மனிதர்களுள் ஒரு மனிதன் மாடசாமி.

ஒரு பெயருடைய ஒரு மனிதனின் ஒரு காலத்து நிகழ்ச்சி களை ஒரு சிறுகதையில் காட்டி விடுவதோடு அம் மனிதனின் அனுபவங்கள் முற்றுப் பெற்று விட்டதாகக் கருதக் கூடுமா? அந்த மனிதனின் வாழ்க்கை அந்தவொரு கதையுடன் முடிந்து போனதாகச் சொல்ல முடியுமா? சொல்ல முடியாது. அதனால்



அச்சிந்தனையில் இலக்கியப் படைப்பாளிகள் ஒரு மனிதனைப் பல நிலைகளில் படம் பிடிக்கின்றனர்; பற்பல படைப்புக்களில் நடமாட வைக்கின்றனர். துப்பறியும் கதைகளில் ஒரு மனிதனின் பல அவதாரங்களை - திருவிளையாடல்களை இந்த முறைமை யில் காட்டலாயினர். இவ்வணுகுமுறை தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தின் தொடக்கத்தில் சிலரால் சோதனை அளவில் புகுத்தப்பட்டதென்றாலும் அண்மைக் காலமாய்ச் சிலர் இதனை ஒரு படைப்புலக உத்தியாகக் கொண்டு சிறுகதைகளை எழுதி வருகின்றனர்; ஒரே பெயருடைய பல மனிதர்களையும் ஒரே பெயருடைய ஒரே மனிதனையும் வெவ்வேறு கதைகளில் படைத்துக் காட்டுகின்றனர்.

மா. அரங்கநாதனின் சிறுகதைத் தொகுப்பு வீடுபேறு (1987). 'அரணை', 'வெள்ளைக் கண்ணாடி' 'அறிமுகம்', 'பூசலார்', 'தரிசனம்' முதலிய 20 கதைகள் இதில் உள்ளன. இக்கதைகள் அனைத்திலும் முத்துக் கறுப்பன் என்கிற ஒரே மனிதன் கதைமாந்தன் ஆகிறான். அவனின் பல்வேறு பருவங்களும், பற்பல அனுபவங்களும், வெவ்வேறு முகங்களும் கதைகளாக வடிவம் பெற்றுள்ளன. சுருங்கக் கூறின், அவன் பல அவதாரங்கள் எடுத்த ஒரே மனிதன். இந்த முத்துக் கறுப்பனைப் போல மேலாண்மை பொன்னுச் சாமியின் மாடசாமி மூன்று கதைகளில் கதைமாந்தன் ஆகின்றான். ஆனால், இவன் ஒரே பெயருடைய வேறுவேறு மனிதன். இவன் மௌனியின் மணி, சேகரன் போன்றவன்; பிரபஞ்சனின் கிருஷ்ணமூர்த்தி, மூர்த்தியை ஒத்தவன்.

## 1. 'கடிவாளம்' மாடசாமி

'கடிவாளம்' கதையிலிருந்து கண்டறியப்படுகிற மாடசாமியைப்பற்றிய சில வாழ்க்கைக் குறிப்புக்கள் (Bio-Data) பின் வருமாறு:-

மாடசாமி திருமணமானவன். வயது முப்பதோ அதற்குச் சற்று முன்பின்னாவோ இருக்கலாம். மனைவி பெயர் லட்சுமி. ஒரு குழந்தை. திருமணம்ஆகி நான்கு ஆண்டுகள். தொழில். பேருந்துவில் நடத்துநர் (Conductor), ஊர்: சிவகாசி.

இந்த இளைஞனின் இரண்டு நாள் அனுபவங்களே 'கடிவாளம்' என்னும் கதையாக விரிந்துள்ளன. ஒரு பகலும் ஓர் இரவும் இவனுடைய அனுபவங்களை மிகுதியும் ஆக்கிரமித்துக்

கொள்கின்றன. இன்னொரு நாளின் இரவு இவனது வாழ்க்கைத் துணுக்கைக் காட்டுகிறது. ஆக, இந்தக்கதையில் மாடசாமியின் இரண்டு நாளைய அகவயமான நெகிழ்ச்சிகளையும், புறவயமான நெகிழ்ச்சிகளையும் காணலாம்.

முதல் ஒரு நாளில் மாடசாமியின் புறவயமான நடப்புக்களும் (activities), அகவயமான போராட்டங்களும் (conflicts) சித்திரிக்கப்படுகின்றன. இந்நாளிற்குப் பின்னர் இரண்டு மூன்று நாட்கள் கழிகின்றன. அடுத்தவொரு நாளின் இரவில் மாடசாமியின் பிரச்சனைக்குத் தீர்வு ஏற்படுகிறது. அது ஒரு வரைபடமாகத் தீட்டப்படுகிறது.

மாடசாமியினுடைய பேருந்து (Bus) ,சிவகாசி பேருந்து நிலையத்திற்கு வந்து நிற்கிறது. பயணிகள் அனைவரும் இறங்கி சென்ற பிறகு வழக்கம்போல் பேருந்துவிற்குள் சென்று பார்க்கிறான்; ஓட்டுநருடைய (Driver) இருப்பிடத்திற்கு இடப்புறத்தில் உள்ள இருக்கைக்குக் கீழ் ஒரு காகிதப்பொட்டலம் கிடப்பதைக் கண்டெடுக்கிறான். பிரித்துப் பார்க்கையில் ஐந்து பவுன் எடையுள்ள இரட்டைவடத் தங்கச்சங்கிலி இருக்கிறது. அதனை அப்படியே மடித்துக் கொண்டு போய்ப் பணிமனையில் உள்ள மேலாளரிடம் (Manager) ஒப்படைத்து விட்டு வீட்டிற்குத் திரும்புகிறான். இரவு முழுவதும் தூக்கம் இல்லை. இரண்டு மூன்று நாட்கள் சென்றபிறகு அவன் திரைப்படத்திற்குப் போய்விட்டு வீட்டிற்கு வருகிறான். அவனுடன் ஐந்து பைசா சில்லறை பாக்கிக்காகச் சண்டை போட்ட பெரியவர் அவன் வீட்டிற்கு வந்து மன்னிப்புக்கோரி அவனுடைய உதவியை நாடுகிறார். அவன் ஒப்படைத்த சங்கிலி தன்னுடையது என்றும் அது தனக்குக் கிடைக்க அதிகாரியிடம் பரிந்துரை செய்ய வேண்டும் என்றும் அவர் அவனிடம் வேண்ட, அவன் தயங்காமல் உதவ முன் வருகிறான்.

இந்நிகழ்ச்சிகள்தாம் மாடசாமியின் கதை. 'கடிவாளம்' காட்டும் சித்திரம். இக்கதையிலிருந்து மாடசாமி ஒரு பொறுப்புள்ள-கடமைப் பற்றுடைய-பணியாளன் ; பண்பாளன் ; கண்டெடுத்தாலும் தன்னுடைமையாக்காமல் உரியவர்க்குக் கிடைக்க கடமையாற்றும் கர்மவீரன் என்று கருதலாம். ஆனால், கதையில் மாடசாமியின் மனப்போராட்டத்திற்கு முக்கியத்துவம் தரப்படுவதால் உளவியல் அணுகு முறையில்



(Psychological approach) அவன் ஆராயப்படவேண்டியவனாகின்றான்.

மனப்போராட்டத்திற்கு அடிப்படை சிந்தித்தல் ஆகும். எந்த ஒன்றையும் சரியா, தவறா என்று நினைக்கத் தொடங்கினால் போதும். மனப்போராட்டம் தொடங்கிவிடும். மாடசாமி தங்கச் சங்கிலியைத் தனது உள்ளங்கையில் தூக்கிப் போட்டுப் பார்த்த பொழுதே அவன் மனத்திற்குள் பிரளயம் தோன்றுகிறது. அலையாக நினைவுகள் எழுகின்றன. 'கல்யாணமாகி நாலு வருஷமாகுது. ஒரு மூக்குத்தியாச்சும் வாங்கி, இந்தான்னு தந்திருக்கீகளா? நீங்களும் உங்க சம்பாத்தியமும்...' என்று மனைவி குத்திய குரல் அவன் மனத்தில் எதிரொலிக்கிறது. உடனடியாக அதற்குத் தீர்வு காண ஆசைப்படுகிறான், அவளுக்குக் கொடுக்கலாம் ; கொடுத்து அவள் மதிப்பைப் பெறலாம் என்று அவன் மனம் அசைந்து எதிர்பார்ப்புக்களில் மயங்குகிறது ; சட்டென்று விழித்துக் கொண்டு, 'சீ, நாயே! அடுத்தவன் நகையை அமுக்கி, ஒம் பொண்டாட்டி கழுத்திலே போடவா ஆசைப்படுதே? நீயெல்லாம் மனுசந்தானா? சோத்தைத்தான் திங்கிரியா?' என்று ஓர் உலுக்கு உலுக்குகிறது. மாடசாமி நிதானத்திற்கு - நன்னிலை எண்ணத்திற்கு (Mild euphonia) - வருகிறான். மேலாளரிடம் நகையை ஒப்படைக்கிறான் ; மனப் போர் ஓய வீட்டிற்குத் திரும்புகிறான் ; குளிக்கிறான் ; சாப்பிடுகிறான் ; படுக்கிறான் ; நேரம் கடக்கிறது தூக்கம் வாராமல் (Insomnia) புரள்கிறான்.

எடுத்துக்கொள்வதா? ஒப்படைப்பதா? எனும் கேள்விகள் அவனைக் கொக்கிப் போட்டு இழுக்க மனப்போர் எழுகிறது. இது முதல் கட்ட (Firsr stage) மனப்போர். ஊசல்போல் அங்கும் இங்கும் ஆடி அலைந்து சிறிது நேரப் போராட்டத்திற்குப் பிறகு சிறந்த ஒன்றைத் தேர்ந்தெடுத்துத் தீர்வு கண்டதால்-சுமை இறக்கப்பட்டதால் அவன் மனம் சராசரி நிலைக்கு (Normal state) திரும்புகிறது. அதனால் சிறிது நேரம் அவன் எந்தப் பாதிப்பிற்கும் ஆளாகாமல் இருக்கிறான். வழக்கம்போல் நடக்கிறான். படுத்த பிறகு அவன் மனம் கழிந்ததைத் திரும்பவும் நினைக்கிறது; அசைப்போடுகிறது. மீண்டும் மனப்போர். இஃது இரண்டாவது கட்ட (second stage) மனப்போர். நல்மனம் (Super-Ego) × கெட்டமனம் (gd). இவை இரண்டின் குரல்கள் ஒன்றுக்குப்பின் ஒன்றாக எழுந்து ஆர்ப்பரிக்கின்றன. தன்தன் கட்சிக்கு நியாயங்களைப் புரட்டுகின்றன. (தொடரும்)

## Statement about ownership and other particulars about Newspapers

### TAMIL POZHIL

### Form IV

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Karanthai Tamil Sangam, Karuntattamkudi, Thanjavur - 2. |
| 2. | Periodicity of its Publication | : | Monthly |
| 3. | Printer's Name | : | Thiru M. Chandramouli, Proprietor, Gemini Printing House. |
| | Nationality | : | Indian |
| | Address | : | 1837/1, West Main Street, Thanjavur - 613009. |
| 4. | Publisher's Name | : | Thiru S. Ramanathan. |
| | Nationlity | : | Indiau |
| | Address | : | Thiru S. Ramanathan. Chairman, Karanthai Tamil Sangom, Thanjavur - 613002. |
| 5. | Editor's Name | : | Thiru. C. Balasundaram, |
| | Nationality | : | Indian |
| | Address | : | 367, West Main St. Thanjavur - 613009. |
| 6. | Name and address of individuals who own the newspaper and partners | : | Karanthai Tamil Sangam (Regd ) Karunthattankudi Thanjavur. Pin - 613 002. |

I. S. Ramatathan hereby declare that the particulars given above are true fo the best of my knowledge and belief.

**S. Ramanathan,**
Publisher.

## வேண்டுகோள்

இ ...க்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்
வெட் ... ஆய்வுக்கட்டுரைகள் வேண்டப்பெறும்.
கட்டு ...ங்க அளவில் அமைதல் நலம். நெடி
தாயி ...தித் தருதல் வேண்டும். ஒரு பக்கத்தில்
தட்டச் ... தெளிவான கையெழுத்தில் அமைதல்
வேண்டு... ...யர் குழு தேர்ந்தளிக்கும் கட்டுரைகளே
வெளியிடப்பெறு. இன்றியமையாத அடிக்குறிப்புக்களே
சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பியனுப்பப்
பெறா ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக் கொண்டு
அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு

### கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| யாழ்நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள் | ரூ. | 50 | 00 |
| **கட்டுரைப் பொழில்** தமிழ்ச்சங்க மணிவிழா மலர் | ரூ. | 30 | 00 |
| **கட்டுரைப் பூங்கா** (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு) | ரூ. | 60 | 00 |
| *இராசராச சோழன்* முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ் | ரூ. | 6 | 00 |
| கபிலர்—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் | ரூ. | 4 | 00 |
| நக்கீரர்—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் | ரூ. | 3 | 00 |
| மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு பா. வே. மாணிக்க நாயக்கர் | ரூ. | 2 | 00 |
| கவியரசு நினைவு மலர் | ரூ. | 1 | 00 |
| தமிழரசி குறவஞ்சி | ரூ. | 0 | 75 |

### பிற வெளியீடுகள்

*தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை*

| | | | |
|---|---|---|---|
| எழுத்ததிகாரம் | ரூ. | 40 | 00 |
| சொல்லதிகாரம் | ரூ | 45 | 00 |
| கரந்தைக் கோவை [ச. பாலசுந்தரம்] | ரூ. | 7 | 50 |
| கலைக் கூத்தன் கவிதைகள் | ரூ. | 4 | 50 |

விற்பனைக் கழிவு 20% உண்டு. அஞ்சற் செலவு தனி

தலைவர்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர் - 613 002.

Regd. No. TN/TJ/24

நூல் - அஞ்சல்

பெறுநர்

திருமிகு ........................................ அவர்கள்

To.

இயக்குநர். அவர்கள்
தமிழ்நாடு அரசு
ஆவணக் காப்பகம்
எழும்பூர்.
சென்னை

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

## தமிழ்ப் பொழில் கட்டணம்

| | | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|---|
| தனியிதழ் | ரூ. | 2 50 | 3 00 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. | 30 00 | 60 00 |
| வாழ் நாள் கட்டணம் | ரூ. | 250 00 | 600 00 |

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர் - 613 002.

அச்சிடுபவர் : திரு. M. சந்திரமௌளி, ஜெமினி அச்சகம், 1837/1, மேலராஜ வீதி, தஞ்சாவூர் - 613 009.

# தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
25 AUG 1989
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர் சென்னை-8

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

துணர் : 62 மலர் 12

# தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2010

துணர் : 62 விபவ — பங்குனி மலர் : 12

மார்ச் — ஏப்ரல் — 1989

உள்ளுறை பக்கம்

1. சி. கே. சுப்பிரமணிய முதலியாரின் உரைத்திறன் ... 526
டாக்டர். தா. வே. வீராசாமி, எம். ஏ., பிஎச். டி.,

2. நன்னூல் - ஐயவினாக்கள் ... 538
பேராசிரியர். ச. பாலசுந்தரம்

3. சி. வை. தாமோதரம்பிள்ளை வாழ்வும் வாக்கும் .... 544
(சென்ற இதழ் தொடர்ச்சி)
டாக்டர். ம. இராசேந்திரன்

4. மதிப்புரை .... 560
இரா. குருநாதன்

5. மேலாண்மை பொன்னுச்சாமியின் மாடசாமிகள் .... 562
(சென்ற இதழ் தொடர்ச்சி)
டாக்டர். இரா. சன்முகவேலன்

6. தமிழ்ப்பொழில் உள்ளுறை அடங்கல் .... 568
எஸ். செந்தில்குமார், எம். ஏ., எம். பில்.,

பதிப்பாசிரியர் : பேராசிரியர் ச. பாலசுந்தரம்

## தமிழ்ப்பொழில் ஆசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர். கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, த கோ. ப கோவிந்தசாமி, பி. காம்.,
செயலாளர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, கலைமாச்செல்வர் எஸ்.டி.காசிராஜன் ஐ. ஏ. எஸ்.,
செயலாளர். தமிழ்வளர்ச்சிப் பண்பாட்டுத்துறை, சென்னை.

,, சிலம்பொலி சு, செல்லப்பன், எம்.ஏ., பி.டி.,பி எல் பிஎச்.டி,
இயக்குநர். தமிழ்வளர்ச்சித்துறை. சென்னை.

,, முனைவர்சி.பாலசுப்பிரமணியன், எம்.ஏ. எம் லிட், பிஎச்டி
தமிழ் மொழித்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

,, முனைவர் தமிழண்ணல், எம். ஏ., பி. எச்டி.,
தமிழ்த்துறைத் தலைவர்.
மதுரைக் காமராசர் பல்கலைக். கழகம்.

,, முனைவர் மு. கோவிந்தராஜன்
இயக்குநர் தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம் சென்னை.

,, முனைவர் சோ. ந. கந்தசாமி, எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி
இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

,, முனைவர் மா. இராமலிங்கம்,
தமிழ்த்துறைத் தலைவர் பாரதிதாசன் பல்கலைக் கழகம்.

,, தமிழ்த்தொண்டர். கோ.முத்துப்பிள்ளை, பி ஏ.,
சென்னை.

,, முனைவர், ஈரோடு தமிழன்பன்,
தமிழ்முதுகலைத்துறை, புதுக்கல்லூரி,சென்னை.

,, பேராசிரியர் பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர். தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர். செ. இராசு எம். ஏ.,
இணைப்பேராசிரியர்,கல்வெட்டுத்துறை,
தமிழ்ப்பல்கலைக் கழகம்.

,, புலவர் ஆ. பாலன், எம்.ஏ., எம். ஃபில்
துணைமுதல்வர். த. உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர்,உமாமகேசுவரா மேனிலைப்பள்ளி.

,, பா. மதிவாணன், எம்.ஏ., எம். ஃபில்.,
தமிழ் விரிவுரையாளர், த. உ. கரந்தைக் கலைக் கல்லூரி.

# சி. கே. சுப்பிரமணிய முதலியாரின் உரைத்திறன்

டாக்டர். தா. வே. வீராசாமி எம். ஏ. பிஎச். டி.,
தொகுப்யல் துறைப் பேராசிரியர் — தலைவர்.,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

## 1. முன்னுரை :

1.1. சேக்கிழார் செய்த பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணத்தினைப் பொதுமக்களும், அறிஞர் பெருமக்களும் அறியும் வகையில் கோவை சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தொகுத்தியற்றிய பேருரை இந்நூற்றாண்டின் மிகச் சிறந்த உரைகளுள் ஒன்றாகும். சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் சி. வை. தாமோதரம் பிள்ளை, உ. வே. சாமிநாதையர் போன்றவர்கள் தமிழில் மறைந்திருந்த பல நூல்களைப் பதிப்பித்தனர். அந்நூல்கள் பலவற்றிற்குப் பழைய உரைகள் இருப்பினும் இக்காலத்தார் அறியும் வகையில் 'ஆத்திசூடி', 'கொன்றைவேந்தன்' போன்ற சிறுநூல்கள் முதல் 'சிலப்பதிகாரம்', 'மணிமேகலை', 'அகநானூறு' போன்ற பெருநூல்கள் வரை உரை எழுதிய பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் சி. கே. சுப்பிரமணிய முதலியாருக்கு எழுதிய கடிதத்தில்,

> "தாங்கள் அரிதின் ஆராய்ந்தறிந்து திரட்டி வெளியிடும்
> அரும்பொருள்களைச் சுவைத்துப் பயனுறுவதற்கு
> இன்னும் பருவம் வரப் பெறாதேனாயுள்ளேன்
> என்பதனை நாணத்துடன் தெரிவிக்க வேண்டி
> யிருக்கிறது"

என்று கூறுவதன் வாயிலாக இவ்வுரைச் சிறப்பை உணரலாம்.

1.2. பல அரிய சங்க நூல்களையும் பிற்கால நூல்களையும் பதிப்பித்துத் துறை போகிய உ. வே. சாமிநாதையர் அவர்கள்,

"இவ்வுதர, முதலியார் அவர்களுடைய ஆராய்ச்சித் திறனையும், கல்வியாற்றலையும் நன்றாக விளக்குகின்றது. தலசம்பந்தமான செய்திகளும், வேறு நூற் கருத்துக்களும், மேற்கோள்களும், சாஸனப் பகுதிகளும், படங்களும் இவ்வுரையில் உரிய இடங்களில் மிக நன்றாக அமைந்துள்ளன. இவ்வளவு உழைத்து எழுதப்பட்ட உரை இந்நூலுக்கு இதுகாறும் இல்லை". என்பர்.[1]



1.3. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் எளிய மக்களும் சைவத்தை உணர வேண்டும் என்று பாடுபட்ட ஞானியாரடிகள்.

"சி. கே. சுப்பிரமணிய முதலியார். பி.ஏ. அவர்கள் கண்டிருக்கும் உரைவகை சாலச் சிறந்ததொன்றே. ...கற்பார்க்கு வரும் ஐயங்களைத் தன்னுரை கொண்டும், பிறமேற்கோள் கொண்டும் ஒழித்துகின்றது... வேண்டுமிடங்களில் பொழிப்புரையும், கருத்துரையும், குறிப்புரையுமாக விளங்குகின்ற திவ்வுரை."[2]

1.3. இவ்வாறு, பல நூல்களுக்கு உரைகண்ட அறிஞரும், பல நூல்களைப் பதிப்பித்த சான்றோரும் சைவ சமயத் தலைவரும் இவ்வுரையை ஒரு முகமாகப் போற்றியதன் வாயிலாக இவ்வுரைத் திறன் நன்கு விளங்கும்.

## 2. உரை செய் நெறி

2.1. பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராண உரை மொத்தம் ஏழு தொகுதிகளாக 6174 பக்கங்களில் வெளிவந்துள்ள நிலையே இதன் பெரு நிலையைக் கூறாமல் குறித்தமையும். படங்கள் மட்டும் 339 எனக் காணும் போது சொல்விளக்கத்துடன் குறிப்பிட்ட தலங்கள், கோயில்கள், நாயன்மார் உருவங்கள், சிவத்தலங்கட்குச் செல்லும் வழிகள் ஆகியவற்றை நுனித்தறியும் வகையில் கொடுத்துள்ள பாங்கு உரையின் திறனை எடுத்துரைக்கும்.

2.2 பண்டை நூல்களுக்கு உரைசெய்ய முனைந்தவர்களில் நச்சினார்க்கினியர், சிந்தாமணிக்கு முதலில் ஓர் உரை செய்ததைச்சமணச் சான்றோர் ஒப்புக்கொள்ளாததால் அச்சமய அடிப்படையில் மற்றுமோர் உரை செய்தார் என்ற செய்தியை நாம் அறிவோம். இதனால் ஒரு நூலுக்கு உரை எழுதுமுன் அவ்வுரையாசிரியர் அந்நூலில் விரிந்த அறிவும், ஆழ்ந்த அறிவும் பெற்றிருக்க வேண்டும் என்ற உண்மை வெளிப்படுகிறது. இவ்வடிப்படையில் சி. கே. சுப்பிரமணிய முதலியார் இளமை முதல் பெரியபுராணத்தில் விருப்பம் பூண்டு விளங்கினார். இவர் சேக்கிழார் மரபில் வந்தது இதற்கொரு காரணமாகவும் அமையலாம்.[3]

2.3. 1894 முதல் 1906 வரை திருச்சிற்றம்பலம் பிள்ளையவர்களிடம் இவர் பாடம் கேட்டுப் பெரியபுராணத்தை நன்கறிந்தார். சேலம் சரவணப்பிள்ளை, கம்பராமாயணக் குகப் படலத்தில் 'வந்தெதிரே' என்ற பாடலுக்குப் பல உரை

கூறினார்கள். திருச்சிற்றம்பலம் பிள்ளை பெரியபுராண இயற்பகை நாயனார் புராணத்தில் 'பழி விட நீ போ' என்ற தொடர்க்கு (பெ. பு. 418 சு. உரை) உரை கூறக் கேட்டுப் பெரிய புராணம் பற்றிய விருப்பம் இவர்க்கு மேலும் வளர்ந்தது. அத்துடன் 1894 முதல் 42 ஆண்டுகள் பெரியபுராணத்தை ஆண்டுக்கு ஒரு முறையாக 42 முறை பயின்று வந்தார். கயப்பாக்கம் சதாசிவ செட்டியாரின் பெரியபுராணச் சொற்பொழிவை 1919 முதல் 1922 வரை கேட்டபோது அவர்க்குக் கையேடு படிக்கும் வாய்ப்பைப் பெற்றார். அப்போது அவர் கூறிய அரிய உரைகளைக் குறித்து வந்தார். ஞானியார் அடிகள், பண்டிதமணி போன்ற அறிஞர்களுடன் உரையாடிய போது அவ்வறிஞர் பெருமக்கள் கூறிய பெரிய புராணக் குறிப்புக்கள் பற்றியும் சிந்தித்தார். 1930 - இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் 'சேக்கிழார்' என்ற தலைப்பில் இவர் செய்த சொற்பொழிவு, பெரியபுராண விளக்கவுரை எழுதத் தூண்டியது இலங்கையிலிருந்து வந்த கனகராயர் என்பவர் 'இந்நாட்டிற்குச் சுயராச்சியம் வாங்கப் பெரிய புராணத்தை நன்கு படிக்க வேண்டும்' என்றார்.[4] இங்ஙனம் நல்ல கல்வியும் கேள்வியும் வாய்க்கப் பெற்ற இவ்வுரையாசிரியர் நாட்டு விடுதலை உணர்வைத் தூண்டுவதற்குப் பெரியபுராணப் படிப்பு உதவும் என்ற நம்பிக்கை பெற்றுப் பலமுறை பயின்று நூலுக்கு உரை காண எண்ணினார்.

2.4. உரை எழுதுதற்கென ஏடுகள் 12, மூலப்பிரதி 3, உரைப்பிரதி 4 (இவற்றில் முழு உரையுடையன 2, குறையுரையுடையன 2), உரைக்கையெழுத்துப்படி 2 ஆகியவற்றைப் பயன்படுத்தினார். முன்னர் வெளிவந்த மூலப்பிரதிகளின் பதிப்புக்களையும் (ஆண்டு 1859, 1870) பயன்படுத்தத் தவறவில்லை. இதனால் எடுத்துக் கொண்ட நூலின் உரைகாணத் தமக்கு முன்னர் வெளிவந்த மூலம், உரை ஆகிய எல்லாவற்றையும் திரட்டிக் கொண்டார். இம்முயற்சி, உரைகாணும் பணிக்குரிய முன்னேற்பாடுகள் செவ்விய முறையில் அமைந்ததால் உரையின் தொடக்க முயற்சிகள் ஒவ்வொன்றும் உரைத்திறனை வளர்க்க உரமூட்டின.

## 3. உரைத்திறன் : இருநிலை, அகநிலை - புறநிலை

4.1 உரைத்திறனை உணரப் புறநிலை, அகநிலை ஆகிய இருநிலைகளில் காண இயலும்.

3. 2. நூலின் பொருளை உணர்தற்குத் துணையாக எந்தெந்த நூல்களைக் கற்றால் பெரியபுராணம் வளர்ந்துள்ள



வளர்ச்சியைத் தக்க நெறியில் அறிந்து கொள்ள இயலும் என்பதை உணர்ந்து உமாபதி, சிவாசாரியாரின் 'திருப்பதிக் கோவை' 'திருப்பதிகக் கோவை', 'திருமுறைகண்டபுராணம்' 'திருத்தொண்டர் புராணசாரம்', 'திருத்தொண்டர் புராண வரலாறு' என்பவற்றைப் பெரியபுராண நூல் உரை தொடங்கு முன் நூலின் முற்பகுதியாக அளித்துள்ளார். இவ்வாறு அமைக்கும் போதும் பெயரில்லாமல் முன்னர்ப் பதிப்பித்த இவற்றைத் 'திருத்தொண்டர் பதம் துதிப்பாம் (45) என்ற' அகச்சான்று கொண்டு உமாபதி சிவாசாரியாரின் படைப்புக்கள், என்று நிறுவுவார். 'திருத்தொண்டர் புராண வரலாற்றில் 'மறுகொள் பழையனூர்நீலி' (15) என்ற பாடலுக்குப் பெரிய புராணத்தில் திருக்குறிப்புத் தொண்டர் புராணம் 3 ஆம் பாட்டையும், திருஞானசம்பந்தர் திருவாலங்காட்டுப் பதிக முதற் பாட்டையும் எடுத்துக் கூறும்போது அகச்சான்று, புறச்சான்று ஆகிய இரு சான்றுகளையும் எடுத்துரைக்கும் பாங்கு புலப்படும். இந்நூலுக்கு (21. 37, 42, 47) வழங்கிய ஆறுமுகத்தம்பிரான் உரையையும் எடுத்துரைப்பார். 'தேனிப்பார்' என்ற சொல்லுக்கு உரை கூறும்போது திருவாசக ஆட்சியையும் எடுத்துக் காட்டுவார்,

3. 3, இங்ஙனம் புறநிலையில் நூற்களைக் கூறும்போது அவற்றின் ஆசிரியர் யார் என நிறுவுதல், பழங்கதை ஆட்சி நிலை, சொற் பொருள் காட்டுதல் ஆகியவற்றைக் கூறுவர்.

3. 4. சேக்கிழார் சரித ஆராய்ச்சிக் குறிப்புக்களைக் கொண்டு நூதாசிரியர் பற்றிய செய்திகளைச் செவ்வையாக அளிக்கும் போக்குப் புலப்படும்.

3. 5. பெரியபுராணம் 'உபமன்னிய பக்த விலாச'த்தின் மொழி பெயர்ப்பு அன்று; தனித்தமிழ் நூல் எனச் சரித ஆராய்ச்சியில் குறிப்பிடுவர்.

3 6.1. நூலில் இடைச் செருகல்கள் இருப்பதை நன்கு சுட்டிக்காட்டுவர். இப்புராணச் செய்யுள்தொகை 4253 என்பது உமாபதியார் புராண வரலாறு. இத்தொகைக்குமேல் 32 பாட்டுக்கள் அச்சிட்ட பிரதிகளிற் காணப்படுகின்றன என்று கூறியவர் (பெ. பு. தொகுதி I பக். 79) 'சிதம்பரம், திருவாவடுதுறைப்பிரதிகள் சுத்தமாயும், நல்லாதரவு தருவனவாயுமுள்ளன. திருநெல்வேலிப்பிரதிகளில் சில துணிகரமான இடைச்செருகல்கள் காணப்பெற்றன. (பெ. பு. தொகுதி I பக் 14) என்று உரை

யாசிரியர் கூறுவதால், பெரியபுராண உரையில் பாடபேதம் பற்றி அறிய உரையாசிரியர் கொண்ட முயற்சி நன்கு வெளிப்படும். அத்துடன் இனிவருங்காலத்தில் பெரிய புராணப் பதிப்புக்களுக்கும் இவ்வுரையின் முன்னுரைக்கு முன்னுரை போன்றவை பெருந்துணை புரியும்.

3.6.2 கண்ணப்ப நாயனார் புராணத்தில் 'அவனுடைய வடிவெல்லாம்' (பெ. பு II 806) என்ற பாடலின் கீழ் 5 பாடல்கள் சில பிரதிகளில் இருந்ததையும் அவை பல பிரதிகளில் இல்லாதிருப்பதையும் நக்கீரரின் 'கண்ணப்ப தேவர் திருமற'த்தில் காணும் பொருள்கள் அப்படியே இப்பாடல்களில் மொழிந்திருப்பதையும், ஆசிரியர் மரபையும் எடுத்துக்காட்டிக் காஞ்சி சபாபதி முதலியார், ஆறுமுகத் தம்பிரான் ஆகியோர் இப்பாடல்களை 'வெள்ளிப்பாடல்கள்' என்று கொண்டதையும் கூறி இவற்றை இடைச் செருகல்கள் என நிறுவுவார். இதனால் சேக்கிழார் பாடல்கள் எவை எனக் கண்டு தெரிவதிலும், 'வெள்ளிப்பாடல்க'ளை நீக்குவதிலும் உரையாசிரியர் உரைத்திறன் வெளிப்படும்.[5]

3.7. சேக்கிழார் செய்யுளணிக் குறிப்புக்கள், பெயர் விளக்கம் ஆகியவை பெரியபுராணம் பயில்வோர்க்கு அணி நய அறிவும், பொருள் விளக்கமும் செய்யும் முதற்கருவிகளாக உரையின் முற்பகுதியில் விளங்குகின்றன. நூலைப் பயிலும்போது அவ்வப்போது எழும் ஐயங்களைப் போக்கி அறிவு பெறவும், அணியழகைத் தனியே துய்த்து இன்பம் பெறவும் இப்போக்குத் துணை செய்யும்.

3.8 திருமூலதேவநாயனார் புராணத்தின் இறுதியில் ஆசிரியர் வரலாறு என்றபகுதியைத் துடிசை கிழார் சிதம்பரனார் எழுதியுள்ளார். அத்துடன் இராசமாணிக்கனாரின் கேதாரம், வலிவலம், திருமூலர் காலம் பற்றியசெய்திகள் உள்ளன. இவற்றுடன் பதிப்பாசிரியரின் நான்முகம் திருமந்திரச்சிறப்புக்கள் ஆகிய பகுதியும், திருமந்திரமாலைத் திரட்டும் இப்புராணத்தை ஊன்றிக் கற்கப்புறநிலையில் துணை செய்வன. இங்ஙனம் காரைக்காலம்மையார் புராணத்தின் பிற்சேர்க்கையாக அற்புதத் திருவந்தாதிப் பாடலும் உரையும் சில குறிப்புக்களும், 'திருவிரட்டை மணிமாலைப் பாடலும் உள்ளன. இவை அம்மையார் புராணத்தைப் படிக்கவும் அவர்தம் படைப்பை உரையுடன் பயின்று பயன் பெறவும் உதவும் திறன் பெற்றவை.



3.9. பல்வேறு படங்களை உரையாசிரியர் இணைத்துள்ளமை கொண்டு பல செய்திகளைப் படிப்போர் அறிதற்கு வாய்ப்பேற்படுகிறது. சான்றாகத் திருவெண்ணெய்நல்லூரில் வழக்கு வென்ற திருவம்பலப் படத்தில் குலோத்துங்க சோழரால் அது கட்டப்பட்ட செய்தி குறிக்கப்பட்டுள்ளது. இதனால் சுந்தரர் வரலாற்றுக்கு முன்பின் அமைந்த நிலையை அறிய முடிகிறது. இதனையடுத்துத் திருவாரூர்ப் பூங்கோயில், திருமதில், கிழக்குவெளிக் கோபுரம், திருமுன்றில், தேவாசிரிய மண்டபம் ஆகியவற்றைப் படத்தில் காணும் போது இவற்றின் அமைப்புருவம் செவ்வையாக மனத்தில் பதிகின்றன. பெரியபுராணக் களம் பற்றிய அறிவு பெற்றுப் பாடற் பொருளைக் காட்சிப்புல நெறியில் கண்டறிவதற்கு வழி காட்டுகின்றன. நிலவரை படத்தில் - சான்றாகத் திருநாவுக்கரச நாயனாருடைய சோழ நாட்டு யாத்திரைப் படம், 190 பாட்டு முதல் 300 மட்டும் வரையில் காட்டும்போது—அவர் தம் அடிச்சுவட்டைப் பின்பற்றி நிகழ்ச்சிகள் பற்றிய பொருள் விளக்கம் பெற இயலும். இவையெல்லாம் 20ஆம் நூற்றாண்டில் உரையாசிரியர் தாமே அந்தந்தத் தலங்கட்கு நேரே சென்று கண்டறிந்த செய்திகளைப் பிறர் துய்க்குமாறு தந்த முறையாகும். இது இவ்வுரையின் தனித்திறனை வெளிப்படுத்தும். மற்றவுரைகளாலும் காட்சிப் புல விளக்கம் தரும் பாங்கு இதில் தலையாயதாய் அமைந்துள்ளது.

## 4. அகநிலை :

4. 1. 1. இனி இவ்வுரையில் அகநிலைபற்றிக்காணின் உரையின் எளிமை நிலையே நூலின் எல்லாவிடத்தும் பொலிந்து, நிற்கிறது. பாயிரத்தில் காணும் 'எடுக்கும் மாக்கதை' (பெ. பு. 48) என்ற பாடல்[5] உரையைப் பார்ப்போம். 'இது விநாயக வணக்கம்' என்றுரைப்பதால் பாட்டின் தலைமைப் பொருள் விளக்குகின்றது. இதன் பொருள் எனத் தனித்தனியே தொடர்களைத் தந்து பொருள் எழுதிச் செல்கிறார், விளக்கவுரை என்ற பகுதியில் எடுக்கும் என்ற சொல்லுக்குப் 'பிறவியாகிய குழியிலிருந்து எடுக்கும்' என்ற பொருளை வருவித்து ஐயடிகள் காடவர்கோன் புராணம் (9), திருநாவுக்கரசர் புராணம் (182) திருஞானசம்பந்தர் புராணம் (731) ஆகிய நூலகச் சசன்றுகளும், சிவஞான சித்தியாரிலிருந்து புறச்சான்றும் காட்டுவதில் உரையாசியர் தாம் கூறும் பொருளை நிறுவ முயலும் முயற்சி நன்கு வெளிப்படும.[7] தாம் எடுத்துக் கொண்ட நூலின் அகச்சான்றிற்கு மிகுந்த இடம் கொடுப்பது இதிலிருந்து புலனாகும். விநாயக வணக்கச் சிறப்பும், கந்த

புராணத்தில் ' என்னரேயாயினும் ' என்ற விநாயகர் பற்றிய பாடலையும்கூறி மேலும் பொருள் விளக்கம் காணுமாறு செய்வார்.

4.1.2. 'தடக்கை ஐந்து' பற்றிய விளக்கத்திற்கு ஏற்ற புராணக்கதை விளக்கத்தை எடுத்துரைப்பர். 'கடம்' என்ற தனிச்சொற்பொருள் கூறுவதால் அரிய சொற்களுக்கு வேண்டு மிடத்தில் பொருள் கூறும் பாங்கு வெளிப்படும். ஃ அம்மதமும் பெரும்பான்மைபற்றி மும்மதம் எனக்கூறும் வழக்கு நெறியையும் சுட்டுவர். ' இன்தமிழ் ' என்பதில் இனிமைக்குப் பல விளக்கங்கள் தந்து இறைவனரும் பேறு எனக்காட்டி இதனைப் பிறிதினியைபு நீக்கியது என்பர். சைவநூலுக்கு பொருள் உரைக்கும் போது அச்சமயநெடு விளங்க 'இனிமை' என்பது ' இறையருள் ' என எடுத்துக்கொண்ட நூலிற்கேற்ப பொருள் கூறும் போக்கு அமைகிறது.

4. 2. பொருள் கூறி விளக்கவுரை தந்து, அகப்புறச் சான்றுகள் காட்டி, அருஞ்சொற்பொருள் கூறி, எடுத்துக் கொண்ட பொருளுக்கு இயைய விளக்கம் தந்து செல்லும் போக்கினால் எல்லா இடங்களிலும் எளிய நடையையே உரையாசிரியர் கையாள்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 5. கல்வெட்டுச் சான்றில் விரியும் செய்தி

5.1. திருநகரச் சிறப்புப் பகுதியில் மனுநீதிச் சோழன்கதை காணப்படுகிறது. அப்பொருளுக்கேற்ப அங்குத் திருவாரூர்த் தியாகராசர் கோயில் இரண்டாம் பிரகாரம் வடபுறச் சுவரில் காணும் கல்வெட்டை (ஏ. ஆர். 164 : 1894) அளித்துள்ளார். புராணச் செய்தியின் விரிவாகக் கல்வெட்டமைந்திருப்பதைச் சுட்டி விக்கிரம சோழன் காலத்தில் (கி. பி. 1118-1135) மனுவின் கதை புகழ் பெற்று விளங்கியதை உணர்த்துவார். அத்துடன் பெரிய புராணத்தில் நகரச் சிறப்புக்கு இன்றியமையாததை மட்டும் கொண்டு கூறிப் போந்த ஆசிரியரின் நிலையையும் உரையாசிரியர் எடுத்துக் காட்டுவார்.

5.2. கல்வெட்டையும் இன்றைய ஊர் நிலையையும் கொண்டு கோயில் ஒழுங்கு முறை, அகம்படித் தொண்டு செய்வோர், மக்கள் நிலை ஆகியவற்றைக் ' குறிப்பு ' என்ற தலைப்பில் உரையாசிரியர் எழுதிச்செல்லும்போது பெரிய புராண அகச் செய்திநிலையும், புறச்செய்தி விளக்கமும் கிடைக்கின்றன. இது இவ்வுரையின் தனித்திறனாக அமைகிறது.



## 6. உரைத் தொடக்க நிலை

6.1. ஒவ்வொரு புராணமும் தொடங்கு முன் - சான்றாகத் திருநீலகண்ட நாயனார் புராணத்தின் தொடக்கத்தில் தொகை, வகை, விரி என மூன்று பகுதிகளாகக் கொள்வர். திருத்தொண்டத் தொகையில் காணும் ' திருநீலகண்டத்துக் குயவனார்க் கடியேன் ' என்ற ' திருத்தொண்ட தொகை' அடியைக் கொடுப்பர். பின் ' திருத்தொண்டர்த் திருவந்தாதி 'யில் ' சொல்லச் சிவன்றிருவாணை ' என்ற பாடல் முழுமையையும் வகை எனத் தருவர், விரி என்ற தலைப்பில் பெரிய புராணப் பாடல்களைத் தரும்போது நாயனார் புராணங்கள் எவ்வாறு வரலாற்று முறையில் வளர்ச்சி பெற்று விளங்குகின்றன என்பதைக் காட்டுவர்.

6.2. தொகைபற்றிய உரையில் பெயர்விளக்கம் கூறும் போது ' திருநீலகண்டம் ' என்பது உலகவழக்குப் பெயர் எனவும் அத்துச்சாரியை புணர்த்தியது இலக்கண நிலை எனவும் உரைப்பர், வகையில் முதனூலாட்சி எவ்வாறு நிலை பெற்றது என்பதை எடுத்துரைப்பர். விரிநிலையில் பொருள் கூறி விளக்கவுரை கூறுவதுடன் இறுதியில் பாடபேதமும் சுட்டுவர். இம்முறை நூலிலுள்ள 4281 பாடல்களுக்கும் முழுமையாகச் செல்கிறது.

## 7. உள்ளுறை பொருள்

7. 1, பொருள் கூறிச் செல்லும் போது
" ... மனையிலோர் மருங்கு காப்புறு
மெல்லையில் வைத்துவ ந்திறையை எய்தினார்"
(பெ. பு. 376)

என்ற பெரியபுராணப் பாடலின் நேர்பொருள் தவிர, உள்ளுறை பொருள் காணும் வகையில் மனை - தமது உடல் ; ஓர் மருங்கு - மனம் ; காப்புறும் எல்லை - திரு நீலகண்ட ஆணை போற்றிய உணர்வு ; வைத்து - அவ்விடத்தே அதுபோலவே இதனையும் கொண்டு ; இறையை எய்தினார் - அதனால் இறைவனைக் கூடினார் எனப் பொருளைத் தனித்த நிலையில் உள்ளுறை எதுவென எடுத்துரைப்பர். ஆயின் இத்தகைய பகுதிகள் அருகிய நிலையிலேயே உள்ளன.

## 8. பல செய்திகள்

8. 1. 1. திருநீலகண்டர் புராண முடிவில் 'சுருக்கம்' என்ற தலைப்பில் புராணச் சுருக்கத்தை எளிய உரை நடையில்

தந்துள்ளார். இதனால் செய்யுளைப் படித்தறிய இயலாதவர்கள் இச்சுருக்கத்தைப் படித்துப் புராணத்தை உணருமாறு செய்துள்ளார். இதன் இறுதியில் 'கற்பனை' என்ற தலைப்பில் "கருத்துக்களை வரிசைப் படுத்தித் தரும்போது இப் புராணத்தின் அடிக் கருத்தாம் அடியவர் கூட்டத்தில் குலப் பெருமை, சிறுமை பற்றிய எண்ணமில்லை; பரத்தையர் கேண்மை கடியப்படுவது; காமம் கொடிது; சிற்றின்பம் சிறிது; பேரின்பம் பெரிது - என்ற கருத்துக்களை எடுத்துரைப்பர். இவ்வாறு உரைப்பது மற்ற உரைகளில் அருகிக்காணும் தனிச் சிறப்பாகும்.

8.1.2. விறன்மிண்ட நாயனார் புராணத்தில் பெரிய புராணத்தில் இல்லாமல் மக்கள் வழக்கில் வழங்கும் கதைகள் அவற்றிற்குச் சான்றாக இன்றுள்ள ஆண்டிப்பந்தல், ஒட்டுத் தியாகர் கோயில் போன்ற இடங்களையும் இக்காலத்தே காணும் எண்ண நிலைகளையும் பற்றிப் பல ஆய்வாளர்கள் தரும் குறிப்புக்களை அவ்வாறே கொடுத்து 'இவற்றில் புராணத்துடன் மாறுபடாதன கொண்டு ஏனையவற்றைக் கர்ண பரம்பரை வழக்கென விடுக்க' என்று உரையாசிரியர் உரைப்பர். இதனால் இவர் தமக்குக் கிடைத்த செய்திகளை மறைக்காமல் அளிக்கும் திறனும், அவற்றில் படிப்போர் எவ்வாறு பாகுபடுத்திப் படிக்க வேண்டும் என வரையறுக்கும்முறைமையும் தெரிகின்றன.

8.2.1. முதல் தொகுதியின் இறுதியில் முதல் சுருக்கத்தில், காணும் புராணங்களின் சரித ஆராய்ச்சி உரையை, சி. எம். இராமச்சந்திர செட்டியார் எழுத அதனையும் உரையாசிரியர் ஏற்று இணைத்துள்ளார். வரலாற்றாராய்ச்சியாளர் கருத்தை ஏற்றுத் தம் உரைக்குப் பின்னணியாக அமைத்திருப்பது இவ்வுரையின் மற்றோர் திறனாம்.

8.2 2. சைவப் பேரறிஞர் செங்கல்வராய பிள்ளை, மலையப்ப கவுண்டர் போன்றவர்கள் எழுதி விடுத்த சில திருத்தங்களையும், குறிப்புக்களையும் தம் உரையின் முன்பகுதியில் கொடுத்திருப்பதால் பெரிய புராணம் பயில்வோர் அவற்றை அறிந்துகொள்ள முன் வாய்ப்புத் தருவதால் (பெ. பு III தொகுதி XVI - XVIII) உரைத்திறன் மேலும் வலுப் பெறுகிறது.

8.3.1. தடுத்தாட் கொண்ட புராணத்தில் ஓலை காட்டி ஆண்ட வழக்குப் பற்றி உரை எழுதும் போது உரையாசிரியரின் இக்காலச் சட்ட நுண்மாண் நுழைபுலம் நன்கு புலப்படுகிறது. ஓலையின் பழமை நோக்குதல் (204) செய்கை (205)



மேலெழுத்திட்டார்கள் ஆசிலா எழுத்தை நோக்குதல் (206) தான் வேறு எழுது கைச்சாத்து (207) அரண்தரு காப்பு, உடன் ஒப்பு நோக்கல் (208) போன்றவற்றுடன் 'ஆட்சியிலாவணத்தில்' (202) என்ற பாடலுங்கு அமைந்த உரை உரை ஆசிரியரின் தனித் திறனைக் காட்டும்.

8.3.2. நீதிநிலை பண்டுதொட்டு இன்று வரை ஆட்சி ஆவணம், காட்சி எனும் நிலையில் எங்ஙனம் உள்ளது என்பதைத் தம் வழக்கறிஞர் வாழ்வு கொண்டு உரை காண்பர்.

தேவாரப் பாடல்களின் சான்றும், அவற்றிற்கெழுதிய குறிப்புரையும் கொண்டு திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் புராணம் பகுதிகளை விளக்கக்கண்டுள்ள திறன் தனிப்பட்டதாம்.

## 9. பலபொருள் விளக்கம்

9 1 சொற்பொருள் கூறுவதில் இவ்வுரையாசிரியர் அணிநயத்தை அளவுடன் கையாண்டுள்ளார். 'பேர்பரவை' என்ற பாடலில் (294)

1. பெயர் பரவை
2. பெரு + உம்பர் + அவை — (பெரும்பரவை) — பெரிய தேவர் சபை
3. பரவு + ஐ — (பரவை) துதிக்கத்தக்க தெய்வம்
4. மணமுறுவல் அரும்பர் அவை (அரும்பரவை) — பற்கள் முல்லை அரும்புகளேயாம்.

5) சீர் + பரவி + ஐ ஆயினாள் (சீர்பரவை) இலக்குமி விரும்பும் அழகு உடையாள்.
6) ஏர் பரவை இடைப்பட்ட — அழகிய பரவு தலிடையில் அகப்பட்ட
7) என் ஆசை எழுபரவை — எனது விருப்பமானது எழு கடல் போன்றதாம்.

எனப் பரவை என்ற சொல் ஏழுமுறை வந்த நிலையை 'ஒரு பாட்டில் எழு பரவையை அடக்கிய நாவலர்' என்று சேக்கிழாரை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாராட்டிய உரையுடன் எடுத்துரைத்து விளக்கம் காண்பர். இதற்கு மேலும் 'பரவை' என்பதற்குப் பலபொருள் கூறித் தம் அறிவு நுட்பம் வெளிப்படச் செய்வர். இத்தகைய அணி

நயங்களைச் சேக்கிழார் செய்யுளணிக் குறிப்புக்கள் எனப் பின்வந்த தொகுதிகளில் முற்பகுதியில் அளிப்பர் (II தொகுதி XXIV — XXVI).

## 10. முடிவுரை

10.0. சி. கே. சுப்பிரமணிய முதலியார் உரைத்திறனைப் பெரியபுராணப் பேருரையும், அதனிடையே தேவாரம், காரைக்காலம்மையார் பாடல்கள், திருவாரூர் மும்மணிக்கோவை போன்றவற்றிற் கெழுதிய உரைகளும் கொண்டு அறிய முடிகிறது. இவ்வுரையை இக்காலத்துப் பலதுறை அறிஞர்களும் போற்றியுள்ளதாலும் இதன் உரை அமைப்பாலும் இதன் திறன் நன்கு புலப்படும்.

### உரைத்திறன் வெளிப்பட்ட நெறிகள்

10.1. நூலுக்கு உரை எழுதுமுன் அந்நூலை நன்கு நூற்பதுடன் அதற்குரிய பின்னணி நூல்களைக் கற்றல்.

10.2. அந்நூலின் பல பதிப்புகளையும், ஓலைச் சுவடிகளையும், முன்னர் வெளிவந்த உரைகளையும், குறிப்புக்களையும் திரட்டி அவற்றின் அடிப்படையில் பேருரை காணல்.

10.3. நூலின் புறத்தே முன்னொளி காட்டும் நூல்களை முழுமையாக அளித்து அந்நூலை அறிதற்குரிய களத்தைப் பண்பட அமைத்துத்தருதல்.

10.4. நூலின் உண்மைப்பாடல் எது வெள்ளிப்பாடல் எது என அறிய வழி காட்டல்.

10.5. சொல்வடிவப் பாடல்களுக்குப் படங்கள் கொண்டு விளக்கிக் காட்சிப்புல அறிவுக்கு விருந்தளித்தல்.

10.6. உரை நெறியில் தொகை, வகை, விரியைக் கைக்கொண்டு வேண்டுமிடத்துத் தொடர்ப் பொருள், சொற்பொருள், கதை விளக்கம், இலக்கணக் குறிப்பு, பாடபேதம், அணிநயம் ஆகியவை காட்டுதல்.

10.7. உரையின் நடுநிலைப் பண்பு புலப்படும் வகையில் தக்க அறிஞர்கள் கருத்துப் பிழிவை வேண்டுமிடத்துத் தருதல்.

10.8. படிப்போர் பொருளை நன்குணரச் சுருக்கமும் சிறப்புப் பொருள் தொகுப்பும் தருதல்.



10.9 சிறப்புத்துறை அறிவு, அணிநயம் போன்றவற்றை அளவாகக் குறிப்பிட்டு எடுத்துக் கொண்ட சமய நூலின் கருத்து எல்லா மக்களிடமும் எளிதாகப் பரவ எளிய நிலையில் உரை எழுதுதல்.

### அடிக்குறிப்புக்கள்

1. பெரியபுராணம் I சி. கே. சுப்பிரமணிய முதலியார் உரை, மதிப்புரைகள் 1960, ப. 6.
2. „ „ ப. 2.
3. இச்செய்தி தர்மபுர ஆதீன சந்நிதானங்கள் 6. 9. 1943 அளித்த ஆசியுரையால் தெரிகிறது.
4. கோயமுத்தூர் சிறையில் வ. உ. சிதம்பரனார் அடைபட்டிருந்த போது அவர்க்கு வேண்டும் உதவிகளை இவ்வுரையாசிரியர் செய்தார். அவர் வழக்கிலும் உதவி புரிந்தார். அந்நன்றி மறவாத வ. உ. சி. தம் மகனுக்கு இவர் பெயரை இட்டார்.
5. பெரியபுராணம் II சி கே. சு. உரை 1940 ப. 1019
6. எடுக்கு மாக்கதை யின்றமிழ்ச் செய்யுளாய்
   நடக்கு மேன்மை நமக்கருள் செய்திடத்
   தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீண்முடிக்
   கடக்க ளிற்றைக் கருத்து ளிருத்துவாம்
7. இரண்டாம் தொகுதியில் மேற்கோள் காட்டிய நூல்கள் மட்டும் 87 உள்ளன.

### துணை நூல்கள்


1) அரவிந்தன் உரையாசிரியர்கள் மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1977.

2) சேக்கிழார் பெரியபுராணம் I (1960) II (1940 III (1943) IV (1949) V 1950 VI 1953 VII (1954) கோவை தமிழ்ச்சங்கம், கோயம்புத்தூர்.

3) Veerasami V. Grammar of Periya puraanam with Index (Unpublished Ph. D. Thesis) Kerala University, Trivandrum, 1966.

துணர் 61 மலர் 9 தொடர்ச்சி :

## நன்னூல் — ஐய வினாக்கள்

பேராசிரியர். ச. பாலசுந்தரம்.

வினையியல்; சூ.320: செய்பவன் கருவி நிலம் செயல் காலம்
செய்பொருள் ஆறுந் தருவது வினையே.

"உண்டான் உறங்க ஒழித்தான்பித்தாக உண்டாக்கும்
வண்ணம்
கண்டான் சுவைகொள்கரும்பே சகலகலாவல்லியே"

என்னுமிடத்து 1) உண்டான், ஒழித்தான் கண்டான் என்பவை ஆறும்தரும் என்பதற்கு ஏற்ப நிற்றலின் இவை வினைச் சொற்களா ? 2) வினை எனப்படுவது வேற்றுமை கொள்ளாது" என்னும் தலையாய இயல்பினைச் சுட்டாதது குன்றக் கூறலும் பிழைபடக் கூறலுமாகாவா ? 3) ஈண்டு வினையென்றது முற்று வினையை மட்டுமா எச்சவினையை உள்ளடக்கியதா ? அடக்கியதெனின் வினையெச்சம் செய்பவனைத் தருமா? அடக்கவில்லையெனின் இது பொதுவிதியாகுமா ?

சூ. 321 : பொருள்முதல் ஆறினும் தோற்றி முன்னாறனுள்
வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக் குறிப்பே.

எனின் ? 4) அற்று, இற்று, யார், எவன் எனச்சுட்டு, வினாக்களின் அடியாக வருபவை பொருள் முதலாறு என்றவற்றுள் யாதனுள் அடங்கும் (5) வனைந்தான் என்புழிக்குடம் என்பது செயப்படுபொருளாக வந்து இயையுமாறு போலப், பொன்னன் என்புழிப் 'பொன்' என்பது உடைமைப் பொருளாக வந்து இயைதலின் "வினை முதல் மாத்திரை விளக்கல்' என்பது மயங்க வைத்தலாகாதா ?

சூ. 323 : பொதுவியல் பாறையும் தோற்றிப் பொருட்பெயர்
முதலறு பெயரலது ஏற்பில முற்றே.

எனின் ? 6) அவன் வந்தான் அது வந்தது யாவர் வந்தவர் எனவரும் சுட்டுப்பெயர் வினாபெயர்கள் அறுவகைப் பொருளுள் யாதனுள் அடங்கும்

சூ. 324 : ஒருவன் முதலைந்தையும்............
... ... ... ... ... ... ... ...



முவைந்திருமூன் றாய்முற்று
வினைப்தம் ஒன்றே மூவொன்பானாம்.

7) இச்சூத்திரத்தான் எய்திய சொல்லிலக்கணப் பயன் யாது? தொகை பெறுதல் எனின் பிறவற்றையும் அங்ஙனம் எண்ணித் தொகை கூறாமை குன்றக் கூறலாகாதா ?

சூ. 340 : செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டிற்
காலமும் செயலும் தோன்றிப் பாலொடு
செய்வ தாதி அறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச்சம்மே.

8) செய்வது முதலாய ஆறனுள் செயல் என்பது பொருளா? 9) பால் (வினை விகுதி) எஞ்சி நிற்குமெனின் இடம் விளங்கி நிற்கும் என்பது கருத்தா ? விகுதியே இடமும் தோற்றுவிக்குமெனின் விகுதி எஞ்சி நிற்கும் என்னாது ஒருசார் பொருளுக்குரிய சிறப்புச் சொல்லாகிய 'பால்' என்னும் சொல்லாற் கூறியது வழுவாகாதா? "தொழிலும் காலமும் தோன்றிப் பால் வினை ஒழிய நிற்பது வினையெச்சம்மே" சூ. 342) ஒன்பதாவது வினா இதற்கும் பொருந்தும்.

10) பெயரெச்சம் வினைச்சொல் வகை மூன்றனுள் ஒன்று என்பது 322 ஆம் நூற்பாவாற் கொள்ளக்கிடத்தலின் "உண்ட சாத்தன்" என்னும் பெயரெச்சத்தொடர்க்கு எழுவாய் யாது. (11) உண்ட என்னும் எச்சம் பால்காட்டும் (விகுதி) உறுப்போடு நிறையுமிடத்து உண்டனன், உண்டான் என விரிதல் வேண்டும். விரிந்தவழி முற்றுவினையாகுமன்றே ? முற்றியவழி அத்தொடர்க்கு எழுவாய்யாது ? (12) தொழிலும் காலமும் தோற்றிப்பால் வினை ஒழிய நிற்பது வினையெச்சத்திற்குரிய இலக்கணம் எனக்கூறித் தெரிநிலை வினையெச்சம் செய்து செய்பு செய்யா முதலிய வாய்பாட்டு முறைமையான் அமைந்து வரும் என்கின்றார் (சூ. 343).

13) இனி, உண்டு வந்தான் என்னும் வினையெச்சத் தொடர்க்கு எழுவாய் யாது? 14) அவ் எச்சம் பால் காட்டும் உறுப்பொடு (விகுதி) விரிந்த வழி - உண்டனன் அல்லது உண்டான் என விரிதல் வேண்டும் அங்ஙனம் விரிந்த வழி அத்தொடர்க்கு எழுவாய்யாது. 15) இவர் கூறும் இவ்விதிகளின்படி வினைமுற்றே பெயரெச்சமாகவும் வினையெச்சமாகவும் குறைத்து நிற்கும் என்றாகின்றது. அங்ஙனமாதல் ஏற்புடையதா ?

16) உண்ட சாத்தன் என்னும் எச்சத்தொடர்குரிய எழுவாயே உண்டான் சாத்தன் என முற்றிய வழியும் வருமா — வரின் முற்றிய தொடருக்குரிய பொருள் யாது? வராது எனின் காரணம் யாது?

17) பெயரெச்சவிதி கூறும் சூத்திரத்துள் 'செய்யும்' என்னும் வாய்பாட்டினை, எதிர்காலத்திற்குரியதாகக் கூறி யுள்ளார், அது நிகழ்காலம் காட்டாதென்பது இவர் கருத்தா?

பொதுவியல் :- (1) பொது என்பது இரண்டும் இரண்டிற்கும் மேற்பட்ட பொருள்களிடத்துப் பண்பும் தொழிலு மாகிய குணங்கள் பொருந்தியுள்ள நிலைமையைச் சுட்டும் குறியீட்டுச் சொல்லாகும். அதனான் இவ்வியலுள் கூறப் பெறும் இலக்கணங்கள் நால்வகைச் சொற்கும் ஒப்பவரும் எனக் கொள்ளலாமா? ஒழிபியல் எச்சவியல் - என்பவற்றினும் இது தெளிவுடையது என்பது இவர் கருத்தா?

சூ. 354 : உருபும் வினையும் எதிர்மறுத்துறைம் பினும்
திரியாததும் ஈற்றுருபின் என்ப.

2) இச்சூத்திரத்துள் வினை என்றது எச்சத்தையும் உள்ளடக்கியதா?

3) அடக்கியதெனின் செய்யும் என்னும் வாய்பாட்டு எச்சமும், முற்றும் செய்யியர், செய்யிய என்னும் வாய்பாட்டு வினைஎச்சங்களும் ஈறு திரியாமல் எதிர்மறையில் வருமா? 'சொற்றிரியினும் பொருள் திரியா வினைக்குறை (சூ. 436) என்றவர் ஈண்டு இங்ஙனம் கூறுதல் மேற்கோள் மலைவாகாதா?

சூ. 361 : பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளின் அவற்றின் உருபிடை
ஒழிய இரண்டு முதலாத் தொடர்ந் தொரு
மொழிபோல் நடப்பன தொகைநிலைத்
தொடர்ச்சொல்.

4) பழந்தின்னி, பொற்றொடி, நெல்வேலி, மலையருவி, அரசாட்சி, விண்மீன் எனவும் செந்தாமரை, கனிமொழி, அரிவாள் எனவும் ஒருசொல் நீர்மையவாக வரும் தொகைமொழி கட்கும், நிலங்கடந்தான், தலை வணங்கினான் எனவரும் தொகைநிலைத் தொடர்மொழிகட்கும் வேறுபாடறியாமல் இடையே உருபு தொக்கனவற்றையெல்லாம் தொகைநிலைத் தொடர்ச் சொல் என்றல் ஏற்புடையதாகுமா?



5) நிலங்கடந்தான் தலை வணங்கினான் என எழுவாய் மறைந்து நிற்கும் உருபு தொக்கதொடர் மொழிகளைத் தொகை மொழி எனல் பொருந்துமா அற்றன்று நிலங்கடந்தான் வந்தான், தலைவணங்கினான் பெற்றான் என அவை எழுவாயாகப், பயனிலை கோடலின் பொருந்துமெனின் ஆண்டுக் கடந்தான், பெற்றான், என்பனவை வினையாலணையும் பெயர் களாமன்றி அவை வினையாகுமா? ஆகா எனின்? "பெயரொடு பெயரும் வினையும்" எனல் ஒவ்வுமா?

சூ. 363 : இரண்டு முதலாம் இடையாறுருபும்
வெளிப்படலில்லது வேற்றுமைத் தொகையே.

(6) பெயரியலுள் 3, 5, 6, 7 ஆகிய வேற்றுமைகட்குப் பல உருபுகளைக் கூறியவர் ஈண்டு ஆறு என மாறுகொள் கூறியது ஒருபுறம் நிற்க. அவர்க்கண்டான் - நிற்கண்டார் என உருபின்றி விகாரப்பட்டு வரும் தொடர்கள் வேற்றுமைத் தொகையாகுமா?

சூ. 364 : காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை.

7. காலத்தைத் தரும் இடைநிலை இறுதிநிலை இடைச் சொற்கள் இல்லாதவழி வினைப்பகுதிகள் முதனிலைத் தொழிற் பெயர்களாவதன்றிப் பெயரெச்ச வினைகளாகுமா? கத்தல் என்பது மறைத்தல் என்னும் பொருளுடையதன்றே? அடுகளிறு, தாழ்குழல் என்னும் வினைத்தொகையுள் அடு, தாழ் என்னும் முதனிலைகளில் மூன்று காலங் கட்கும் உரிய இடைச் சொற்கள் ஒருங்கு மறைந்து நிற்குமா — ?

சூ. 365 : பண்பை விளக்கும் மொழி தொக்கனவும்
ஒருபொருட்கிருபெயர் வந்தவும் குணத்தொகை

பண்பை விளக்கும் மொழி என்பது யாது? ஆகிய என்னும் வினைஇடைச்சொல் என்கின்றனர் உரையாளர். செந்தாமரை என்னுமிடத்துச் செம்மை தாமரைக்கு ஆக்கப்பொருளா? "இன்னது இதுவென வருஉம் இயற்கை" என்னும் தொல்காப்பியத் தொடரை இவர் உணர்ந்தார் என்று கொள்ள முடியுமா?

சூ. 366 : உவமவுருபிலது உவமத்தொகையே"

எனின்? "அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றேஉலகு" இங்ஙனம் உருபு மறைந்து வருவன வெல்லாம் தொகை மொழியாகுமா?

சூ. 369 : ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி''

எனின் ? வேற்றுமைத் தொகை முதலாய ஐந்தும் இரண்டு இரண்டு தொகை மொழியாகவே நிற்குமா ? 'பொற்றொடி' இத் தொகைமொழி பொன்னாலாகியதொடி எனத்தொடியின் கண் நோக்குடையதாயின் பெண்மகள் என்னும் பிறிதுபொருளை எவ்வாறு தரும். பெண்மகள் என்னும் அன்மொழிப் பொருளைத் தருமாயின்வேற்றுமைத் தொகைப்பொருள் நோக்குடையதாகுமா? கல்லைக் கண்டால் நாயில்லை நாயைக் கண்டால் கல்லில்லை என்னும் ஏரண நூல் முறைமைக்கு இது முரணாகாதா ? பொற்றொடியை உடையாள் என விரிதலின் ஒக்குமெனின் பொற்றொடியை அணிந்திருக்கும் நிலைமை கண்டு கூறப்படு மாயின் அஃது அடையடுத்த ஆகுபெயரில் பாற்படுவதன்றி அன் மொழித் தொகையாகுமா ?

சூ. 382 : இறப்பு எதிர்வு நிகழ்வெனக் காலம் மூன்றே

காலம் நால்வகைச் சொற்கும் பொதுவா ? வினைச் சொற்கு மட்டும் உரியதா ? வினைச்சொற்கே உரியதெனின் அதனைப் பொதுவியலுட் கூறியது ஏற்புடையதாகுமா ?

சூ. 391 : எழுத்திற்றிரியாப் பொருள்திரி புணர்மொழி
இசைத்திரிபால் தெளிவெய்துமென்ப

" என்ப " எனின் ? இவ்வாறு கூறிய முதல் நூலாசிரியர் யாவர் ? [தொல்-எழுத்து-புணரியல் 39, 40 ஆகிய நூற்பாக்களின் பொருளை ஓர்ந்துணராமல் திரியக் கூறிய உரையாசிரியர் உரையைக் கருதி இந்நூற்பா அமைந்துள்ளது. அத்தொல்காப்பிய நூற்பாக்களின் செவ்வுரையை எனது ஆராய்ச்சிக் கண்டிகை யுரையுள் கண்டு தெளிக] இனி, குறும்பரம்பு - செம்பொன் பதின்றொடி என்றாற் போல்வன முன்னும் பின்னும் உள்ள சொற் பொருள்களின் இயைபான பொருள் நோக்கிற் கியையப் பிரித்து பொருள் தருவன ஆதலின் குறும்பர் + அம்பு எனவும் குறும் + பரம்பு எனவும் பிரிந்தவழிஎழுத்திற்றிரியாமை யாங்ஙனம்? புணர்ந்து ஒரு தொடராக நிற்குமிடத்துக் கவர் பொருளுடைமை கருதிக் கூறினார் எனின் அஃது புணர்ச்சி பற்றிய இலக்கணமாய் நிற்றலைச் சொல்லிலக்கணப் படலத்துட் கூறியது ஏற்புடைய தாகுமா ?

உரியியல் :

சூ. 420 : வேற்றுமை, வினை சாரியை ஒப்புருபுகள்
தத்தம் பொருள இசைநிறை அசைநிலை



குறிப்பென் எண்பகுதியிற் றனித்தியலின்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத்து
ஒன்றும் பலவும்வந் தொன்றுவது இடைச்சொல்.

இதன்கண் வினையுருபுகள் என்றது எவற்றை ? உரையாளர் அன் ஆன் முதலிய வினையுருபுகள் எனஇன்றனர். வந்தனன், கண்டான் எனவும், அந்தணன், அரசன், கன்னான், வாயிலான் எனவும் பெயர்க்கும் வினைக்கும் பொதுப்பட வரும் எனப் பதவியலுள் (சூ. 140) கூறி ஈண்டு இங்ஙனம் கூறுதல் மலை வாகாதா ... மற்று இடைநிலைகளையும் சாரியைகளையும் உருபெனக் கூறுதல் மரபாகுமா ?

உரியியல் :

சூ. 442 : பல்வகைப்பண்பும் பகர்பெயராகி
ஒருகுணம் பலகுணம் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன உரிச்சொல்

பகர்பெயராகி வருமெனின் உரிச்சொல்லை ஒரு சொல்வகையாக முன்னர்க்கூறியது பொருந்துமா ? " பெயர்வினை ஒருவா என்பதற்கு விளக்கம் யாது ? செய்யுட்குரியன எனின் அவை வழக்கிற்குரியன அல்ல என்பது விதியா ? கடியென் கிளவி (சூ. 457) மாற்றம் நுவற்சி (சூ. 458) முழக்கிரட்டு (சூ. 452) என்ற நூற்பாக்களில் எடுத்துக் கூறப்பெற்ற சொற்கள் யாவும் பெயராகவே வருமா ? மற்று இவையும் உயிர்க்குணம் (சூ 452) பொருட்குணம் (சூ. 454) தொழிற்குணம் (சூ. 453) பற்றிக்கூறப் பெற்ற சொற்களும் செய்யுட்கே உரியவையா ?

இனி சொல்லிலக்கணம் பற்றிப் பேசும் அதிகாரத்தில் உயிர் களைப் பற்றிய விளக்கங்களைக் கூறியது ஏற்புடையதாகுமா ? அற்றன்று இவையும் சொல்லிலக்கணமே எனின் ? அவற்றான் எய்திய இலக்கணக் கோட்பாடுகள் யாவை ?

மற்று " வானவர் மக்கள் நரகர் விலங்குபுள் ஆதிசெவியறி வோடு ஐயறிவுயிரே " (சூ. 449) என மக்களை ஐயறி உயிர் எனல் ஏற்புடையதாகுமா ? புலனுணர்வு கருதிக் கூறப்பட்டது எனின் ? அறிவு, அருள், மானம், நிறை, பொறை, ஓர்ப்பு, கடைப்பிடி முதலாய குணங்கள் (சூ. 452) ஐயறிவுயிர் எவ்வெற்றிற்கு உரியவை ?

(தொடர்ச்சி 544ம் பக்கம் உள்ளது)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

# சி. வை. தாமோதரம்பிள்ளை வாழ்வும் வாக்கும்

டாக்டர் ம. இராசேந்திரன்
விரிவுரையாளர்
அரிய கையெழுத்துச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இவ்வாறு பல்வேறு பணிகளிலிருந்தும் ஓய்வு பெற்ற பின்னர் சி. வை. தா. 1887 ஆம் ஆண்டு முதல் புதுக்கோட்டை 'சமஸ்தான மகாமன்றத்து நியாயாதிபதிகளில் ஒருவராயும் நான்கு வருடங்கள் கடமையாற்றினார். அதற்குப்பின் சென்னைத் திராவிடக் கிரந்த பரிபாலன சபை, நியாய பரிபாலன சபை என்பவற்றில் உறுப்பினராகவும், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் தேர்வாளராகவும் இருந்து பணிபுரிந்து வந்தார். அவரது உழைப்பைப் பாராட்டி 1875 ஆம் ஆண்டு இராவ்பகதூர் பட்டம் வழங்கிச் சென்னை அரசாங்கம் சிறப்படைந்தது,

இந்தகைய சிறப்புகளுக்கும் பெருமைகளுக்கும் உரிய சி. வை. தா. இந்த நூற்றாண்டின் தொடக்க நாளன்று 1—1—1901 காலை 9. 30 மணியளவிலே இயற்கையடைந்தார். அவரது பெருமையைக் கருதி அவருக்கு 'அம்மையில் விசேட முத்திரையும் இலங்கை அரசு வெளியிட்டது', 11

(548ம் பக்க தொடர்ச்சி)

தமிழ்மொழியமைப்பினையும் இருவகை வழக்கினையும் தொல்காப்பிய அறிவியல் நெறியினையும் சிறிதும் அறியாத பவணந்தி முனிவரின் நன்னூலையும் தமிழிலக்கணமாக ஏற்றுத் தலைமை கொடுத்து இந்நாள்வரை பயின்றும் பயிற்றியும் வரும் தமிழர்தம் உணர்வினை நோக்க அவர் ஐயறிவுயிர் எனப் பகர்ந்தது பொருந்தும் என வாதிடாமல் தொல்காப்பிய நெறிப்படி ஆறறிவுடையராகத் திகழும் ஆய்வறிவுடைய தமிழ் மேலோர் இவற்றிற்கு நடுவு நிலையொடு விடை கண்டு கூற வேண்டுகின்றேன். இவ் ஐய வினாக்கட்கு விடைபெறும் வாய்ப்பு நேராவிடின் எவ்வாற்றானும் இந்நூலுக்குப் பின்னிடாத சின்னூல், யாப்பருங்கலம், நம்பியகப்பொருள் விளக்கம், இறையனார் களவியல் முதலாய நூல்களின்பால் எனக்குத் தோன்றியுள்ள ஐயங்களை வினவியறியும் வாய்ப்பு நேராமற் போகும் என வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



## சி. வை. தா. வின் திருமணங்கள்

சி. வை. தா. மும்முறை மணஞ்செய்தவர். தொல்லிப் பழையைச் சேர்ந்த காளிங்கராய முதலியார் கோத்திரத்து உதித்தவரும் தம் பள்ளித் தோழராய்க் கல்வி கற்றவருமான வயிரவநாதர் அம்பலவாண பிள்ளையவர்களோடு தமக்குக் கலாசாலையிலே உண்டான நட்பை நிலைபெறச் செய்வதற்காக அவரது சிற்றன்னையாரது வயிற்றிலுதித்த வள்ளியம்மையை மணந்தார். வள்ளியம்மை இரண்டு குழந்தைகள் பெற்று நோய்வாய்ப்பட்டிறக்கவே அவரது சகோதரியான நாகமுத்தம்மாளை 1860 ஆம் ஆண்டு மணம்புரிந்தார். இத் திருமணத்தின் பேறாய் மக்கள் அறுவர் பிறந்தனர். கனகரத்தினம்பிள்ளை, அமிர்தலிங்கம்பிள்ளை, பொன்னம்மாள், சோமசுந்தரம்பிள்ளை, அழகசுந்தரம், சிவபாக்கியம் என்பவர்களே அவர்கள் ... ... மனைவியர் ஒருவர்பின் ஒருவராய் உயிர்துறந்தமை சி. வை. தா. வுக்குத் துன்பத்தைத் தந்தபோதிலும் பிள்ளைகளால் அதனை மறந்திருந்தனர். ஆனால் மகனாகிய அமிர்தலிங்கம் நோயுற்று 1889 இல் இறந்தபோது ஆற்றொணாத் துயரடைந்தார். அக்காலத்தில் உத்தியோகம் தமக்கு அவசியமற்றதென எண்ணி 1890 இல் அதை விட்டு நீங்கினார். தாம் பிறந்த இடமாகிய யாழ்ப்பாணத்தில் இச்சந்தர்ப்பத்தில் சிலகாலம் தங்கியிருந்தார் ... சி. தா. அழகசுந்தரம் சிறுவயதினராக இருந்தமையாலும் குடும்ப காரியங்களை நடத்துவதற்குப் பிள்ளையவர்களுக்கு ஒரு துணை தேவைப்பட்டது. இதனால் அவ்வருடத்தில் மூன்றாவது தாரம் மணம் செய்தனர்', 12

இவ்வாறு குடும்ப வாழ்விலும் பெருவாழ்வு வாழ்ந்திருக்கின்றார் சி. வை. தா.

## தமிழ் தந்த தாமோதரம் :

17—9—1950 ஆம் நாளிட்ட ஈழகேசரியில் பண்டிதர் சி. கணபதிபிள்ளை எழுதிய கட்டுரையின் தலைப்பு 'தமிழ் தந்த தாமோதரம் பிள்ளையின் பரமோபகாரம்' என்பதாகும். வெறும் வாழ்க்கை நிகழ்ச்சிகள் வரலாறாவதில்லை. வரலாற்றில் ஒருவர் இடம் பெறுதற்கு வாழ்க்கை நிகழ்ச்சிகள் மட்டும் பயன்படா. சி. வை. தா. வாழ்ந்த காலத்தில் அவர் காலச் சமுதாயத்திற்கும் வருங்காலச் சமுதாயத்திற்கும் அவர் ஆற்றிய பணிகளே அவரை வரலாற்றில் நிலைபெறச் செய்திருக்கின்றன.

இறப்பிற்குப் பின்னரும் அவர் வாழ்கிறார். அவரது பணிகளைப் பாராட்டியே தமிழ்தந்த தாமோதரம் என்று அவரை மக்கள் அழைக்கின்றனர்.

அவரது பணிகளைப் பிறபணிகள் பதிப்புப் பணிகள் என இரண்டு பெரும் பிரிவுகளாகப் பகுக்கலாம்.

## பிற பணிகள்

சி. வை. தா. சிறந்த தமிழ்த் தொண்டர் எனப் பெயர் பெறுவதற்கு அவர் ஏற்றிருந்த பதவிகளைவிட அவர் விரும்பி ஆற்றிய பணிகள்தாம் காரணங்களாக அமைந்துள்ளன. அவ்வகையில் நூலாசிரியராக, தனிச் செய்யுட்களினாசிரியராக பத்திரிகாசிரியராக, சைவசமயப் பாதுகாவலராக, பள்ளிக்கூட ஸ்தாபகராக பரீட்சகராகப் பல்வேறுபட்ட நிலைகளிலிருந்து சி. வை. தா. ஆற்றிய பணிகள் போற்றப்பட வேண்டியவையாகும்.[13]

## நூலாசிரியராக சி. வை. தா.

கட்டளைக் கலித்துறை, சைவமகத்துவம், ஆறாம் வாசகப் புத்தகம், ஏழாம் வாசகப் புத்தகம், நட்சத்திரமாலை, வசன சூளாமணி, ஆதியாகம கீர்த்தனம் முதலிய நூல்களை சி.வை.தா. எழுதியுள்ளார். மேலும் அவர் பல தனிச் செய்யுட்களையும் இயற்றியுள்ளார். சிறப்புக்கவி, துதிக்கவி, சீட்டுக்கவி என்று பலவகைகளிலும் செய்யுட்களை எழுதியிருப்பதோடு, தாம் பதிப்பித்த நூல்களில் இடம்பெறும் ஆசிரிய வணக்கம், இறை வணக்கம் ஆகியவற்றையும் செய்யுளில் அமைத்துள்ளார்.

‘ நல்லைநகர் ஆறுமுக நாவலர்பி றந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே — எல்லவரும்
ஏத்துபுரா ணாகமங்க ளெங்கேப்ர சங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே யறை ’

என்று நாவலர் மறைவில் அவர் பாடிய வெண்பா அவரது செய்யுளாற்றலுக்குச் சான்றாகும். அவரது சாற்றுக்கவிகளைத் தொகுத்து ஏ. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை, இராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை கவித்திரட்டு என்று வெளியிட்டுள்ளார்.[14]



## கல்விப்பணி :

அக்காலத்தில், ‘அநேக தமிழ்ப்பண்டிதர்கள் இங்கே இருந்திருக்கிறார்கள். அவர்கள் நச்சினார்க்கினியர் ... போன்ற திறமையுடையவரல்லராயினும் தமிழ்ப்பாஷையிலே மிகவும் பாண்டித்தியம் படைத்தவர்கள். ஆயினும் இவருட் சிலர் தாங்கற்றதைத் தம் பிள்ளைகளுக்குத் தானும் சொல்லிக் கொடுக்கமாட்டார்கள். சிலர் பிறரிடத்தே ஏடுகளை வாங்கித் தாம் பிரதி செய்து கொண்டு பாட ஏட்டை இயன்ற அளவு பிழைபடுத்திவிட்டுக் கொடுப்பார்கள். ஒரு வித்துவான் தாம் கற்கும் காலத்தில் எழுதிய சில நூற்குறிப்புகளை மரணிக்குங் காலத்தில் தமக்கு முன்னே கொண்டுவந்து சுட்டுப்போடுதல் வேண்டுமென்று சொல்லிச் சுடுவித்து அதன் பின்னரே தம் உயிர் போகப் பெற்றார்’.[15] இவரைப் போன்ற தமிழர்களிடையே அனைத்து உதவிகளுடனும் ஆங்கிலக் கல்வி என்ற போர்வையில் கிறித்தவமதம் நுழைந்து கொண்டிருந்தது. அதையும் மீறி, ‘அக்காலத்திலே தமிழ் படிப்பவர்கள் உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் கொடுக்க இயலாமல் படும் கஷ்டமும் உபாத்தியாயர் பிள்ளைகளுக்குச் செய்யும் வஞ்சனையும் பிள்ளைகள் படிக்கிறதற்கு நூல்களைத் தேடும் பிரயாசமும்,[16] கொஞ்சநஞ்சமன்று. இருந்த ‘தமிழ்ப் பள்ளிக்கூடங்களெல்லாம் அங்கங்குள்ள ஒவ்வொரு வராற் கொட்டில்களிலும் தெருத்திண்ணைகளிலும் வைத்துப் பிள்ளைகளிடம் சம்பளம் வாங்கிக்கொண்டு படிப்பிக்குமிடங்களாயிருந்தன.[17]. அந்த நிலையில் 1848 இல் வண்ணார் பண்ணையிலே ஆறுமுக நாவலர் ஒரு வித்தியாசாலையைத் தொடங்கினார். அதேபோன்று சி. வை. தா. ஏழாலை என்னும் ஊரில் 1878 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 10 ஆம் தேதி ஒரு சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தொடங்கினார்.[18] அப்பாடசாலைக்குச் சுன்னாகம் முருகேச பண்டிதரைத் தலைமையாசிரியராகவும் குமாரசாமிப் புலவரை உதவியாசிரியராகவும் சி. வை. தா. நியமித்தார். அப்பள்ளிக்கூடத்தில் முதல் தேர்வில் 100 மாணவர்கள் இருந்தனர். ‘நோயின் கலக்கத்தாலும் பஞ்சத்தின் வருத்தத்தினாலும் பிள்ளைகள் முந்திய தொகையில் சுருங்கியிருந்தனராயினும் இரண்டாம் பரிட்சையிலும் அறுபதிற் குறையாமல் இருந்தார்கள்.[19]

பள்ளிக்கூடச் செலவிற்கு சி. வை. தா. தமிழகத்திலிருந்து பணம் அனுப்பிக் கொண்டிருந்தார். அதனை, ‘இத்துடன் ரூபா அறுபது அனுப்புகிறேன், ஐம்பது ரூபா தை, மாசி, பங்குனி, சித்திரை நான்கு மாதங்களுக்கு வித்தியாசாலை நிவேதனமாக

எடுத்துக் கொள்ளவும் வைகாசி மாதம் முதல் மாதம் 10 ரூபாயாகவும் மற்ற மாதம் பதினைந்து ரூபாவாகவும் அனுப்பிக் கொண்டு வருவேன். சென்ற மார்கழி வரையும் தங்களுக்கு வரவேண்டிய தொகையின் விபரங்குறித்து ஒரு கடிதம் அனுப்புக. அப்பணத்தை அவ்வப்போது சாவகாசப்படி சேர்ப்பித்து விடுகிறேன் 'இங்ஙனம் அன்பன் சி. வை. தாமோதரம் பிள்ளை '[20] என்ற குமாரசாமிப் பிள்ளைக்கு அவர் எழுதிய கடிதத்தின்வழி அறிய முடிகிறது.

புதுக்கோட்டை நீதிபதி வேலையினின்றும் விடுபட்டதற்குப் பின்னர் சி. வை. தா. பொருள் தட்டுப்பாட்டில் இருந்தார். அதனால் பாடசாலையைச் சரிவர நடத்துவதற்கு நிதி திரட்டி ஒரு சபையிடம் ஒப்படைக்க நினைத்தார். 1896 இல் பிளவை நோயால் அவர் வருந்திக் கொண்டிருந்தபோது நினைத்ததைச் செயற்படுட்த அவரால் முடியாமற்போயது. எனவே 1898 ஆம் ஆண்டு அவ்வித்தியாசாலை முடப்பட்டது. இருபத்திரண்டு ஆண்டுகளாகத் தமிழுக்கும் சைவத்திற்கும் தொண்டு செய்த அந்நிறுவனம் அவர் கண்மூடுவதற்கு முன்பே முடப்பட்டது. ஆயினும் சி. வை. தா. தமது மரவ சாசனத்தில் தமது சொத்து முழுவதையும் தமது கடைசி மனைவியிடம் பிறந்த இரண்டு மகன்களுக்கும் சில நிபந்தனைகளின் அடிப்படையில் எழுதி வைத்தார். அந்நிபந்தனைகள் நிறைவேறாமற்போயின், சொத்து முழுவதையும் 'செந்தமிழ்ப் புரிபாலனத்தின் பொருட்டு இலங்காதீவின்கண் ஓர் கலாசாலை நாட்டும் வண்ணம் இராசாங்கத்தாரிடம் ஒப்படைத்துவிட வேண்டுமென்றும், தமது ஏட்டுப்பிரதி கைப்பிரதி முதலியன திருவாலங்காட்டிலுள்ள செந்தமிழ்ப் பரிபாலன மடத்திற்கு அனுப்பிவிக்கப்படல் வேண்டும் ' என்றும் குறிப்பிட்டிருந்தார்.[21]

இச்செய்திகள், கல்விப்பணியில் அவரிடமிருந்து நாட்டத்தைக் காட்டுகின்றன. மேலும் சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வில் தமிழில் முதல் மதிப்பெண் பெறும் மாணவர்களை அழைத்துத் தமது இல்லத்தில் விருந்தளித்துத் தமது நூல்களைப் பரிசு தரும் பண்பும் சி. வை. தா. விடம் மிக்கிருந்தது. அவ்வாறு பரிசு பெற்றவர்களுள் பரிதிமாற்கலைஞர் குறிப்பிடத் தக்கவராவார்.

## பதிப்புப் பணிகள் :

சி. வை. தாமோதரம், தமிழ்தந்த தாமோதரமாக மாறியது அவருடைய பதிப்புப் பணிகளாலேயே என்றால் மிகையில்லை.



பதிப்புப் பணியில் தமிழகத்திற்கு ஈழம் தலைமை தாங்கியும் வழிகாட்டியும் வந்திருக்கிறது.

பர்சிவல் பாதிரியாருக்குத் தமிழ் கற்றுக் கொடுத்துக் கொண்டும் தமது சைவசமய ஆசாரங்களை விட்டுக் கொடுக்காமலும் கிறித்தவ மதத்திற்கு எதிராகப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார் ஆறுமுக நாவலர். அவரைக் கொண்டு பர்சிவல் பாதிரியார் பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்தார். அதே காலத்தில் தமிழகத்திலும் பைபிள் மொழி பெயர்க்கப்பட்டு வந்தது.

மொழி பெயர்ப்பு வேலை முடிவடைந்ததும் யாருடைய மொழிபெயர்ப்பை ஏற்பது என்பதில் பிரச்சினை எழுந்தது. அப்போது சென்னை சகலகலாசாலை தமிழ்ப்புலமை நடாத்திய மழவை மகாலிங்க ஐயரைக்[22] கொண்டு எந்தமொழி பெயர்ப்பு சரியானது என்று கூறிட வேண்டினர். மகாலிங்க ஐயர் நாவலர் மொழிபெயர்ப்பே சிறந்தது என்று கூறியதால் அது அச்சுக்கு உரியதாக ஆயிற்று.

பைபிள் தமிழில் வந்த பின்னர் கிறித்தவ மதப்பிரச்சாரம் இன்னும் தீவிரமடைந்தது. 'மாணிப்பாயில் ஓர் அச்சியந்திரம் வைத்துக்கொண்டு 'உதய தாரகை' எனும் கிறித்தவ மதப் பத்திரிகையையும் கிறித்தவ மதத்திற்கு அனுகூலமான பிற இரண்டுப் பத்திரிகைகளையும் புத்தகங்களையும் சைவத்தைத் தூஷிக்கும் பத்திரிகைகளையும் புத்தகங்களையும் அதில் அச்சிட்டு வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்.[23]

1835 ஆம் ஆண்டிற்குப்பின்னர் சுதேசிகளும் அச்சியந்திரசாலை அமைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர். அதனால் கிறித்தவர்களின் பிரச்சாரத்திற்குப் பதில் அளிப்பதற்காகவும், சைவர்களுக்கு உபயோகமாகவும் பல நூல்களை அச்சிட வேண்டியிருந்தது.

ஆறுமுகநாவலர் அதற்காகப் பொருள் சேர்த்து 'சென்னையினின்றும் அச்சுப்பொறி ஒன்றை வாங்கி வந்தார். 1849 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலே உள்ள வண்ணார் பண்ணையிலே 'வித்தியானுபாலனயந்திரசாலை ' எனும் பெயரால் அச்சகம் அமைத்தார். அதில் அவர் இயற்றிய முதலாம் இரண்டாம் பால பாடங்களையும் பிற பத்திரிகைகளையும் அச்சிட்டார் '. பின்னர் தம்முடைய வேலைகளுக்குப் போதாமையால் சில வருடங்களின் பின் அதனை விற்றுவிட்டு சென்னைப்பட்டணத்துக்குப் போய்

கூலி கொடுத்து அச்சிடுவித்து வந்தனர். பின் பெரிதான ஓர் அச்சியந்திரம் விலைக்கு வாங்கி முந்திய பெயருடன் சென்னைப் பட்டணத்திலே வைத்திருந்தார். இங்குதான் சி. வை. தா. வின் தொல்காப்பியம் அச்சிடப்பட்டது.[24]

இவ்வாறு கிறித்தவ மதப் பிரச்சாரத்திற்கு எதிராக அச்சடிக்கத் தொடங்கிய கடந்தகாலம். தமிழிலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க, காலமாக மாறியது. கிறித்தவர்களுக்குப் பதில் கூறத் தொடங்கி தமது மதத்தின் மொழியின் பழமையையும் சிறப்பையும் வெளிப்படுத்தினர். அப்போது தோன்றிய பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றின் பாடத்திட்டஅளவில் தமிழின் பழைய நூல்களைச் சேர்த்தனர். அவ்வாறு தமிழ் நூற்பதிப்புகள் வெளிவரத் தொடங்கின. அப்பணிகளில் சி. வை. தா. குறிப்பிடத்தக்கப் பங்காற்றியுள்ளார்.

## சி. வை. தா. வின் பதிப்புகள்

தனது இருபதாவது வயதில், சாமிநாதய்யர் உத்தமதானபுரத்தில் பிறப்பதற்கு ஓராண்டிற்கு முன்னரே சி. வை. தா. 1854 இல் நீதிநெறிவிளக்கத்தைப் பதிப்பித்தார். தொடர்ந்து தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - சேனாவரையத்தை 1868லும் வீரசோழியத்தை 1881லும் தணிகைப்புராணம், இறையனாரகப் பொருளுரை ஆகிய இரு நூல்கள் 1883லும் தொல்காப்பியப் பொருளதிகாரத்தை 1885லும் கலித்தொகையை 1887லும் இலக்கணவிளக்கம், சூளாமணி ஆகியவற்றை 1889லும் தொல் எழுத்ததிகாரத்தை 1891லும் சி. வை, தா. பதிப்பித்து வெளியிட்டார். தொல்காப்பிய எழுத்ததிகாரம் முன்னரே மகாலிங்க ஐயரால் பதிப்பிக்கப்பட்டிருந்தும் முழுமை கருதியும், கிடைத்தற்கு எளிமை கருதியும் மீண்டும் சி. வை. தா. வால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

## எதிர்கொண்ட பிரச்சினைகள்

சி. வை. தா. தமது வாழ்நாளில் எதிர்கொண்ட பிரச்சினைகள் ஏராளமாகும். அவற்றைத் தனிப்பட்ட வாழ்க்கைப் பிரச்சினைகள் தமிழ்ப்பணியில் வந்துற்ற பிரச்சினைகள் எனப் பகுத்துக் கொள்ளலாம்.

## தனிப்பட்ட வாழ்க்கையில் பிரச்சினைகள்

சி. வை. தா. இருபத்தெட்டு வயதுவரை கிறித்தவராக இருந்திருக்கிறார். இவருக்கு ஞானஸ்நானம் 1833 ஆம் ஆண்டு



பெப்ரவரி மாதம் 24 ஆம் தேதி சார்லஸ் வின்ஸ்லோ தாமோதரம் (C. L. W. Damotharam) என்று செய்து வைக்கப்பட்டது. அக்காலத்தில் கிறித்தவர்களுக்கே உயர்கல்வி பெறும் வாய்ப்பளிக்கப் பட்டிருந்ததால் அவர் இருபத்தெட்டு வயதுவரை கிறித்தவராகவே இருந்தார். ஆனால் இவரைக் குறைகூறுபவர்கள் இவரது பெயரையும் விட்டு வைக்கவில்லை.

'இஃதன்றியும் ஆறுமுகநாவலருக்கு மிக்க நண்பராயும் சைவப் பிழம்பாயுமுள்ள C. W. தாமோதரம்பிள்ளை B. A. B. L. என்பவர் ஒருவரிருந்தார். C. W. என்பவற்றின் பொருளென்னை எனக் கிறித்தவர்கள் வினவின் 'சார்லஸ் வின்ஸ்லோ' என்றும் சைவர் வினவின் 'சித்தூர் வைரவநாதன்பிள்ளை என்றும் கூறுவர்'[25] என்று எழுதிவந்துள்ளனர்.

அடுத்ததாக ஆறுமுகநாவலரின் பிரச்சாரத்தாலும் முன்பே தமது முன்னோர் மதம் சைவமாக இருந்ததாலும் சி. வை. தா. சைவரானார். ஆனால் அதுவும் பிரச்சினைக்குரியதாக ஆயிற்று. சி. வை. தா. தாம் பதிப்பித்த நீதிநெறி விளக்கத்தினிறுதியில் 'சீர்பூத்த விவிலிய நற்சுருதிவாழி' எனப் பாடி சேர்த்திருக்கின்றார். இதனால் இவ்வீழத்தார் சிவ சின்னமாகிய விபூதி உருத்திராக்கங்களைத் தரிப்பதும் சிவபூசை செய்வதும் சிவ சரித்திரங்களைப் பிரசங்கிப்பதும் நாடகமாத்திரையாக இருக்கின்றவேயன்றி இவர் உண்மைச்சைவரன்றாம்; எனவே போலிச் சைவரெனக்கொள்க'[26] என்று எழுதினர்.

உண்மை என்னவெனில் சி. வை. தா. நீதிநெறிவிளக்கம் பதிப்பித்தபோது அவருக்கு வயது இருபதுதான். அவர் இருபத்தெட்டு வயதுவரை கிறித்தவராகவே இருந்திருக்கிறார். எனவே கிறித்தவராக இருக்கும்போது 1854 இல் அவர் வெளியிட்ட நூலில் வில்லியத்திற்கு வாழ்த்து எழுதியிருக்கிறார். (அதன்பின்னர் எட்டாண்டுகள் கழித்துச் சைவராவோம் என்பது அறியாமல்தான்). அவர் சைவரானபின்னர் அவர் நூலில் விவிலிய வாழ்த்து இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கிறித்தவராக இருந்து சைவராக மாறிய சி. வை. தா. தமது குழந்தைகள் யாகும் கிறித்தவராவதை விரும்பவில்லை, ஆகவே தமது மரணப்பத்திரத்தில் தமது சொத்துக்கள் தமது குழந்தைகளுக்குச் சென்றடைய இரண்டு நிபந்தனைகளைப் போட்டிருந்தார். அவற்றுள் ஒன்று அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகப் பட்டத் தேர்வில் இந்தந்த பாடங்களில்

இவ்வளவுக்குக் குறையாமல் மதிப்பெண் பெறுதல் வேண்டும் என்பது. மற்றொன்று அவர்கள் கிறித்தவர்களாக மாறக்கூடாது என்பதாகும். இரண்டையுமே அவரது குழந்தைகள் நிறைவேற்ற வில்லை. அவரது சொத்திற்கு மட்டுமன்று ஆற்றலுக்கும் வாரிசாக அவர் எதிர்ப்பார்த்திருந்த அழகசுந்தரம் தேசிகர் சி. வை. தா, விற்குக் கடிதம் எழுதி வைத்துவிட்டுக் கிறித்தவ மதத்தில் 'பிரான்சின் கிங்ஸ்பரி' எனும் பெயருடன் சேர்ந்து விட்டார். அவர் பல வருடங்கள் சென்னையில் பணியாற்றி விட்டு 1926 ஆம் வருடம் கொழும்புப் பல்கலைக்கழகக் கல்லூரியிலே தமிழ்விரிவுரையாளராகச் சேர்ந்தார்.[27] தந்தைக் கும் மகனுக்குமிடையே கடுமையான வாதங்கள் நிகழ்ந்தன, இறுதிவரை தன் நிபந்தனையைச் சி. வை. தா. மாற்றிக் கொள்ளவே இல்லை.

## தமிழ்ப்பணியில் எதிர்கொண்ட பிரச்சினைகள்

சி. வை. தா. தமிழ்ப்பணியில் எதிர்கொண்ட பிரச்சினைகள் பலவாகும். அவற்றுள் அருட்பா மருட்பா வழக்குக் குறிப்பிடத் தகுந்த ஒன்றாகும்.

17—6—1869 ஆம் ஆண்டு வள்ளலார் சிதம்பரத்தில் வசித்திருந்தபோது நாவலர் ஆருத்திரா தரிசனம் செய்வதற்குச் சென்னையிலிருந்து சிதம்பரம் சென்றிருக்கிறார். அங்குத் தீட்சதர்களிடம் உங்களுக்குச் சிவதீட்சை உண்டா? இல்லையேல் எவ்வாறு சிவபெருமானைத் தொட்டுப் பூசிக்கின்றீர்கள்?, என்று நாவலர் வினவிட, தீட்சிதர்கள் கோபம் கொண்டு அங்கிருந்த வள்ளலாரிடம் சென்று முறை யிட்டனர். அங்கு நடந்த சொற்பொழிவில் வள்ளலார், நாவலர் எனும் சொல்லிற்கு இழிபொருள் தரும் பத்துவகையான பொருள் களைக் கூறினார். கேட்டுக் கொண்டிருந்த ஆறுமுக நாவலர் வள்ளலார் மீது 18 – 12 – 1869 அன்று மஞ்சக்குப்பம் கோர்ட்டில் வழக்கு ஒன்று தொடர்ந்தார். வள்ளலார் நீதிமன்றத்தில் நாவலரைக் குறித்துத் தாம் அவ்வாறு பேசவில்லை. நாவலர் என்ற சொல்லிற்குரிய பொதுவான பொருள்களைப்பற்றியே பேசியதாகக் கூற, அவ்தாறில்லையென்று நீதிமன்றத்தார் தீர்ப்பளித்தனர். பின்னர் நாவலர், வள்ளலார் இரசவாதம் செய்கிறாரென்று காவலரைத் தூண்டிவிட, வடலூர் சோதனை யிடப்பட்டது, பின்னர் நாவலர் மீது சிதம்பரம் தீட்சிதர்கள் வழக்குத் தொடர்ந்தனர். அதன்பின்னர் 1874 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வள்ளலார் மறைந்த பின்னர்,



'அவர் தாமிருந்த கூரைவீட்டின் கதவைத் தாளிட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டிறந்து போயினரென்றும் அக்கதவைத் திறப்பித்துப் பரிசோதிக்க வேண்டுமென்றும் நாவலர் அக்காலத்தில் தாசில்தாராயிருந்த சமண மத ஸ்ரீபால் ஐயரைத் தூண்டியனுப்பினார்.

பின்னர்ப் போலியருட்பா, நல்லறிவுச்சுடர் கொளுத்துதல் எனும் தலைப்புகளில் நாவலரிடமிருந்தும் அதனைக் கண்டித்து வள்ளலார் கூட்டத்தாரிடமிருந்தும் பிரசுரங்கள் வெளிவந்தன.

நாவலரும் வள்ளலாரும் இறந்தபின்னர் நாவலரின் மாணவர் களுள் ஒருவராகிய கதிரைவேற்பிள்ளை மீண்டும் போலியருட்பா பிரச்சினையை எழுப்பினார். வள்ளலாரின் தொண்டர்களும் எதிர்த்து நின்றனர்.

தங்கள் தங்கள் கட்சிக்கு ஆதரவாகப் போலிச்சான்றுகளை உருவாக்கியும் போலிச்சாட்சிகளை உருவாக்கியும் அவர்கள் வாதம் புரிந்து வந்தனர் அவற்றுள் ஒன்று கதிரைவேற்பிள்ளை, வள்ளலாரின் தமயனார் சபாபதிபிள்ளை வள்ளலாருக்கு எதிராக எழுதியதாக அங்கதப்பாட்டு ஒன்றை அச்சிட்டு வெளி யிட்டார். வள்ளலார் அன்பர்கள் கதிரைவேற்பிள்ளையின் அங்கதப் பாடலுக்கு 'அவுட்பீரங்கி' எனும் தலைப்பில் மறுப் புரைத்தனர். அவுட்பீரங்கிக்கு 'மெட்லேட்பம் பாம் பீரங்கி' எனும் தலைப்பில் கதிரைவேலார் பதிலிறுத்தார். அதனைத் தொடர்ந்து உயிரோடிருக்கும்போதே கதிரைவேற்பிள்ளைக்கு, எழுசீர்க் கழிநெடில் கொள்ளியாசிரிய விருத்தம் எழுதி அனுப்பப் பட்டது. அது பின்வருமாறு.

ஓங்கலிலாக் கதிரைவேற் சவந்தனக்கிங்
குயர்முத்து வீரன்மலச் சிறுநீர் வார்த்து
ஆங்கினிதாய்ப் பொட்டாட்டி யெருக்க மாலை
யழகாகச் சிரஞ்சூட்டி மூதேவிப்பெண்
பாங்கினிதாய் மாரடிக்க வித்வ சைவர்
பலருமே யார்ப்பரிக்கப் பாடை யேற்றிக்
காங்குமேல் மூடிச்சுடு காட்டிலிட்டுக்
கரியாக வேகவைக்கக் காலமாச்சே[28].

மேலும் அவருக்கு உத்திரகிரியைப் பத்திரிக்கையும் அச்சிட்டு வெளியிட்டார். சரியாக ஓராண்டு கழித்து, 'வருடாப்த விண்ணப்பம்' அச்சிட்டு வெளியிட்டனர்.[29]

கதிரைவேற்பிள்ளையும் வள்ளலாரைப்பற்றி, செத்தாரை எழுப்புவோமென்றார். அதனால் பிணங்கள் கொண்டுவந்து வடலூரில் புதைக்கப்பட்டதென்றும் அநேக அறுதாலிகளை மஞ்சள் குங்குமம் அணியச் செய்தாரென்றும் கூறினார். இவ்வாறு அருட்பா மருட்பா வழக்கைத் தொடங்கி வைத்தவராக சி. வை. தா. விளங்குகிறார்.

## பதிப்புப் பணியில் பிரச்சினைகள்

இவ்வளவுக்குப் பிறகும் சி. வை. தா. தமிழிலக்கிய வரலாற்றில் நின்று நிலைப்பதற்குக் காரணம் அவரது பதிப்புப் பணிகளேயாம்.

பதிப்புப் பணியில் ஈடுபடுபவர்களுக்குச் சுவடி தேடுவதே பிரச்சினையின் தொடக்கமாகும். சி. வை. தா. காலத்தில் அப் பயணம் இன்னும் கடுமையானது. எனினும் பல்வேறிடங்களுக்கும் நேரிற் சென்றும் கடிதம் எழுதியும் சுவடி தேடினார். அப்பிரதிகளுள் தக்கவற்றைத் தேர்ந்தெடுத்தல் அடுத்துள்ள பிரச்சினையாகும். ஏட்டுப்பிரதிகளைப் பரிசோதித்துத் தக்க பிரதியை ஆக்கிக் கொள்வதில் தமக்கேற்பட்ட இன்னல்களைச் சி.வை.தா. தமது வீரசோழியப் பதிப்புரையில் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

'மூன்று விரலைக் காட்டிக் கட்டிலிற் கால் போலப் பஞ்ச பாண்டவரையும் ஆறு கோணத்திலும் நிறுத்துக என்பான்; தொகை விபரீதத்தோடு விரலை வாலென்றும்; கட்டிலைக் சுடாவென்றும்; பஞ்சபாண்டவரைப் பிஞ்சுபாகற்காயென்றும் மாற்றி எழுதிவைத்தால் அம்மொழியைச் சரிப்படுத்தல் இலேசாகுமா? அதுபோலவே, 'விலாசம், பரிசர்ப்பம், விதூதப்சமர், நாபம், நமதூதிபிரகமம், நிரோதம் ... எனக் கிடந்த ஏட்டுப்பிரதிகளோடு பட்டபிரயாசைக்குப் பிரயாசை எனும் சொல் போதுமா? [34]

## தமிழகம் ஏற்படுத்திய தடங்கல்கள்

'பிள்ளை அவர்கள் தமிழன்னைக்குப் புரிந்திருந்த தொண்டிற் பிற வித்துவான்களும் உழைத்துவர வேண்டுமென்ற கொள்கையை உடையவர்கள்.' ஒருசிலர் தம்மைத் தவிரத் தமிழ் நூல்களைப் பதிப்பிக்கும் பணியில் இறங்கிய பிறருக்கெல்லாம் நரக தண்டனை விதித்துச் சபித்து வந்துள்ளார்கள்' எனும் வையாபுரிபிள்ளையின் கூற்றிற்குச்சான்றாகத், தமிழகத்தில் சிலர் சி. வை. தா வின் பதிப்புப் பணிக்குத் தடங்கல்களை உண்டாக்கினார்கள். அவர்களுள் யாழ்ப்பாணத்துச் சபாபதி



நாவலர் அவர்கள் குறிப்பிடத்தகவராவார். சி. வை. தா. வீர சோழியர் கலித்தொகை பதிப்புரைகளிலே சிவஞானமுனிவரைக் கண்டித்து எழுதியபோது சி. வை. தா. வைப்பற்றி எதிர்ப்புக் கருத்துக்கள் வெளியிடலாயினர். இலக்கணவிளக்கப் பயிற்சி குன்றியமைக்கு மடங்களே காரணமென்று சி. வை. தா. எழுதியதைக் கருத்தில் கொண்டு பலர் தமிழகத்தில் சி. வை. தா. விற்குத் தொந்தரவு கொடுக்க முற்பட்டனர். [35]

சி. வை. தா. தொல்காப்பியம் - சேனாவரையத்தைப் பதிப்பித்து வெளியிட்டபோது மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திரிகாசிரியர் இராமாநுஜ ஐயங்கார் அவர்கள், 'சென்னை நார்மல்ஸ் ஸ்கூல் தலைமைத் தமிழ்ப்புலவர் கோமளபுரம் இராசகோபால்பிள்ளையால் பரிசோதித்து மு. கந்தசாமி முதலியார் வர்த்தமான தரங்கிங்சாகை அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது என்ற முகப்புடன் ஒரு சேனாவரையம் தம்மிடம் இருக்கிறதென்று தெரிவித்தார். [36]

வேண்டுமென்றே சி. வை. தா. வின் புகழைக் குறைக்கும் எண்ணத்துடன் ஏற்படுத்திய செயல்களில் இதுவும் ஒன்றாகும். ஆனால் உண்மையில் சி. வை. தா. விற்கு முன்னர் சேனாவரையம் பதிப்பிக்கப்படவில்லை.

சீவக சிந்தாமணியை அச்சிடத் தயக்கம் கொண்டிருந்த காலத்து, சி. வை. தா. தந்த ஊக்கமே அச்சிட உதவிற்று என்று உ. வே. சா. கூறியுள்ளார். ஆனால் தமிழகம் அதுபோன்ற ஆதரவை சி. வை. தா. அவர்களுக்கு வழங்கவில்லை.

## தமிழாய்விற்குச் சி. வை. தா. தந்தவை

இறுதியாகத் தமிழாய்வு செழுமையுற சி. வை. தா. தந்தவை எவை என்று ஆராய்கிறபோது பின்வரும் செய்திகள் வெளிப்படுகின்றன.

1. சுவடிப்பதிப்பிற்கு முன்னோடி
2. சுவடிப்பதிப்பில் மூல பாடத் திறனாய்வுக் கொள்கையை, அக்கொள்கை உருப்பெறாக் காலத்திலேயே மேற்கொண்டிருந்தவர்
3. பதிப்பு நெறிமுறைகளாக, பாடத்திருத்தங்களைப் பட்டியலிட்டுக் காட்டுதல், காரணங்கூறுதல் ஆகியவற்றைக் கொண்டிருந்தவர்

4. பதிப்பு முன்னுரையில் விஞ்ஞான முறைப்படி ஆய்வு அமைய வழிகளைக் கூறியிருப்பவர்
5. தமிழிலக்கியக் காலப்பகுப்பில் அபோதகாலம், அட்சர காலம், இலக்கணக்காலம், சமுதாயகாலம், அனாதரக்காலம், சமணகாலம், இதிகாசகாலம், ஆதிரகாலம் என்ற பிரிவை முதன்முதல் வெளிப்படுத்தியவர்.
6. தமிழ் வடமொழி பற்றிய வரலாற்றினைத் தெரிந்து கொண்டவர்.
7. தமிழின் தொன்மையை வெளிப்படுத்தியவர்.
8. வடமொழியினின்றும் தமிழ் தாழ்ந்ததன்று என்று முதலில் காட்டியவர்.
9. மடங்களிலிருந்த தமிழைப் பல்கலைக்கழகப் பாடங்களுக் குரியதாக்கியவர்.
10. மறுத்துரைக்கும் போதும் நாகரிகம் குறையாதவர்.[37]

முடிவுரை

சி. வை. தா. தமிழ் இலக்கியத்தின் மொழியின் பரிணாம வளர்ச்சியில ஏட்டிலிருந்து அச்சுநூலாகும் திருப்புமுனையில் நின்று பணியாற்றியிருக்கிறார். அவர் தமது வாழ்நாளில் ஏற்றிருந்த பதவிகளாலும் தமிழுக்குத் தொண்டாற்றி வந்துள்ளார். மொழி, இலக்கியம் பற்றிய கொள்கைகளும் காலம்பற்றிய அவரது கணிப்புகளும் அவரது பதிப்புரைகளும் நிறைய இடம் பெற்றுள்ளன. அவை இன்றைய ஆய்வு நிலையில் ஏற்றுக் கொள்வதற்குரியனவாக முழுவதும் இல்லையெனும் அவர் காலத்து அத்தகைய கருத்துகளைக் கூறுவதற்குரிய தகுதி மட்டுமே இருந்திருக்கிறது என்பது மிகையன்று. தமது பதிப்பு களில் தமிழின் மேன்மை பற்றியும் தொன்மை பற்றியும் அவர் கொண்டிருந்த விருப்பம் வெளிப்படுகின்றது. அவற்றையெல்லாம் கடந்து அவரது பதிப்புகளில் காணப்பட்டு இன்றளவும் ஏற்றுக் கொள்ளப்படுகிற விவரங்களை அவர்போன்ற அக்காலத்து வாழ்ந்தவர்களில் இன்னொருவரைத் தேடும்போது வரலாற்றில் வெறுமையே மிஞ்சுகிறது.

வீரசோழியம் எழுதிய புத்தமித்திரரை சமணரென்று அவர் கூறியிருப்பதும், பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் இடம்பெற வேண்டுமென்பதற்காக, கலித்தொகையில் ' அல்குல் ' என்று



வந்துள்ள பாடற்பகுதிகளை அவர் மாற்றி எழுதிப் பதிப்பித்ததும் சி. வை. தா. விடம் காணப்படும் பிழைகளாகக் கருதப்பட்டாலும் அவற்றையும் மீறி அவரது பதிப்புப்பணிகள் பாராட்டிற்குரியன வாகவே அமைந்துள்ளன. வாழ்வும் வாக்கும் ஒத்துப்போன தமிழறிஞர்கள் சிலரிடையே சி. வை. தாமோதரம்பிள்ளை தனி யிடம் பெற்றுள்ளார் எனலாம்.

## பின்குறிப்புகள்

1. வையாபுரிப்பிள்ளை, (1959), தமிழ்ச் சுடர்மணிகள், ப. 239.
2. ஸ்ரீநிவாசபிள்ளை, (1960), தமிழ் வரலாறு, முதற்பாகம், ப. 49.
3. ஈழத்தமிழ் இலக்கிய வளர்ச்சி, ப. 31.
4. ஈழத்தமிழ் இலக்கிய வளர்ச்சி, ப. 31.
5. Fernao de Queyroz, *The Temporal and Spritual Conquest of* Ceylon, P. 47.
6. ஆறுமுகநாவலர் சரித்திரம், ப. 2.
7. ஆறுமுகநாவலர் சரித்திரம், ப. 2.
8. குமாரி ஜெயவர்த்தனே, இலங்கையின் இனவர்க்க முரண் பாடுகள்.
9. ' தாங்களும் பிராமணரும் சகோதர முறை உடையவர்க ளென்றும் அப்படிக் கொண்டாடலாம் தீண்டலாம் ' — கதிரைவேற்பிள்ளையின் உண்மைச் சரித்திரம் ப. 64.
10. ' பெயரைக் கண்டு தினசரிப் பத்திரிக்கை என்று கருத வேண்டாம். இது வாரப்பத்திரிகை வியாழக்கிழமை தோறும் வெளிவந்தது. பெர்சிவல் பாதிரியார் (Rev. P. Percivel) இதைத் தொடங்கி இதன் ஆசிரியராக இருந்தார். தினசரிப் பத்திரிகையின் பெரிய அளவில் அச்சிடப்பட்டது. செய்திகளுடன் இலக்கியம், விஞ்ஞானம் முதலிய கட்டுரை களும் வெளிவந்தன. அரசாங்கத்தார் மாதம் 200 ரூபாய் இப்பத்திரிகைக்கு நன்கொடையளித்தனர். பெர்சிவல் ஐயர் விலகிக் கொண்டபிறகு இந் நன் கொடை நிறுத்தப்பட்டது ' மயிலை சீனிவேங்கடசாமி, ப. 135, 136.
11. மனோன்மணி சண்முகதாஸ், சி. வை. தா. பதிப்பு ப. XVII.

12. மனோன்மணி சண்முகதாஸ், சி. வை. தா. பதிப்பு ப. 26, 27.
13. மனோன்மணி சண்முகதாஸ், சி. வை. தா. பதிப்பு ப. 115.
14. மனோன்மணி சண்முகதாஸ், சி. வை. தா. பதிப்பு ப. 173.
15. ஆறுமுகநாவலர் சரித்திரம் ப. 3.
16. ஆறுமுகநாவலர் சரித்திரம் ப. 18.
17. ஆறுமுகநாவலர் சரித்திரம் ப. 133.
18. ஆறுமுகநாவலர் சரித்திரம் ப. 133.
19. ஆறுமுகநாவலர் சரித்திரம்.
20. ஆறுமுகநாவலர் சரித்திரம் ப. 137.
21. இராஜரத்தினம் பிள்ளை, The Story of C. W. Damodaran Pillai, பக். 87, 88.
22. இவர் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தை முதன் முதலில் பதிப்பித்தவராவார்.
23. ஆறுமுகநாவலர் சரித்திரம், பக். 62 63.
24. ஆறுமுகநாவலர் சரித்திரம், பக். 62, 63.
25. கதிரைவேற்பிள்ளைஉண்மைச் சரித்திரம், பக். 96.
சி. வை. தா. அவர்களின் ஊரின் பெயரைக் குறிப்பிடுவதில் குழப்பம் காணப்படுகின்றது. சி என்பதற்கு சிறுப்பிட்டி என்றும், சிறுவாட்டி என்றும் சித்தூர் என்றும் பல நூல்களில் வேறு வேறு விதமாகக் கூறப்பட்டுள்ளன.
26. கதிரைவேற்பிள்ளை உண்மைச் சரித்திரம், பக். 96, 97.
27. சி. வை. தா. அவர்களின் மகன் கிறித்தவராக மாறினாலும் சைவ சமய நால்வரின் பாசுரங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். அம்மொழிபெயர்ப்பு நூலில் திருப்பழனம் எனும் ஊரைக் குறிக்கும் பழனம் என்ற சொல்லைத் தவறாகப் புரிந்து கொண்டு பழனி என்று எழுதியிருக்கிறார். மேலும் அவரது பிரச்சாரப்பணி கிறித்தவ மரபு வழிபட்டதாக அமையவில்லை என்று கூறி அவரைக் கிறித்தவர்கள் சாதி நீக்கம் செய்தனர்.

— இத்தகவல்களைத் தஞ்சை வழக்கறிஞர் திருமிகு. டி. என். இராமச்சந்திரன் அவர்கள் தெரிவித்தார்கள்.



28. கதிரைவேற்பிள்ளை உண்மைச்சரித்திரம், ப. 40
29. கதிரைவேற்பிள்ளை உண்மைச் சரித்திரம், ப. 63
30. கதிரைவேற்பிள்ளை உண்மைச்சரித்திரம், ப. 25
31. கதிரைவேற்பிள்ளை உண்மைச்சரித்திபம், ப. 15
32. கதிரைவேற்பிள்ளை உண்மைச்சரித்திரம்
33. கதிரைவேற்பிள்ளை உண்மைச் சரித்திரம், ப. 16.
34. மனோன்மணி சண்முகதாஸ், ப. 34.
35. மனோன்மணி சண்முகதாஸ், ப. 57.
36. தாமோதரம், ப. 137.
37. ‘உலகத்தில் இவர் போலியராலே திட்டப்படுவதற்குத் தகுந்த யோக்கியதையாவது உள்ளவனாக யான் மதிக்கப் பட்டதே எனக்குப் பெருஞ்சிறப்பென்று கொண்டேன்’.
— தாமோதரம், ப. 44.

## ‘ தேடல் ’ [ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்புநூல்]

இரா. குருநாதன்
துணைப்பேராசிரியர்,
த. உ. க. க. கல்லூரி,
தஞ்சை 2.

எண்ணங்கள் எழுத்துருவாகி அச்சுவாகனம் ஏறிஉலா வரும் போது, அதன் வலிமை கூடுகின்றது. கடல் அலைகள் அனைத்தும் கரையைத் தழுவுவதில்லை என்பது போல, எண்ணங்கள் அனைத்தும் நூல் வடிவில் வருவதில்லை. நூல்வடிவில் இருந்த கருத்துக் கருவூலங்களை, காலத்திற்கும், கடலுக்கும் தவணை முறையில் கொடுத்துவிட்டுத் தவிக்கும் தமிழினத்திற்கு ஆறுதலாக வந்தநூல் ‘ தேடல் ’ என்னும் ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பு.

சமுதாயத்தைக் காப்பதற்கு இலக்கியங்கள் தோன்றுகின்றன. காலத்தின் தேவைகள் இலக்கியங்கள் நிறைவு செய்கின்றன. சமுதாயம் நலம்பெற Unity, Purity, Divinity என்னும் மூன்று நிலைகள் உள்ளன. ஒற்றுமை, தூய்மை, இறைமை ஆகிய மூன்றையும் உள்ளடக்கியவை இலக்கியங்கள். அவற்றில் காணும் முதல் வகையை நினைக்கும் வண்ணம், ஆசிரியர்களும், ஆய்வு மாணவர்களும் இணைந்து நடத்திய ஆய்வுப் புரட்சி, “தேடல்”, என்னும் நூலாக வந்துள்ளதை உணர முடிகின்றது.

“ கண்டுபிடிப்பு என்பது வெளியுலகத்திற்கு முதலில் தெரியவரும் உண்மை, கண்டுபிடிப்பதற்கு முன்பும் உலகத்தில் இருந்தது. இருந்ததை அறியாமல் இருப்பது அறியாமை. இருந்ததை அறிந்து கொண்டது நம் அறிவு ” (பக். 5-6) என்னும் தொடர்கள் நூலின் தொடக்கத்தில் வரவேற்பு கூறுவனவாய் அமைந்துள்ளன.

“ இந்நூல் எங்களுடைய தேடலின் முடிவு அன்று ; தொடக்கம், எங்கள் தேடல் தொடர்ந்து கொண்டே இருக்கிறது, தொடர்ந்து கொண்டே இருக்கும் (பக். 6) என்ற கருத்து, தேடலின் தொகுப்புக்கள் மீண்டும் மீண்டும் வெளிவரும் தன்மையைச் சுட்டுகின்றது.

இத்தொகுப்பில் பதினாறு ஆய்வுக்கட்டுரைகள் இடம்பெற்று, பதினாறு வயதை என்றும் மாறாது பெற்ற மார்க்கண்டேயனைப் போல நிலைத்து வாழும் திறம்பெற்று விளங்குகிறது.



அறம் பொருள் இன்பம், வீடு ஆகிய நான்கு நிலைக்களன்களையும் விளக்கும் முகமாகக் கட்டுரைகள் விளங்குகின்றன.

உலகியல் வாழ்வின் நிலைக்களனான, பெண்மையை வள்ளுவர் வழி நின்று மூவகைப் பகுப்புக்களாகச் சுட்டியிருத்தல் குறிப்பிடத்தக்கது. (பக். 152)

பெண்மை

- அறத்துப்பால் → [வாழ்க்கைத்துணைவி] [தாய்]
- பொருட்பால் → [பரத்தமை]
- காமத்துப்பால் → [காதலி]

உண்மையான முத்தியடைய வேண்டுமெனில், பிறப்பை மட்டுமன்றி இறப்பையும் தவிர்க்கவேண்டும். சித்தர்களின் தத்துவப்படி மனிதன் இறந்துவிட்டால் முத்தி என்பது கிடையாது (பக் 59) என்ற கருத்து நினைத்து இன்புறத்தக்கது. அக்கருத்திற்கு

“ சாகாமல் தாண்டித்தனிவழி போவோர்க்கு
ஏகாந்த மேதுக்கடி — குதம்பாய்
ஏகாந்த மேதுக்கடி (பா. 12)

என்ற குதம்பைச் சித்தர் பாட்டைச் சான்றாக அமைத்திருப்பது பாராட்டத்தக்கது.

புதுவைப் பல்கலைக்கழகத் தமிழியல் துறையினரின் முயற்சி, இளம் ஆய்வாளர்களுக்குத் தரும் பயிற்சியாகும். முயற்சியும், பயிற்சியும் இணையுமானால் வளர்ச்சிக்கு ஏது தளர்ச்சி ?

(சென்ற இதழ் தொடர்ச்சி)

# மேலாண்மை பொன்னுச்சாமியின் மாடசாமிகள்

டாக்டர். இரா, சண்முகவேலன்,
எம். ஏ., எம். பில், பி. டி., பிஎச். டி.,
தமிழ்ப் பேராசிரியர்,
அ. வீ. வா. நி. திரு. புட்பம் கல்லூரி,
தஞ்சாவூர்.

'ஒருத்தன் சொத்தை ஒளிச்சு வைச்சா ... அது நிலைக்கவா செய்யும்? ... — இது நல்மனத்தின் உபதேசம். 'இப்படியும் பொழைக்கத் தெரியாத பயலும் இருப்பானா, கிடைச்சதையும் குடுத்துட்டு நிற்கிற கிறுக்கன் மாதிரி அலையுறானேன்னு ஒன்னைக் கேலியும் கிண்டலும் தானே செய்வாக?' — இது கெட்ட மனத்தின் அறிவுரை. இத்தகைய போராட்டத்தால் மாடசாமி இரவெல்லாம் விழித்திருக்கிறான். இரவு 1.15 மணி. பசிக்கிறது. தண்ணீர் குடிக்கிறான். மனைவி இடையில் விழித்து 'இன்னும் தூங்கலியா?' என்கிறாள். 'ஒண்ணுமில்லே தூங்கிடுவேன்' என்கிறான். கட்டிலில் உட்கார்ந்து சிகரெட்டைப் புகைக்கிறான். தறிகெட்டு மனம் ஓடத் தொடங்குகிறது. மாடசாமியின் மனப் போராட்டத்தின் மூன்றாவது கட்டம் (Third stage) இது.

முதல் கட்டத்தில் ஓர் எல்லைக்குள் எழுந்து கட்டுப்பட்ட மனப்போராட்டம் இரண்டாவது கட்டத்தில் கட்டுக்குள் அடங்காமல் போவதால் மாடசாமி மன உளைச்சல்களினால் (Stress) பெரிதும் பாதிக்கப்படுகிறான். மனப் போராட்டங்கள் அதிகரிக்கும்போது மன உளைச்சல் உருவாகிறது. மன உளைச்சல் ஒருவனின் அன்றாட வாழ்க்கையைப் பாதித்து நிம்மதியைக் குலைப்பதோடு மட்டுமன்றிச் சாதாரண மகிழ்ச்சிகளையே தடுக்கிறது என்பர். மாடசாமி பணிமனையில் கணக்கு முடித்து விட்டு வீட்டிற்கு வந்து சாப்பிட்டதும் அடித்துப் போட்டாற்போல் அயர்ந்து தூங்குவான்; விடிந்ததும் மனைவி குழந்தைகளோடு உறவாடுவான். இந்தச் சாதாரண வாழ்க்கை வழக்கமான நடப்பு (Habitual activity) அன்றைக்கு இல்லாமல் போகக் காரணம் மன உளைச்சலே ஆகும்.

எதற்கெடுத்தாலும் எரிச்சல், பரபரப்பு, தேவையற்ற கோபம், மார்பில் படபடப்பு, மனநிலை நிமிடத்திற்கு நிமிடம்



மாறுபடுதல், சிந்திக்காமல் ஒரு வேகத்தில் எதையாவது செய்து விடுவது, கவனக்குறைவு, குழப்பம், விபத்துக்களும், காயங்களும் ஏற்படும் வகையில் முழுநினைவின்றி நடந்து கொள்வது, உடலில் ஒரு சோர்வு, காரணம் புரியாத ஒரு பயம்; தூக்கமின்மை, வியர்வை அதிகரித்தல், அடிக்கடி சிறுநீர்கழித்தல், அடிக்கடித் தலைவலி, பசியின்மை, கழுத்தில் - முதுகில் வலி, கைவிரல்களில் ஒரு நடுக்கம், சிகரெட் மது போன்ற பழக்கங்களில் ஓர் அதிகரிப்பு முதலானவை மன உளைச்சலின் விளைவுகள் ஆகும். இவற்றுள் பெரும்பான்மை அறிகுறிகள் (Symptoms) இருந்தாலே மன உளைச்சல் எனலாம்.

மாடசாமி மூன்றாவது கட்ட மனப் போராட்டத்திற்கு வருகையில் தன்னைப்பற்றி ஓட்டுநர்கள் (Drivers) 'சிரிச்ச முகம்' என்று பெயர் சூட்டிக் கேலி செய்வதை நினைவு கூர்ந்து (Recall), தனது தொழிலையும், சூழ்நிலையையும் எண்ணித் தான் எரிந்து விழுவதற்குரிய காரணத்தைக் கற்பித்துக் கொள்கிறான் (Rationlization).

> 'அறுபது பைசா டிக்கட்டுக்கு ஐந்து ரூபாய் நோட்டு. 1.60 டிக்கட்டுக்கு இருபது ரூபாய் நோட்டு. அதுவும் மனுசனு மதிச்சு நீட்டுவாகளா? ம்ஹூம்! ... இதுவே ஐந்து பைசாக் கொறைஞ்சாக் கூட முணுமுணுப்பு ... இப்படி, குமைஞ்சு, குமைஞ்சு, அடங்குற - உறையுற - உணர்ச்சியெல்லாம், மூஞ்சியிலே வந்து சிடுசிடுப்பா வந்து நின்னுக்கிடுது. நான் என்ன செய்ய?'

என்று அவன் மனம் பேசுகிறது (Interior monologue). அன்றையப் பகற்பொழுதில் மாடசாமிக்கும் ஆமர் நாட்டிற்குப் பயணம் செய்த பெரியவர்க்கும் இடையில் ஏற்பட்ட வாய்ச் சண்டை வளர்ந்த போது அவன் உள் மனம் (Psychic mind) அலறி வெடிக்கிறது. இப்படி நாள்தோறும் அல்லாடுகிற மாடசாமியின் பிழைப்பு அவனுள் மன உளைச்சல்களை விளைவித்தது வியப்பன்று. நாள்தோறும் அவனுள் வளர்ந்த விறைப்பு நிலை (Tension) முற்றி மனப்பாரத்தை ஏற்படுத்தியதால் மாடசாமி நாளடைவில் மன நோயாளி ஆகிவிடுகிறான்.

இரண்டு மூன்று நாட்கள் கழிந்த பிறகும் அவன் ஒப்படைத்த நகையைப் பற்றி எந்தத் தகவலும் இல்லே. அது குறித்து அதிகாரியிடம் கேட்கத் தயக்கம்; அச்சம். காரணம், அவன் அதை ஒப்படைத்ததோடு அவனது கடமை முடிந்து விட்டது.

இருப்பினும், அவனால் அதை மறக்க இயலவில்லை. மனைவியிடமோ மற்றவரிடமோ வெளியிடாது உள்ளுக்குள் போட்டுப் புதைக்கிறான். தொடர்ந்து சமர், வெளியில் தெரியாமல் நடக்கிறது. அதனால் உளைச்சல்கள். அமைதியைத் தேடித் திரைப்படத்திற்குப் போகிறான். பார்த்துவிட்டு இரவு பத்து மணிக்கு மேல் வீட்டிற்குத் திரும்புகிறான். லட்சுமி தூங்காமல் விழித்திருந்து காத்திருக்கிறாள். அவனைக் கண்டதும் பரபரக்கிறாள். மனப் பூரிப்பால் நெகிழ்ந்து அவனைத் தேடி ஒருவர் வந்து காத்திருந்து வெளியில் போனதையும், அவர் சொன்னதைக் கேட்டுத் தானடைந்த உணர்ச்சிச் சிலிர்ப்பையும் (Elation) கொட்டித் தனக்கு அவனால் ஏற்பட்டுள்ள பெருமையைப் பாராட்டுகிறாள். அவனோ வாலும் புரியாமல் தலையும் புரியாமல் தவிக்கிறான் (Anxiety); குழம்புகிறான் (Confusion). அந்தச் சமயத்தில் பேருந்துவில் அவனுடன் சண்டை போட்ட பெரியவர் வீட்டிற்குள் வந்து வெட்க உணர்வுடனும் நன்றிப் பெருக்குடனும் கையெடுத்துக் கும்பிடுகிறார். வந்ததன் காரணத்தை வார்த்தைகளில் காட்டுகிறார்.

> “கையிலே கிடைச்ச ரூபாயைக் கூட கண்காணாம அமுக்கிக்கிடுற இந்தக் கலி காலத்துலே ... அஞ்சு பவுன் தங்க நகை கெடைச்சும் அதை நாணயமா ஒப்படைச்சிருக்கீகளே தம்பி ... உங்க கூட அஞ்சு பைசாவுக்காக அற்பத்தனமாச் சண்டை போட்டேனே அன்னிக்கு ...”

என்று முன்னுரையுடன் பேச்சைத் தொடர்கிறார். தன்னுடைய ஒரே பெண் நகையின் பொருட்டுக் கணவன் வீட்டிலிருந்து விரட்டப்பட்டு வாழாவெட்டியாய் ஒன்றரை ஆண்டுகளாகத் தன் வீட்டில் இருப்பவளைப் பஞ்சாயத்துப் பேசி ஐந்து பவுன் நகை செய்து போட்டு அனுப்பி வைக்க முடிவு எடுத்ததாகவும், அதற்காகத் தனது புன்செய்யை விற்று அந்தப் பணத்தால் நகை வாங்கியதாகவும், அது பேருந்துவில் தவற, மனைவி அறிந்து மருந்தைக் குடித்து மருத்துவமனையில் கிடப்பதாகவும் தெரிவிக்கிறார்; அவருடைய இன விருத்தியும் பெண்ணின் வாழ்க்கையும் அவன் ஒப்படைத்த நகையில் உள்ளதாகக் கூறுகிறார். பின்பு மேலாளரிடம் நகை காணாமல் போனது பற்றித் தான் எழுதிக் கொடுக்க, அவர் மாடசாமியை விசாரிக்க வேண்டும் என்று சொல்லப் பெரியவர் அந்தச் செய்தியை வெளிப்படுத்தி அவன் உதவியை எதிர்பார்க்கிறார். மாடசாமி



மேலாளரிடம் சொல்லி அவருக்கு நகை கிடைக்க உதவி புரிவதாய் உறுதியளிக்கிறான். பெரியவர், அவனும் அவன் குடும்பமும் அவனது புண்ணியத்தில் வளமுறும் என்று வாயார வாழ்த்திப் போகிறார். அவன் மனைவியின் பெருமிதப் பார்வையைச் சந்திக்கிறான்; தான் செய்த செயலில் ஒரு பெண்ணின் எதிர்கால வாழ்க்கை காலூன்றி நிற்பதை நினைக்கிறான். அவனுக்கும் பெருமிதம் ஏற்படுகிறது. ஊசலாட்டம் ஓய்கிறது. தெளிந்த நீரோடையாய் ஒரே திசையில் மனம் ஓடுகிறது. மனத்தின் பெருமிதத்தினால் அவன் முகமெல்லாம் புன்னகை (Ecstasy).

மாடசாமி மேற்கொண்ட ஒரு செய்கையினால் நான்கு நாட்களாக அவன் மனம், போராட்டங்களில் இறங்கிச் சுருண்டு வதைந்து உச்சக்கட்ட நிலையாகிய உளைச்சல்களில் மூழ்கி மிதந்து கடைசியில் சிக்கலுக்குத் தீர்வும் செய்கைக்குப் பாராட்டும் பயனும் கிடைக்கையில் தெளிகிறது; அழுத்தத்தாலும் இறுக்கத்தாலும் புழுக்கத்தாலும் குடைச்சலாலும் குமைந்து குழம்பிய மனம், சுமை இறக்கப்பட்டதால்-பாரம் நீங்கியதால் சுருங்குதலிலிருந்து விரிகிறது; மகிழ்ச்சி அடைகிறது. இருள் விலகி ஒளி பரவிய ஒரு நிலை.

சாதாரணமாகவே மாடசாமி உளவழி நரம்பு நோய்களினால் (Neuroses - உளக்கோளாறுகள்) பாதிப்பிற்குள்ளான ஒரு மனநோயாளியே (Psychoneurotic). பேருந்து நடத்துநனாகத் தொழில் புரிந்தாலும், மாதந்தோறும் ஊதியம் வாங்கினாலும் தன்னுடைய மனைவியின் எதிர்பார்ப்புக்களுக்கு (Expectations), ஆசைகளுக்கு (Desires) ஓரளவேனும் செய்து நிறைவு படுத்த முடியாத காரணத்தால் அச்சமும் (Fear), கவலையும் (Anxiety), தாழ்வு மனப்பான்மையும் Inferiority Complex) அவனுள் எழுந்து அவனை முடக்குகின்றன. இல்லாமை, போதாமைகளினால் நோயாளியான மாடசாமிக்குச் சமுதாயத்தில் ஏற்படும் தொல்லைகளினால் நோயின் தன்மை மேலும் தீவிரம் கொள்கிறது. சரியான சில்லறைகள் தராத பயணிகள், கத்தக் கத்த காதில் வாங்காமலிருந்து காலந் தாழ்த்திப் பயணச் சீட்டு வாங்கும் பயணிகள், சில்லறை இல்லாமல் ஐந்து காசு குறைத்துக் கொடுப்பதற்காகச் சண்டை பிடிக்கும் பயணிகள், ஆண் — பெண் வேறுபாடு இல்லாமல் அடைத்து நிற்கும் பயணிகள், உள்ளுக்குள் வாராமல் வெளியில் தொங்கும் பயணிகள் — இவர்களோடு ஒவ்வொரு நிமிடமும் போராடும் மாடசாமி உள்ளத்தாலும் உடலாலும் தாக்கப்

படுகிறான் ; எரிச்சலாலும் (Irritation), சிடுமூஞ்சித் தனத்தாலும் (Choleric), அயர்வாலும் (Exhaustion), களைப்பாலும் (Fatigue) கசப்பாலும் (Frustration), படபடப்பாலும் (Fidget), கோபத்தாலும் (Anger), வெடிப்பாலும் (Explosive) அவதியுறுகிறான்; இயந்திரம் போல் உணர்ச்சியற்று இயங்குகிறான் ; வேலையை முடித்து வீட்டிற்குத் திரும்பினால் சாப்பாடு ஆனதும் ஆழ்ந்து உறங்கு கிறான். மனைவியிடமோ, குழந்தையிடமோ அவன் அன்போடு உறவாட முடிவதில்லை.

இவ்வாறெல்லாம் மாடசாமியை மனோதத்துவ முறையில் ஆராய்கையில் அவன் ஓர் உளநோயாளி என்பது தெளிவா கின்றது. பொதுவாகப் பொது மக்களில் பெரும்பாலோர் ஏதோ ஒரு வகையில் உள நோயாளிகளாகவே உள்ளனர் என்பது உளவியல் அறிஞர்களின் முடிவு. ஒரு நோயாளி எந்த வகையைச் சேர்ந்தவர் என்று சரியாக வரையறுக்க இயலாது. எனினும், நான்கு வகையான உளவழி நரம்பு நோய்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அவை : (1) ஹிஸ்டீரியா (Hysteria), (2) உடல் - உள மீச் சோர்வு நிலை (Neurasthenia) (3) கவலை நிலை (Anxiety State), (4) சைக்கஸ் தேனியா (Psychasthenia) என்பனவாகும். இவற்றுள் மாடசாமி கவலை நிலை நரம்பு நோயாளி ஆவான்.

இக்கதையின் தலைவன்தான் மாடசாமி. இவனே கதை முழுவதும் இயங்குகிறான். இவனுடைய மனத்தில் இரண்டு நிலைகள் இருப்பதாய்க் கதையில் குறிப்பு உள்ளது. ஒன்று 'தேள் கடிபட்ட குரங்கு' நிலை. இன்னொன்று கடிவாளம் போடப் பெற்ற குதிரை நிலை. கிளைக்குக் கிளை தாவும் குரங்கு மனத்தை இவன் அடக்கவில்லையென்றாலும் வேகங்கொண்டு தன்னை வீழ்த்த எண்ணி விரையும் குதிரை மனத்தைக் கடிவாளக் கயிற்றால் இழுத்துப் பிடித்து நிற்கச் செய்து தனக்கு வர இருந்த பெரிய விபத்திலிருந்து காப்பாற்றிக் கொள்கிறான். மொத்தத்தில் மாடசாமி ஓர் உளநோயாளியானாலும் நேர்மைப் பண்புடைய சாதாரண மனிதன்.

### *(2) 'கொலை' மாடசாமி*

'கொலை' என்னும் கதையின் தலைவனான மாடசாமி கிராமத்தான் ; திருமணமானவன். மனைவி ராசாத்தி. நாற்பது நாற்பத்தைந்து வயது இருக்கலாம். மூன்று குழந்தை களுக்குத் தகப்பனானாலும் ஒன்றைப் பறிகொடுத்து நான்காவது



பிள்ளைக்குத் தந்தையாகப் போகிறான். சாதாரண விவசாயத் தொழிலாளி. அன்றாடக் கூலியில் அவனது குடும்பம் வாழ் கிறது. நான்காவது குழந்தையை வயிற்றில் சுமந்திருந்த ராசாத்திக்கு இடுப்பு வலி கண்டதும் அவனே ஓடிப் போய்க் கிராமத்து மருத்துவச்சியைக் கூப்பிட்டு வீடு திரும்புகிறான். ஊர்ப் பெண்டுகள் கூடியிருக்க அச்சத்தோடு அமைதியடைகிறான். மனைவி நலமாக உயிர் பிழைக்க உள்ளுக்குள் ஆண்டவனை வேண்டுகிறான். மருத்துவம் பார்த்த ராமாயம்மா டாக்டரை அழைத்துவரச் சொல்கிறாள். பதற்றமடைந்த மாடசாமி செய்வது அறியாது பொறிக்குள் சிக்கிக் கொண்ட எலியைப்போல் திணறுகிறான் ; தவிக்கிறான். ஆண்களும் பெண்களும் கூடி ராசாத்தியைக் காப்பாற்ற முனைகின்றனர். டாக்டரைக் கூப்பிட்டு வரச் சைக்கிளில் சென்றவன் திரும்பி வந்து டாக்டர் வர மறுப்பதையும், அவரிருக்கும் இடத்திற்குக் கூட்டி வந்தால் பார்க்கத் தயாராய் இருப்பதையும் சொல்கிறான். 'டாக்ஸி'க் காரனும் ஏழு கல் தொலைவு காட்டுப் பாதையில் வர மறுத்துவிடும் செய்தியும் கிடைக்கிறது. கடைசியில் இரவு பதினோருமணிக்கு மாட்டு வண்டியில் ராசாத்தியைக் கிடத்திப் பட்டினத்திற்குப் புறப்படுகின்றனர். பெரியவரும் மாடசாமியும் வண்டியைப்பின் தொடர்கின்றனர். மருத்துவமனையில் சேர்த்து ஐந்து நிமிடங்கள் கூட ஆகியிருக்காது அதற்குள் ராசாத்தி இறந்து விடுகிறாள். மாட சாமி நெஞ்சிலும் தலையிலும் அடித்துக் கொண்டு அழுது புலம்பு கிறான். அவனுடைய துடிப்பைக் கண்ட பெரியவர் கண் கலங்கு கிறார்; ராசாத்தியின் சடலத்தைப் பார்த்தவுடன் சமுதாயம் அவளைக் கொலை செய்துவிட்டதாக அரற்றுகிறார்.

இந்த மாடசாமியின் பதினெட்டு நாள் வாழ்க்கைச் சரிதை யில் இரண்டு நாள் நிகழ்ச்சிகளே கதையில் காட்டப்படுகின்றன. நிறைமாத கர்ப்பிணியான மனைவி மூச்சுத் திணறலுடன் திண்ணையில் படுத்துப் படும்பாட்டைக் கண்டு பயப்படுகிறான். அவள் வலி தாங்காமல் தவிக்கிற தவிப்பைப் பார்த்துப் பார்த்து நெருப்பில் விழுந்த மெழுகாக உருகுகிறான். காட்டுக் கள்ளி யாகக் கவனிப்பாரற்றுக் கிடந்த அவனை மதித்துக் கழுத்து நீட்டிக் குடும்பக்காரன் என்ற பெயரை நிலைநாட்டி இழப்பிலும் இடர்ப்பாட்டிலும் மருந்தாக அமைந்து வாழ்வளித்தவளை நினைந்து நோகின்றான். அவள் படும் அவதியைப் பார்க்கை யில் அவனுக்கு அவனின் மீதே கோபம் வருகிறது. அதே நேரத்தில் ராசாத்தியின் கொழுப்புக்கு இது வேண்டுமென்று சோகத்துடன் சபிக்கிறான்.

(தொடரும்)

# தமிழ்ப்பொழில் உள்ளுறை அடங்கல்

துணர் : 62. விபவ ஆண்டு. மலர்கள் 1 — 12

தொகுப்பு : எஸ். செந்தில்குமார், எம் ஏ., எம். பில்.,


| எண் | ஆசிரியரும் கட்டுரையும் | மலர் | பக்கம் |
|---|---|---|---|
| 1. | **அரசு, வீ., டாக்டர்.** | | |
| | நாமும் நமது நாடக மரபும் | 3 | 122 |
| 2. | **ஆதித்தன், ஏ., டாக்டர்** | | |
| | கீழ்நிலையாக்கம் | 6, 7 | 287, 299 |
| 3. | **ஆறுமுகம், நா., டாக்டர்.** | | |
| | 1. இராமலிங்க வள்ளலாரும் திரு. நாராயணகுருவும் - ஆன்மீக வளர்ச்சி | 1 | 25 |
| | 2. புராணச் சார்பு கதைப்பாடல்களில் ஆண், பெண் உறவு நிலை | 4 | 146 |
| | 3. பகத்சிங்கும் இந்திய அரசியலும் | 7 | 301 |
| | 4. ஏபிரகாமும் சிறுதொண்டரும் | 9, 10 | 416, 449 |
| 4. | **இராசு, செ., புலவர். எம். ஏ.,** | | |
| | வானில் பறந்த வாழவந்திப் புலவன் | 2 | 55 |
| 5. | **இராஜேந்திரன், பி.** | | |
| | இஸ்லாமியத் தமிழில் 'ங்' | 7 | 312 |
| 6. | **இராஜேந்திரன், ம., டாக்டர்.** | | |
| | சி. வை தாமோதரம்பிள்ளையின் வாழ்வும் வாக்கும் | 10, 11 12 | 472, 491 544 |
| 7. | **இராமசாமி கோனார், புலவர்.** | | |
| | தாய் நாற்பது | 7, 8, 9, 10, | 331, 377 421, 469 |
| 8. | **ஈசுவரப்பிள்ளை, தா., முனைவர்.** | | |
| | 1. சிலம்பு காட்டும் அடிமைநிலை | 4 | 391 |





| எண் | ஆசிரியரும் கட்டுரையும் | மலர் | பக்கம் |
|---|---|---|---|
| | 2. நெறியின் நீங்கிய தீர்ப்புகள் சிலப்பதிகாரம் இரட்சணியசரிதம் ஒப்பு நோக்கு | 7 | 290 |
| | 3. தூது நூல்களில் உலா | 11 | 514 |
| 9. | **கண்ணிமை, கவிஞர்.** | | |
| | 1. மானம் இன்றேல் மரணம் | 4 | 188 |
| | 2. கலப்பு மணம் | 9 | 396 |
| 10. | **கணேசன், இரா., எம். ஏ., பி. எட்.,** | | |
| | திருவள்ளுவர் கூறும் மருதம் | 10 | 449 |
| 11. | **கருணாகரன், கி., டாக்டர். & ஜெயா, வ.** | | |
| | 1. பாரதி பார்வையால் பரவல் செய்தித் தொடர்பு | 2 | 58 |
| | 2. பாரதியின் உரைநடைத்திறனும் கருத்துப் புலப்பாடும் | 5 | 194 |
| 12. | **காளிதாசன், ஆறு., எம். ஓ. எல்., பி எட்.,** | | |
| | இலக்கிய வரலாற்றில் வில்லிபாரதம் பெறும் இடம் | 1 | 35 |
| 13. | **காவேரி ஆவுடையப்பன், எம். ஏ., எம். பில்.,** | | |
| | 1. பழந்தமிழ் இலக்கியத்தில் சட்டமும் நீதிமன்றமும் | 10 | 468 |
| | 2. இன்றைய சட்ட நுணுக்கங்களை வழி தடுத்தாட்கொண்ட புராணம் | 11 | 491 |
| 14. | **கிருஷ்ணமூர்த்தி, எஸ்., டாக்டர்.** | | |
| | 1. 'மான்' சாரியையா ? | 6 | 242 |
| | 2. ஒரு சீரடி சதுக்கம் | 10 | 430 |
| 15. | **குருநாதன், இரா., எம். ஏ., எம். பில்.,** | | |
| | 1. நூல் விமரிசனம் (உண்மை விளக்கம்) | 4 | 176 |
| | 2 பதுமையார் இலம்பகம் வரைக்கும் பாம்பு | 4, 5 | 19', 208 |
| | 3. புறம் காட்டும் ஆட்சி அறம் | 11 | 510 |
| | 4. 'தேடல்' | 12 | 560 |

| | | |
|---|---|---|
| **16. சண்முகம், என்.** | | |
| 1. சிதறிய சிலம்பு | 4, 2 | 48, 75 |
| 2. ஆதிரையும் கண்ணகியும் | 11 | 178 |
| **17. சண்முகவேலன், இரா., டாக்டர். எம்.ஏ., எம். பில், பி.எச்.டி.** | | |
| 1. கதையாசிரியர்களும் உத்திகளும் | 2, 4, 6 | 77, 180, 279 |
| 2. கோஷயின் சிறுகதைகளில், பாத்திரப் படைப்பு | 8 | 398 |
| 3. மேலாண்மை பொன்னுச் சாமியின் மாட சாமிகள் | 11, 11 | 518, 562 |
| **18. சுந்தரமூர்த்தி, இ., டாக்டர்.** | | |
| 1. பழந்தமிழ்ப் பதிப்புகள் | 3 | 98 |
| 2. அணி இலக்கண ஆராய்ச்சியில் எழும் சிக்கல்கள் | 9 | 402 |
| **19. செந்தில்குமார். எஸ்., எம். ஏ., எம். பில்.,** | | |
| 1. இந்திய விடுதலை இயக்கமும், தமிழகமும் | 1 | 5 |
| 2. யட்சகானம் - குறிப்பு | 6 | 277 |
| 3. நூல் அறிமுகம் (கனித்தொகை) | 10 | 458 |
| 4. நூல் அறிமுகம் ('தேடல்') | 10 | 459 |
| **20 செல்வபாண்டியன், பா.** | | |
| 1. நூல் மதிப்புரை (தேரோடும் வீதி) | 9 | 400 |
| **21. தங்கவேலு, பொ** | | |
| 1. எழுந்த களிறா ? ஏழு களிறுகளா ? | 8 | 357 |
| **22. பரதராஜ், ச. அ. ரெ.** | | |
| 1. எழுத்துக்கள் | 11 | 478 |
| **23 பன்னீர்செல்வம், துரை., எம். ஏ., எம். பில்.,** | | |
| 1. இலக்கிய இதழ்கள் ஓர் அறிமுகம் | 3, 4 | 134, 159 |
| **24. பாண்டுரங்கன், அ., டாக்டர்.** | | |
| 1. மானுடம் பாடிய கவி | 5, | 211 |
| **25. பாலசுந்தரம், ச., பேராசிரியர்.** | | |
| 1. உயிர்மெய் என்பது எத்தொகை மொழி | 10 | 439 |
| 2. ஐய வினாக்கள் | 12 | 538 |
| **26. பாலசுப்பிரமணியன், இரா,** | | |
| குலமரபுச் சின்னம் | 10 | 460 |
| **27. பிரகாசம், கா. மா. இல., புலவர்.** | | |
| எதிர்த்தே தமிழ்வளர்த்த க. நா சுப்ரமண்யம் | 9 | 382 |
| **28. பெருமாள், வ., டாக்டர்.** | | |
| கட்டுரை கலை | | |
| **29. பூரணசந்திரஜீவா,** | | |
| கஜபாகுவின் கால அடிப்படையில் சங்ககாலம் - கால ஆராய்ச்சி ஒரு மறு ஆய்வு | 2, 3 | 85, 108 |
| **30. மணிகண்டன், ராம., எம், ஏ.,** | | |
| அண்ணாவின் செவ்வாழையும், சங்கம் புழாவென் வாழைக் குலையும் | 11 | 486 |
| **31. மதிவாணன், பா., எம். ஏ., எம். பில்.,** | | |
| நூல் அறிமுகம் (தமிழ் நாவல் சில ஆய்வுகள்) | 2 | 49 |
| **32. மாதையன், பெ.** | | |
| 1. ஒரு பொருட் பலசொல் — அகராதிப் பிரிவு | 1 | 21 |
| 2. சங்ககாலச் சமுதாயச் சூழலில் தண்ணடை நல்கலும் பிள்ளையாட்டும் | 6 | 257 |
| **33. மீனாட்சி, சுந்தரம், ம.,** | | |
| 1. பழமொழிகளில் - தத்துவம் | 1 | 1 |
| 2. மொழிநடையில் அண்ணா | 3 | 116 |
| 3. பழமொழிகளில் உழவுத் தொழில் | 3 | 129 |

127044




| | | |
|---|---|---|
| 4. வாணிதாசன் கவிதைகளில் திராவிட இயக்கத் தாக்கம் | 5 | 221 |
| 5. இலக்கியங்களில் விடுகதைகள் | 6 | 275 |
| 6. முதல் உலகப்போருக்குப்பின் தமிழ் இலக்கிய நிலை | 7 | 317 |
| 7. பாரதிதாசன் கண்ட பெண்மை | 8 | 360 |
| 8. தமிழ்க்கவிதைகளில் பெண்மை | 11 | 501 |
| **34. விசாலாட்சி, ந., எம். ஏ., எம். பில்.,** | | |
| குறுந்தொகைப் பதிப்புகள் — சில பார்வைகள் | 5, 6 | 232, 248 |
| **35. வீராசாமி, தா. வே., எம். ஏ., பிஎச். டி.,** | | |
| சி. கே. சுப்பிரமணிய முதலியாரின் உரைத்திறன் | 12 | 526 |
| **36. வெள்ளை வாரணனார், க.** | | |
| அழுந்தூர் ஆர்ப்பு | 1 | 42 |
| **37. வேங்கடாசலம், கோ., பேராசிரியர்.** | | |
| 1. ஒப்படைக்கிளவி ஓர் ஒப்பியல் கண்ணோட்டம் | 6 | 253 |
| 2. கண்ணகியும் மெங்சியாங் நூவும் | 8, 9 | 365, 392 |
| **38. ஜெயராமன்,** | | |
| திருக்கோவையாருய் அகப்பொருள் மரபும் | 7 | 322 |
| **39. ஜெயராமன் துரை., எம். ஏ., எம். பில்.,** | | |
| நூல் அறிமுகம் (நாட்டுப் பாடல் ஓர் அறிமுகம் | 6 | 277 |
| **40. ஸ்டீபன், ஞா.** | | |
| பழமரபுக் கதைகளில் நிலவுடைமைச் சமூகச் சிக்கல்கள் | 5 | 225 |


## வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்வெட்டு கலைபற்றிய ஆய்வுக்கட்டுரைகள் வ[illegible]றும். கட்டுரைகள் 4-6 பக்க அளவில் அமைத[illegible]நடிதாயின் வகைப்படுத்தித் தருதல் வேண்டும்[illegible]தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெ[illegible]தல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்[illegible]ளே வெளியிடப்பெறும். இன்றியமையாத அ[illegible]ளே சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பியனுப்பப் பெறா ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக் கொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு


### கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| **யாழ்நூல்** — ஆசிரியர் விபுலானந்த அடிகள் | ரூ. | 50 | 00 |
| **கட்டுரைப் பொழில்** தமிழ்ச்சங்க மணிவிழா மலர் | ரூ. | 30 | 00 |
| **கட்டுரைப் பூங்கா** (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு) | ரூ. | 60 | 00 |
| **இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது** ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ் | ரூ. | 6 | 00 |
| கபிலர்—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் | ரூ. | 4 | 00 |
| நக்கீரர்—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் | ரூ. | 3 | 00 |
| மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு பா. வே. மாணிக்க நாயக்கர் | ரூ. | 2 | 00 |
| கவியரசு நினைவு மலர் | ரூ. | 1 | 00 |
| தமிழரசி குறவஞ்சி | ரூ. | 0 | 75 |

*பிற வெளியீடுகள்*

**தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை**

| | | | |
|---|---|---|---|
| எழுத்ததிகாரம் | ரூ. | 40 | 00 |
| சொல்லதிகாரம் | ரூ. | 45 | 00 |
| கரந்தைக் கோவை [ச. பாலசுந்தரம்] | ரூ. | 7 | 50 |
| கலைக் கூத்தன் கவிதைகள் | ரூ. | 4 | 50 |

விற்பனைக் கழிவு 20% உண்டு. அஞ்சற் செலவு தனி

தலைவர்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர் - 613 002.

Regd. No TN/TJ/24

நால்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு ரமணி எம்.ஏ. எம்/ அவர்கள்

இயக்குநர்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

எழும்பூர் சென்னை

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்.
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

| | | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|---|
| தனியிதழ் | ரூ. | 2 50 | 3 00 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. | 30 00 | 60 00 |
| வாழ் நாள் கட்டணம் | ரூ. | 250 00 | 600 00 |

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர் - 613 002.
அச்சிடுபவர் : திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1; மேலராஜ வீதி.
தஞ்சாவூர் - 613 009.